# தமிழரசு

1.1.1995 ரூ. 6



## எட்டாவது
## உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பிதழ்


பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



முத்தமிழே! புத்தமுதே! மொழிகளுக்குப் பேரரசி!
வித்தாகி எம்வாழ்வின் விளைவாகும் நற்றமிழே!

பொற்கால முதல்வர் புரட்சித் தலைவியவர்
தற்காலம் உனக்களிக்கும் தங்கமணி அரியணையாம்

எட்டாம் உலக மாநாட்டில் கோலோச்சு!
எத்திசையும் ஒளிவீசு! நீஎங்கள் உயிர்மூச்சு!

**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு: 2025

மார்கழித் திங்கள்: 17

மலர்:25 இதழ்:12, 13

16.12.1994 & 1.1.1995

விலை: ரூ. 6

# எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பிதழ்

# இந்த இதழில்...


தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவிடச் செய்வோம்! வாரீர்!
– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் . . . . . 3

பண்பாட்டுத் திரைக் காவியம் –உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தயாரிக்கப்பட்ட திரைப்படத்துக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் முன்னுரை . . . . . 5

உலகத் தமிழ் மாநாடுகள் (வரைபடங்கள்) . . . . . 7

தமிழ் வளர்த்த சான்றோர்களுக்குத் தலைநகரில் திருவுருவச் சிலைகள் . . . . . 12

மேயர் சிவராஜ் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை . . . . . 17

கவியரசு கண்ணதாசன் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை . . . . . 22

லேடி சிவசாமி ஐயர் பள்ளி விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை . . . . . 26

தஞ்சையின் தனிப் பெருமை . . . . . 31

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் . . . . . 34

தமிழ்க் கலாச்சாரம் வளர வேண்டும் . . . . . 38

கவிதைத் தொகுப்பு (வண்ணப் பக்கங்கள்) . . . . . 41

ஊனமுற்றோர் நலனுக்கான பன்னாட்டு மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை . . . . . 49

தனிநாயக அடிகள் . . . . . 55

சமய இலக்கியங்கள் . . . . . 57

திருக்குறள் வெளிப்படை . . . . . 62

இந்தியப் பல்கலைக் கழகங்களில் தமிழ் வளர்ச்சி . . . . . 65

உலகத் தமிழ் மாநாடுகள் (தொகுப்பு) . . . . . 68

இசையும் பாட்டும் . . . . . 73

குறள் காட்டும் வாழ்வு . . . . . 77

வழிகாட்டும் வள்ளுவன் . . . . . 81

உலகின் முதல் சமூகவியல் அறிஞர் தொல்காப்பியர் . . . . . 85

# தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவிடச் செய்வோம்! வாரீர்!

**தொ**ன்மையும் சிறப்பும் மிக்க உலக மொழிகளில், தனக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ள உயர்தனிச் செம்மொழி, அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழி ஆகும். காலத்தின் சோதனைகளையும் பாதிப்புகளையும் எதிர் கொண்டு, இன்றும் ஒரு செம்மொழியாக விளங் கிக் கொண்டிருக்கிறது தமிழ் மொழி.

தொன்மை சான்ற மொழி இன்றும் தன் சீரிளமைத் திறம் குன்றாமல் வாழும் செம்மொழி நம் செந்தமிழ் மொழி ஆகும்.

தமிழைப் பேணிக் காத்து, அம் மொழியை வளம் பெறச் செய்வது, நம் தலையாய கடமை என்ற நோக்கில்,

"தொண்டு செய்வோம் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே",

—என்ற உணர்வினை ஊட்டிடவும், "தேமதுரத் தமிழோசை, உலகமெல்லாம் பரவிட" வகை காண வும், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்த உங்கள் அரசு, தமிழக அரசு மேற் கொள்ளும் சீரிய முயற்சி தான் தஞ்சைத் தரணியில் வரும் ஜனவரி 1 முதல் 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள எட்டாம் உலகத் தமிழ் மாநாடு.

பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பெரு முயற்சியால் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு 1968-ஆம் ஆண்டில், சிங்காரச் சென்னையில், சிறப்புற நடந்தேறியது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால், சங்கம் கண்ட கூடல் மாநகர் மதுரையில், ஐந்தாம் உலகத்தமிழ்



மாநாடு 1981-இல் பாங்குற நடத்தப்பட்டது.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, 1995-ஆம் ஆண்டில், தஞ்சைத் தரணியில், உங்கள் அனைவரின் சார்பிலும், நடத்திடும் நல்வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

1995 ஜனவரித் திங்கள் முதல் நாள், உலகம் முழுவதும் வாழும் தமிழருக்கு எல்லாம் ஒரு பொன்னாள். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள், மாநாட்டைத் துவக்கி வைக்க, அண்டை நாடுகளின் அமைச்சர் பெருமக்களும், அறிஞர் பெருமக்களும், சிறப்பு அழைப்பாளர்களாய் வீற்றிருக்க, செந்தமிழ்த் தாய் மனம் குளிர, சிறப்புற மாநாடு துவங்கும். 21-ஆம் நூற்றாண்டிற்குத் தமிழ்ப் பண்பாட்டின் நன்கொடை (Contribution of Tamil Culture to the 21st Century) என்பதே, இம்மாநாட்டின் மையக் கருத்து ஆகும்.

ஆயிரக்கணக்கான தமிழ் வித்தகர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் மற்றும் ஆன்றோர்கள் கருத்தரங்கம், பட்டிமன்றம் ஆகியவற்றில் பங்கு கொண்டு தமிழ் அன்னைக்கு ஆராதனை செய்து தமிழ் மொழியின் பெருமையை உலகெலாம் அறியச் செய்வார்கள்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை சொற்களஞ்சியம் ஆகும் வண்ணம் 5 நாட்களும், கண்ணையும், கருத்தையும் கவரும் அரிய நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. தமிழ் இசை அரங்கமும், தமிழ் நாடகங்களும், அருந்தமிழ்ப் பழங்கலைகள், தொன்மையான கலை நிகழ்ச்சிகள், நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள், கவினுற நடைபெற உள்ளன.

தமிழ்ப் பண்பாட்டின் தனித் தன்மையை விளக்கும் வண்ணம் அழகியதோர் கண்காட்சியும் நடைபெற உள்ளது.


எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின், நிரந்தர நினைவுச் சின்னங்களாகத் தஞ்சை நகரின் நுழைவு வாயில்களில், ஏழு அலங்காரத் தோரண வாயில்கள், நினைவு மண்டபம், நினைவுக் கோபுரம், மாமன்னன் ராஜராஜனுக்கும், தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கும் சிலைகள், ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன.

நிறைவு நாள் விழாவில், ஜனவரித் திங்கள் 5-ஆம் நாள், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்கள், கலந்து கொள்ள உள்ளார்கள். பிரம்மாண்டமான கலை நிகழ்ச்சிகளும், வீர, தீர விளையாட்டுக்களும், பள்ளி மாணவிகள் பங்கு கொள்ளும் மனங்கவரும் கலை நிகழ்ச்சிகளும், நடைபெற உள்ளன.

தன்னிகரில்லாத் தமிழக மக்கள் வாழ்வு சிறக்க, நாம் நடத்தும் இந்த முத்தமிழ் விழாவில் கலந்து கொள்ள, அலை கடல் எனத் திரண்டு வாரீர் என்று, உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன்.

தேமதுரத் தமிழோசை, உலகமெல்லாம் பரவிடச் செய்வோம், வாரீர்! மாநாட்டைச் சிறப்படையச் செய்வீர்!

வாழ்க செந்தமிழ்! வளர்க அதன் புகழ்!,
நன்றி, வணக்கம்.



# பண்பாட்டுத் திரைக்காவியம்

—மாண்புமிகு முதல்வர்



"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
முன்தோன்றி மூத்த குடி"

—என்று தமிழ்ப் பெருங்குடியையும்,

"இவள் என்று பிறந்தனள் என்றறியாத
இயல்பினள்"

—என்று, நாம் அனுதினமும் ஆராதிக்கும் அன்னைத் தமிழை, மொழி ஆய்ந்த அறிஞர்களும், மொழிநூல் வல்லுநர்களும், போற்றிப் பாராட்டுகின்றனர்.

வாழ்க்கை முறைக்கே இலக்கணம் கண்டவர்கள், நம் முன்னோர்கள். வள்ளுவரால் வான்புகழ் நமக்கு உண்டு! வரலாற்றுப் பெருமையும் நமக்கு உண்டு!

வண்டமிழ் மொழியால் வையகத்தில் வாழும் மாந்தர் அனைவருக்கும் வாய்த்திடாத பெருமைகள் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு என்றென்றும் உண்டு.

தொன்மை சான்ற மொழி, இன்றும் தன் சீரிளமைத் திறம், குன்றாமல் வாழும் செம்மொழி, நம் செந்தமிழ் மொழி ஆகும்.

தமிழைப் பேணிக் காத்து, அம்மொழியை வளம் பெறச் செய்வது நம் தலையாய கடமை என்ற நோக்கில்,

"தொண்டு செய்வோம் தமிழுக்கு,
துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே",

என்ற உணர்வினை ஊட்டிடவும், "தேமதுரத் தமிழோசை, உலகமெல்லாம் பரவிட" வகை காணவும், நாம் மேற்கொள்ளும் முயற்சிதான், இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாடு.

பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பெருமுயற்சியால் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு 1968-ஆம் ஆண்டில், சிங்காரச் சென்னையில், சிறப்புற நடந்தேறியது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால், சங்கம் கண்ட கூடல் மாநகர் மதுரையில், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு 1981-இல் பாங்குற நடத்தப்பட்டது.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, நஞ்சை கொஞ்சும் தஞ்சைத் தரணியில் உங்கள்

அனைவரின் சார்பில், 1995ஆம் ஆண்டில் நடத்திடும் நல்வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்தப் புனிதப் பணியின் ஒரு பகுதியாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டிடும் பைந்தமிழ்மக்கள்வாழ்க்கை நெறிமுறைகளையும் பண்பாட்டுப் பெருமைகளையும் விளக்கிடும் திரைக் காவியத்தை உங்களுக்கு அளிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இது திரைப்படம் மட்டுமல்ல; உலக மாந்தருக்கு வாழும் நெறிமுறை பற்றிய ஒரு பாடமும் ஆகும்.

தான் ஈன்று புறந்தந்த அருமை மைந்தனைத் தாயகம் காக்க– போர்க்களத்திற்கு உவகையோடு அனுப்பி வைத்த புறநானூற்றுத் தாயின் வீரம்;

முதியவன் உருவில் வந்து செங்கோல் வழுவாமல் கரிகால் சோழன் வழங்கிய நீதி !


முரசுக் கட்டிலில் உறங்கிய முதிர்ந்த புலவனுக்கு வெண்சாமரம் வீசி மகிழ்ந்த காவலனின் மாண்பு !

மக்களுக்கு மட்டுமல்லாது, சிற்றுயிர்களுக்கும் கருணை காட்டிய அரசனின் அருள் நெஞ்சம் !

தீந்தமிழ்ப் பாடல்களைக் கேட்பதற்காக, தீயிலே வெந்து மாய்ந்த நந்திவர்ம பல்லவனின் செந்தமிழ்ப் பக்தி !

அருந்தமிழ்ச் சுவடிகளை அழியாமல் மீட்டுத் தந்த இராஜராஜனின் அரசியல் மாட்சி

ஆகியவற்றைத் தொகுத்து ஒரு இலக்கியப் பெட்டகமாகப் படைக்கப்பட்டுள்ள திரை ஓவியம்




தான் இது.

தமிழ் இலக்கியக் கடலில் உள்ள ஆயிரம் கோடி முத்துக்களில் ஒரு சில நல்முத்துக்களை மட்டுமே இங்கே திரைப்படமாக்கி, உங்களுக்கு வழங்கியுள்ளோம். நற்றமிழர் வாழ்க்கை முறையை, உலகிற்குப் பறைசாற்றும் வகையில், அமைக்கப்பட்டுள்ள இத் திரைக்காவியம் தமிழ் நெஞ்சங்களில், மேலும் இனிமையைச் சேர்க்கும் என்று நம்புகிறேன்.


வாழ்க செந்தமிழ் ! வாழிய நற்றமிழ் ! வணக்கம்.

(எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்காகத் தயாரிக்கப்பட்ட திரைப்படத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முன்னுரை)




# உலகத் தமிழ் மாநாடுகள்

| மாநாடு | ஆண்டு | தேதி | நகரம் | நாடு | தலைமை |
|---|---|---|---|---|---|
| முதலாம் | 1966 | 16-23, ஏப்ரல் | கோலாலம்பூர் | மலேசியா | திரு வி.தி.சம்பந்தன் அவர்கள் |
| இரண்டாம் | 1968 | 3-10, ஜனவரி | சென்னை | இந்தியா | பேரறிஞர் அண்ணா அவர்கள் |
| மூன்றாம் | 1970 | 15-18, ஜூலை | பாரிஸ் | பிரான்சு | பேராசிரியர் ஜீன்.ஃபில்லியோசா அவர்கள் |
| நான்காம் | 1974 | 3-9, ஜனவரி | யாழ்ப்பாணம் | இலங்கை | பேராசிரியர் எஸ்.வித்தியானந்தன் அவர்கள் |
| ஐந்தாம் | 1981 | 4-10, ஜனவரி | மதுரை | இந்தியா | டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் |
| ஆறாம் | 1987 | 15-19, நவம்பர் | கோலாலம்பூர் | மலேசியா | திரு. டத்தோ ச.சாமிவேலு அவர்கள் |
| ஏழாம் | 1989 | 1-8, டிசம்பர் | போர்ட்லூயி | மொரிசியஸ் | திரு. ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் |
| எட்டாம் | **1995** | **1-5, ஜனவரி** | **தஞ்சாவூர்** | **இந்தியா** | **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர்ஜெ.ஜெயலலிதா அவர்கள்** |



# உலக நாடுகளில் உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்ற இடங்கள்



## முதல் உலகத் தமிழ் மாநாடு - கோலாலம்பூர், 16-23 ஏப்ரல் 1966
## ஆறாம் உலகத் தமிழ் மாநாடு - கோலாலம்பூர், 15-19 நவம்பர் 1987

### முதலாம் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

☆ அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 7.1.1964-இல், புது தில்லியில் அமைக்கப்பட்டது.

☆ அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, அவ்வமைப்பின் மூலம்தான் கோலாலம்பூரில நடத்தப்பெற்றது.


☆ மாநாட்டை ஏப்பிரல் 17, 1966 அன்று மலாயப் பிரதமர் துங்கு அப்துல் ரஃமான் தொடங்கிவைத்தார்.

### ஆறாம் உலகத் தமிழ் மாநாடு

☆ ஆறாம் உலகத் தமிழ் மாநாடு (இரண்டாவது முறையாக) கோலாலம் பூரில் நடைபெற்றது.

☆ இந்த மாநாட்டை மலேசியப் பிரதமர் டாக்டர் மகாதிர் முகமது தொடங்கி' வைத்தார்.

☆ மாண்புமிகு மலேசிய அமைச்சர் திரு டத்தோ ச. சாமிவேலு தலைமை ஏற்றார்.




## இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு - சென்னை, 3-10 ஜனவரி 1968
## ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு - மதுரை, 4-10 ஜனவரி 1981

### இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு

☆ இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, சென்னை மாநகரில், 3.1.1968 முதல் 10.1.1968 வரையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

☆ முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அந்நாளைய இந்தியக் குடியரசுத் தலைவர், திரு ஜாகீர் உசேன் அவர்கள் இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

☆ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னையில் அமைக்க இந்த மாநாடு கேட்டுக்கொண்டது.

☆ அரசு மூலம் சென்னை, அண்ணா மலை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகங்களுக்குத் திருக்குறள் ஆராய்ச் சிக்கெனத் தலா ரூ.3 இலட்சம் வழங்கப்பட்டது.


### ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு

☆ இம்மாநாடு 4-1-1981 முதல் 10-1-1981-ஆம் ஆண்டு வரை நடைபெற்றது.

☆ தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

☆ மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கப்படும் என முதலமைச்சர் அறிவித்தார்.

☆ மாநாட்டை முதலமைச்சர் எம்ஜி:ஆர் தலைமையில். ஆளுநர் திரு சாதிக் அலி தொடங்கிவைத்தார்.



# மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு - பாரிஸ், 15-18 ஜூலை 1970

## மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு

☆ மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு, பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிசில் 1970-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை பாங்குற நடைபெற்றது.

☆ டாக்டர் பிலியோசா, டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா ஆகியோர் முன்னின்று நடத்திய இந்த மாநாட்டின் நடவடிக் கைகள் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மூன்று மொழிகளிலும் அமைந் தன.

☆ மாநாட்டின் நிறைவு விழாவிற்குத் தவத்திரு தனிநாயக அடிகள் தலைமை தாங்கினார்.




# நான்காம் உலகத் தமிழ் மாநாடு - யாழ்ப்பாணம், 3-9 ஜனவரி 1974

## நான்காம் உலகத் தமிழ் மாநாடு

☆ நான்காவது உலகத் தமிழ் மாநாடு இலங்கையில் நடத்தப்படுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. கொழும்பில் நடத்தப்படவேண்டும் என்றது அரசு. யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவெடுத் தார்கள் பெரும்பான்மைத் தமிழர்கள். இதனால், எவ்வகையிலும் விசா உட்பட அரசு உதவி மறுக்கப்பட்டது.


☆ 3.1.1974 முதல் 9.1.74 வரை யாழ்ப் பாணத்தில் இம்மாநாடு நடைபெற்றது.

☆ தொடக்க விழாவில், அரசு சார்பில் யாரும் பங்கு பெறவில்லை. தவத்திரு தனிநாயக அடிகளே இம்மாநாட்டைத் தொடங்கிவைத்தார்.

☆ மாநாட்டையொட்டி ஆறுமுக நாவலர், விபுலாநந்த அடிகள், சுவாமிநல்லூர் ஞானப்பிரகாசர் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன.

☆ மாநாடு வெற்றிபெறப் பேராசிரியர் கா.பொ. இரத்தினம் அவர்களும் துணை நின்றார்.

☆ யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்ட பத்தில் நடந்த இம் மாநாட்டிற்குப் பல சிக்கல்களால் தமிழகத்திலிருந்து அதிக மானோர் செல்ல இயலாத நிலை இருந்தது.



# ஏழாம் உலகத் தமிழ் மாநாடு - மொரிஷியஸ், 1-8 டிசம்பர் 1989


## ஏழாம் உலகத் தமிழ் மாநாடு

☆ ஏழாம் உலகத் தமிழ் மாநாடு 1989-ஆம் ஆண்டு திசம்பர் 4ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை மொரிஷியஸ் தீவில் உள்ள போர்ட் லூயியில் நடைபெற்றது.


☆ இந்திய அரசு, இம்மாநாட்டுக்கு ஒரு கோடி ரூபாய் நன்கொடை அளித்திருந்தது.

☆ மொரிஷியஸ் அதிபர் திரு வீராசாமி ரங்குடு இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்தார். அந்நாட்டுப் பிரதமர் அனுரூத் ஜகன்னாத் சிறப்புரை ஆற்றினார். மாநாட்டின் நிறைவுநாள் விழாவில் மொரிஷியஸின் கல்வி கலாச்சாரத்துறை அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன் கலந்து கொண்டார்.

☆ அப்போது அந்நாட்டுச் சிறப்புத் தூதராக இருந்த நா. மகாலிங்கம், டாக்டர் ஔவை நடராசன், புலவர் இளஞ்செழியன் உட்பட நூறுபேர் தமிழ்நாட்டிலிருந்து அம்மாநாட்டுக்குச் சென்றிருந்தனர்.




## எட்டாம் உலகத் தமிழ் மாநாடு, தஞ்சாவூர் - 1995 1-5 ஜனவரி



விண்ணைத் தொடும் பெரிய கோயில் கோபுரம் - தமிழர் வரலாறு கூறும் புராதனக் கலைச் சின்னங்கள் கொண்ட தஞ்சைத் தரணியில், ஜனவரித் திங்கள் 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில், எட்டாவது உலகத் தமிழ் மாநாடு சிறப்புடன் நடைபெறுகிறது.



# தமிழ் வளர்த்த சான்றோர்களுக்குத்







**திருவள்ளுவர்**

உலகப் பொதுமறையாம் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் சிந்தைக்கும் செவிக்கும் இனியது. சாதி சமய நிற வேறுபாடின்றி யாவர்க்கும் உரியது. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களை உடையது. 1330 குறள் வெண்பாக்கள் கொண்டது. நீதி நூல்கள் அனைத்திற்கும் முற்பட்டது.

இந்நூல் இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

**ஔவையார்**

ஔவையார் என்னும் பெயருடைய புலவர்கள் பலர் இருந்ததாகக் கூறப்படுகிறது.

அதியமான் கொடுத்த நெல்லிக்கனியை உண்டு இவ்வுலகில் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார் ஔவையார்.

அவரால் இயற்றப்பட்டதே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம் முதலிய நூல்களாகும்.

அவர் பாடியதாகத் தனிப் பாடல்களும் வழங்குகின்றன. ஔவையாருடைய சிறப்பை நன்குணர்ந்த தமிழ் மக்கள் நெடுங்காலத்து முன்னரே சிலைகள் அமைத்து வழிபாடுகள் செய்துள்ளனர்.

**கம்பர்**

**சோ**ழவள நாட்டில் திருவழுந்தூரில் பிறந்தவர் கம்பர். பன்னீராயிரம் தமிழ்ப் பாடல்கள் கொண்ட இராமாயணத்தை இனிய தமிழில் எழுதிப் புகழ் குவித்தவர் இவர்.

தமது இராமாயணக் காப்பியத்தின் மூலம் சில திருக்குறள் கருத்துக்களையும் வலியுறுத்தியிருக்கிறார் கம்பர், பிறனில் விழையாமை குறித்து அதன் மூலம் பெரிதும் வலியுறுத்தியுள்ளார். ஏறத்தாழ ஆயிரத் திருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து, இறவாப் புகழைத் தமிழ் மூலம் ஈட்டினார். கவிச்சக்கரவர்த்தி எனப் பெருமை பெற்றார்.

# தலைநகரில் திருவுருவச் சிலைகள்:



**சுப்பிரமணிய பாரதியார்**

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் புதுமையான கவிகள் பாடித் தமிழர் உள்ளத்தில் என்றும் அழியாத இடம் பெற்றவர். தமிழ் மொழியில் நிறைந்தபற்றுதலால் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடியுள்ளார். 'உலகமெலாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்' எனவும் பாடியுள்ளார். அது உண்மையாகிவிட்டது. உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்று வருகின்றன.



**பாரதிதாசன்**

கனகசுப்புரத்தினம் என்ற இயற்பெயருடையவர் பாரதிதாசன். பாரதியாரின், விடுதலைப் பாடல்கள் அவருடைய உள்ளத்தில் புரட்சிக் கனலை அள்ளி வீசியது. தாமும் பாரதியாருடைய பாடல்களைப் போல் பாடத் தொடங்கினார். இருவருக்கும் நட்பு உண்டாகியது. நாளடைவில் சுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறினார்; புரட்சிக் கவிஞரும் ஆனார்.

தம் அரிய பாடல்களினால் நம் மக்களிடையே விழிப்பு உணர்ச்சி உண்டாக்கினார்.



**கால்டுவெல்**

அயர்லாந்து நாட்டில் பிறந்த இவர் ஒரு தமிழறிஞர். இவரது முழுப்பெயர் ராபர்ட் கால்டுவெல்.

சென்னையிலிருக்கும் போது தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டார்.

தென்னிந்திய மொழிகளை ஆராய்ச்சி செய்து 'ஒப்பிலக்கணம்' என்னும் அரிய நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார்.

இவரே "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை வகுத்த ஆங்கிலேயர்" ஆவார்.

1968ஆம் ஆண்டு தலைநகர் சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கு நிறுவப்பட்ட திருவுருவச் சிலைகள்







**வீரமா முனிவர்**

தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞரான வீரமா முனிவர், ஒன்பது மொழிகளில் தேர்ச்சி யடைந்திருந்தார். பரமார்த்த குருவின் கதையை எழுதிய வரும், தேம்பாவணி எழுதிய வரும் இவரே.

திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த் தார். மேனாட்டு முறையைப் பின்பற்றித் தமிழில் 'சதுரக ராதி'யைத் தொகுத்தார். தமிழ் எழுத்துக்களில் சில திருத்தங் கள் செய்தார். அயல்நாட்டி லிருந்து வந்து தமிழ்த் தொண்டு செய்தவர்களில் இவரே முதன்மையானவர்.

**போப் ஐயர்**

அயல்நாட்டிலிருந்து வந்து, தமிழ்ப் புலவராகிவிட்டவர் போப் ஐயர். 1838-ஆம் ஆண்டி லேயே தமிழும் வடமொழியும் கற்கத் தொடங்கினார்.

திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலிய நூல் களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அவற்றின் சிறப் பையும் தமிழர்களின் பண் பாட்டையும் அயல்நாட்டினர் தெரிந்துகொள்ளும்படி செய் தார்.

ஆக்ஸ்போர்டில் உள்ள அவர் கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' என்று எழுதப் பட்டுள்ளது.

**வ.உ. சிதம்பரனார்**

'கப்பலோட்டிய தமிழன்' என்று தமிழர்கள் பாராட்டும் வ.உ. சிதம்பரனார், இளமைக் கல்வியை முடித்துத் திரிசிர புரம் கல்லூரியில் சட்டக் கல்வி பயின்று வழக்கறிஞ ரானார். தமிழ் மொழியில் நல்ல புலமை பெற்றவர்.

விடுதலைப் போரில் ஈடு பட்டுச் சிறை சென்று துன்பப் பட்டார் நாட்டுக்கான அனைத் தையும் இழந்து துன்பப்பட்ட வர் · கப்பலோட்டி , ஆங்கிலே யரைக் கதிகலங்க வைத்தவர். அவர்களுக்கெதிராகத் தாமும் இரண்டு கப்பல்கள் வாங்கி ஓட்டிக் காட்டியவர்.

# தமிழ்க் கலைகள்



**க**லை! மனித மனத்தின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடு! உள்ளத்து உணர்வுகளின் பிரதி பலிப்பு! தான் வாழ்வதோடு, தன்னைப் படைத்த வனையும் வாழவைக்கும் வல்லமையுடையது கலை! அது காலத்தால் அழியாதது! கால, தேச வர்த்த மானங்களைக் கடந்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும், நம் ஆன்மாவோடு உறவாடும் ஆற்றல் பெற்றது.

உலகத்தில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு, நம் தாய் மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஏனெனில் தமிழ் மொழி மட்டும்தான் இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஆயிரக்கணக்கான இயற்றமிழ் விற்பன்னர்கள், இசைத்தமிழ் வேந் தர்கள். நாடகத் தமிழ் வல்லுநர்கள் ஆகியோரின் கூட்டுப் படைப்பாக முத்தமிழ் விளங்குகிறது. இதுவே, நம் அன்னைத் தமிழின் தனிச் சிறப்பாக, தரணி எல்லாம் போற்றப்படுகிறது.

தமிழ் வளர வேண்டுமென்றால், முத்தமிழ்க் கலைகள் உயர வேண்டுமென்றால், மலர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும், கலை மேதைகளும் போற்றப் படவேண்டும். போற்றுதலும், போற்றப்படுதலும் தான், மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் காரண மான, இரு முக்கிய உந்து சக்திகள் என்பது உலகியல் உண்மை.

**- மாண்புமிகு முதல்வர்**



**கண்ணகி**

கண்ணகியின் கையில் இருப்பது காலில் போடும் சிலம்பு. சிலம்பின் கதையே ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான 'சிலப்பதிகாரம்'. இளங்கோவடிகள் எழுதியது இந்நூல்.

சேரன் செங்குட்டுவன் என்ற அரசன் கண்ணகியின் பெரு மையை உணர்ந்து அவளுக் குச் சிலை அமைத்துச் சிறப் புகள் செய்தான்; பின்னர் இலங் கையிலும் வேறுபல இடங் களிலும் சிலைகள் நிறுவப் பட்டன. கண்ணகியின் கதை மிகவும் உயர்ந்தது.



# தஞ்சை சிவகங்கைப் பூங்காவில் கண்டெடுக்கப்பட்ட எட்டாம் நூற்றாண்டு அற்புதக் கற்சிலை!

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறவுள்ளதையொட்டி, தஞ்சாவூர் சிவகங்கைப் பூங்காவில் பல்வேறு விரிவாக்கம் மற்றும் அழகுபடுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பூங்காவில் உள்ள பெத்தன்னன் கலையரங்கம் அருகில் இருந்த தேவையற்ற மண் நீக்கப்படும் பொழுது அற்புதக் கற்சிலை ஒன்று கிடைத்துள்ளது.

இச்சிற்பம் 3 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட கருப்பு ராசிக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. மூன்று உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மையத்தில் உயிர்ப்புடன் அமைந்துள்ள உருவம் ஜேஷ்ட்டா தேவி என்று சிற்பக் கலை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திருவுருவத்தின் தோள் வரை நீண்ட காதுகளில் குண்டலமும், கழுத்தில் ஆரமும் கண்டிகையும், மார்பில் கச்சையும் உதரப்பந்தங்களும், இடையில் மணி மேகலையும், வரிப்பட்டாடையும், கால்களில் தண்டையும், வலக்கையில் தாமரைமொட்டும் ஏந்தி அருள் பாலிக்கும் நிலையிலும், இடக்கை ஊறுகஸ்தமும் கொண்டு விளங்குகின்றது. இத்தேவியின் வலதுபுறம் அதன் வாகனமாகிய 'காந்தபம்' அமர்ந்த கோலத்தில் இடம் பெற்றுள்ளது. இடது புறம் தேவியின் சேடிப்பெண் அமர்ந்திருக்கிறாள். இச்சிற்பம் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இந்த அற்புதக்கற்சிலையை மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரிடம் ஒப்படைக்க நகராட்சித் தனி அலுவலர் திரு கே. பாலசந்திரன் நடவடிக்கை எடுத்து வருகிறார்.



# ஆதிதிராவிட மக்கள் நலம் பெற அடுக்கடுக்கான அரசுத் திட்டங்கள்!

## சென்னையில் நடைபெற்ற மேயர் சிவராஜ் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

**ஆ**திதிராவிடப் பெருங்குடி மக்களின், தன்மானமிக்கத் தலைவராக விளங்கிய பெரியவர், மேயர் சிவராஜ் அவர்களின் திருவுருவச் சிலையை வட சென்னையின், ஒரு முக்கியப் பகுதியில் திறந்து வைத்து உற்சாகத்தோடு குழுமியிருக்கின்ற, உங்கள் அனைவரையும் காண்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பெரியவர் சிவராஜ் அவர்கள், அன்று சமுதாயத்தில் நிலவியிருந்த, ஜாதிக் கொடுமையையும், தீண்டாமை என்ற கொடிய பழக்கத்தையும் எதிர்த்து நலிந்த மக்களின் நலன் காக்க, அரும்பாடுபட்டவர் என்பதை அறியும் போது, நம் மனம் மகிழ்ச்சியில் ஆழ்கின்றது.

சமுதாய வேறுபாடின்மை, சமத்துவம், சகோதரத்துவம், மற்றும் பகுத்தறிவு போன்ற புரட்சிகரமான முற்போக்குக் கொள்கைகளைக் கொண்டு விளங்கிய நீதிக் கட்சியுடன், தன்னை இணைத்துக் கொண்டு, பெரியவர் சிவராஜ் அவர்களும், அவரது துணைவியார் திருமதி மீனாம்பாள் அவர்களும், நலிவடைந்த, தாழ்த்தப்பட்ட மக்களின் துயர் துடைக்க ஆற்றிய சமுதாயப் பணிகள், இன்றளவும், நம்மால் போற்றிப் பாராட்டத் தக்கவை ஆகும். எந்த நீதிக் கட்சியின் முற்போக்குச் சிந்தனைகள், இன்று ஆல விருட்சமாக வளர்ந்து

மாபெரும் மக்கள் இயக்கமாக மிளிர்ந்து கொண்டிருக்கிறதோ அந்த இயக்கத்தை நடத்திச் செல்கின்ற மாபெரும் பொறுப்பில் இருக்கின்ற, எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியை, வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது.

பெரியவர் சிவராஜ் அவர்களுக்குச் சிலை வைத்து, ஆதி திராவிட மக்களைப் பெருமைப் படுத்துவது என்ற முடிவை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, பொறுப்பேற்றவுடன் மேற்கொண்டது. 1991-ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில், நான் பெரியவர் சிவராஜ் அவர்களின் சிலை வைக்கப்படும் என்று அறிவித்தேன். அந்த அறிவிப்பு இன்று நடைமுறைப்படுத்தப் பட்டு, இங்கே பெரியவர் சிவராஜ் அவர்களின் திருவுருவச் சிலை, கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

நாடு சுதந்திரம் அடைவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக, பொருளாதாரக் கல்வி நிலையில், மேம்பாடு அடையச் செய்ய வேண்டும், என்கின்ற உந்துதலின் காரணமாகப் பெரியவர் சிவராஜ் அவர்கள், மேற்கொண்ட பெரு முயற்சிகளும் ஆற்றிய அரும் பணிகளும், உண்மையில் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன.

அவர் எல்லாத் துறைகளிலும், தனது தனி முத்திரையைப் பதித்து விட்டுச் சென்றிருக்கிறார். சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில், பேராசிரியராகப் பணியாற்றிய சட்ட மேதை, திரு. சிவராஜ் அவர்கள், பின்னர் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். 1946-ஆம் ஆண்டு, சென்னை மாநகரத்தின், ஆதிதிராவிடர் சமுதாயத்தின், முதல் மாநகரத் தந்தையாக, மேயராக விளங்கினார். நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினராகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரில்லாத் தலைவர், டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களின் மறைவிற்குப் பின்னர், இந்தியக் குடியரசுக் கட்சியின் தலைவர்ராகவும் விளங்கினார், பெரியவர் சிவராஜ் அவர்கள்.

1946-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சியின் நகரத் தந்தையாக திரு. சிவராஜ் அவர்கள் விளங்கியபோது, சென்னை மாநகரில், பூரண மது விலக்கை, தீவிரமாக அமல்படுத்தி, மது அரக்கனின் பிடியிலிருந்து, ஏழை எளிய மக்களை மீட்பதற்கு, அரும்பாடுபட்டுள்ளார் என்ற செய்தி, பலருக்குத் தெரியாது.

கட்டாயக் கல்வித் திட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கு, மாநகராட்சிப் பள்ளிகளில், எல்லா இனத்தைச் சேர்ந்தவர்களும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களும், தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்களா? என்பதைக் கண்காணிக்க, நான்கு தனி அலுவலர்களை நியமித்து, மக்கள் கல்விக் கண்ணைத் திறந்து வைத்து, அவர்களது அறிவொளியைப் பெருக்குவதற்குத் தனி ஆர்வத்தைப் பெரியவர் சிவராஜ் அவர்கள் காட்டினார்கள் என்பதை அறியும்போது மனம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறது.

அத்தகைய ஒரு அறிவாற்றல் வாய்ந்த, செயல் திறன் மிக்க, தன்னலமற்ற, தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பெரும் தலைவராய்த் திகழ்ந்த, ஒரு தலைவரின் திருவுருவச் சிலையை, சென்னை மாநகரத்தின், முக்கியமான பகுதியில் திறந்து வைத்ததில், நான் அளவிட முடியாத மகிழ்ச்சியை அடைகின்றேன்.

பொது வாழ்க்கையில், நான் ஈடுபட்ட பின்பு, ஆதிதிராவிட, மற்றும் பழங்குடியினப் பெரு மக்களின், வாழ்க்கை மேம்பாட்டிற்கு, என்னென்ன தேவை என்பதைத் துல்லியமாக ஆராயத் தொடங்கினேன். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்குப் பயணம் செய்த போது, அங்கு வாழும் இந்த மக்களின், வாழ்க்கை முறையையும், குறிப்பாக, ஆதிதிராவிட பெண்மணிகளின், இன்னல்கள் நிறைந்த வாழ்க்கையையும், நான் புரிந்து கொண்டேன்.

நலிவடைந்த அந்த மக்களின் நலவாழ்விற்கு, வழிகோல வேண்

## ஒருமைப்பாடு ஏற்பட...

**தமிழ் மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலுங்கூடப் பல அறிஞர் இருந்தனர் - இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறிய முடிந்தது. இந்தியாவில் ஒருமைப்பாடு ஏற்படவேண்டுமானால் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவரும் தமிழ் உணர்தல் வேண்டும்.**

**–அண்ணல் காந்தியடிகள்.**

டும் என்ற எண்ணம், என் மனதை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த சகோதரிகள், அனுபவித்து வரும், பல்வேறு சமுதாயக் கொடுமைகளிலிருந்து, அவர்களைக் காப்பாற்றி ஏற்றமிகு வாழ்க்கையை அவர்களுக்கு, ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற உள்ளுணர்வு, எனக்கு ஏற்பட்டது. அன்பிற்குரிய அந்தச் சகோதர சகோதரிகள், நான் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தபோது, என் மீது காட்டிய பாசத்திற்கு, நான் என்றென்றும் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன். அந்த உணர்வுதான் 1991-இல், தமிழக மக்களின் ஆதரவுடன், நாங்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறிய பின்பு, ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, 10 அம்சத் திட்டமாக உருவெடுத்தது.

ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியின மக்களைப் பாதுகாக்கும் "பாதுகாப்பு அரணாக" இன்று எங்கள் அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது. சோகத்தின் பிம்பங்களாக உள்ள மக்கள், மகிழ்ச்சி பொங்கும் மனிதர்களாக வாழ வேண்டும், என்ற உந்துதலின் காரணமாக, ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்கள், வாழ்க்கை மேம்பாட்டுத் திட்டங்களின் செயல்பாட்டினைத் தனிக் கவனம் செலுத்தி, நானே கண்காணித்து வருகிறேன்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, அவர்கள் வாழும் குடியிருப்புகளில், குடிநீர், மின் வசதி, இணைப்புச் சாலை, மயான வசதி, மயானச் சாலை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க, 125 கோடி ரூபாய் செலவில், ஒரு திட்டம் தற்போது, மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமுதாயததில், உள்ள மேடு

'நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு
எழில்ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும்
இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து
சிதையாஉன்
சீரிள்மைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே.

**—மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை.**



பள்ளங்களை அகற்றி, தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார, அரசியல், சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது என்பது, எங்கள் மாபெரும் இயக்கத்தில், ஒன்றி இருக்கின்ற, ஒரு அடிப்படை உணர்வு ஆகும். இந்த அடிப்படை உணர்வு, இன்று வந்ததல்ல; நேற்று முளைத்தது அல்ல; திராவிட இயக்கத்தின் ஆரம்பக் காலத்திலிருந்தே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர், நமது நெஞ்சங்களில் வளர்த்துவிட்ட, அழுத்தமான உணர்வு ஆகும்.

அகில இந்திய அளவில், பல துறைகளில், முன்னணியில் விளங்குகின்ற நாம், ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான, திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், முன்னணியில் உள்ளோம். மற்ற மாநிலங்களில் வாழ்கின்ற, ஆதிதிராவிடப் பழங்குடி மக்களை விட, தமிழகத்தில் உள்ளவர்கள், வளமானதொரு வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்கின்ற, ஒரு உன்னதமான சூழ்நிலையை ஏற்படுத்துவதே, உங்கள் அன்புச் சகோதரியின் குறிக்கோள்.

அந்த உன்னத சூழ்நிலையை அடைய, ஆதிதிராவிடப் பெரு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக, மேலும் பல புதிய திட்டங்களை, இந்த நல்ல நாளில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

1. ஒரு சமுதாயம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால், அந்தச் சமுதாயத்தின் பெண்களுக்குக் கல்வி அறிவை ஊட்டி வளர்க்க வேண்டும். ஆதிதிராவிடப் பெண் குழந்தைகள் அனைவரும், குறைந்த பட்சத் தொடக்கக் கல்வியாவது, பெற வேண்டும் என்பதற்காக மூன்றாம் வகுப்பு முதல், ஐந்தாம் வகுப்பு வரை பயிலும், ஆதிதிராவிடப் பெண் குழந்தைகளுக்கு, ஆண்டுதோறும் 500 ரூபாய் வழங்கும் திட்டம் மேலும் புதிதாக ஐந்து மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். ஏற்கெனவே தர்மபுரி, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், தென்னார்க்காடு வள்ளலார், திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் காமராஜர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டம், இன்று முதல் மேலும் புதிதாக ஐந்து மாவட்டங்களில், அதாவது, செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்., வடார்க்காடு அம்பேத்கர், சேலம், திருச்சிராப்பள்ளி, மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத், ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இதனால் கூடுதலாக மேலும் 30,000 ஆதிதிராவிடப்

# தலைசிறந்த இலக்கிய ஏடு!

தமிழின் தலைசிறந்த இலக்கிய ஏடு. உலகின் ஒப்புயர்வற்ற தனி முதல் ஒழுக்க நூல் என்ற புகழைத் திருக்குறள் பெற்றுள்ளது. அது தலைசிறந்த பொருளியல் நூல். தலைசிறந்த தத்துவ நூல். தலைசிறந்த அரசியல் நூல்.

**- பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்**

பெண் குழந்தைகள் பயன்பெறுவார்கள் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் உயர் கல்வி வளர்ச்சிக்காகவும், அவர்களை ஊக்குவிக்கவும், பிரத்யேகக் கல்வி உதவித் தொகைத் திட்டம் Special Scholarship Scheme ஒன்று, செயல்படுத்தப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

50,000 ரூபாய்க்கும் குறைவான, ஆண்டு வருமானம் பெறுகின்ற ஆதிதிராவிட குடும்பங்களுக்கு வழங்கப்படும் இந்தச் சலுகை, அவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு, ஒரு ஊன்றுகோலாக விளங்கும், என்பது உறுதி.

3. இம்மாணவ மாணவியர்கள், தொடர்ந்து கல்லூரிக் கல்வியைப் பெறுவதற்குக், குடும்பத்தின் பொருளாதாரச் சுமைகள், தடையாக அமையக் கூடாது என்பதற்காக, பிளஸ் 2 தேர்வில், முதல் மதிப்பெண்களைப் பெறுகின்ற, 1000 மாணவர்களுக்கும், 1000 மாணவிகளுக்கும் ஆக மொத்தம், 2000 ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கும் கல்லூரிக் கல்வி பயில்வதற்காக, ஊக்கத் தொகையாக மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வழங்கப்படும் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. சட்டமேதை, பெரியவர் சிவராஜ் அவர்களின், சமுதாயப் பணியை போற்றும் வண்ணம், தமிழ்நாடு அரசு விரைவில் தொடங்கவிருக்கும் புதிய சட்டப் பல்கலைக்கழகத்தில், சட்டக் கல்வி பயிலும், ஆதிதிராவிட இன மாணவ மாணவியர்களுக்கு, நிதி உதவி அளிக்க, "மேயர் சிவராஜ் கல்வி அறக்கட்டளை" ஒன்று, 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும், சுய வேலை வாய்ப்புத் திட்டங்களின் கீழ், தற்போது வழங்கப்பட்டு வரும் மானியத் தொகை, 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்படும். பயனாளிகளுக்கு அரசு வழங்கும் ஊக்கப் பங்குத் தொகை, 81,000 ரூபாயிலிருந்து 1,25,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம், பயனாளிகள் தங்களுடைய வருமானத்தைக் கணிசமான அளவிற்கு உயர்த்திக் கொள்ள, வழி வகுக்கும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

6. ஆர்வமும் துடிப்பும் உள்ள, படித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்கு, தாட்கோ நிறுவனத்தின் மூலம், ஆண்டுதோறும், 50 கோடி ரூபாய் செலவில் லாரிகள் வாங்கி வழங்கப்படும். பயனாளி ஒவ்வொருவருக்கும், ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய், அரசு மானியமாகவும், அரசின் ஊக்கப் பங்குத் தொகையாகவும், லாரி வாங்கும்போது வழங்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. ஆதிதிராவிட மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆண்டொன்றுக்கு 10,000 பெண்களுக்குச் சுய வேலை வாய்ப்பு துவங்குவதற்காக, உதவி அளிக்க, "மகளிர் சங்கக் கடன் அளிப்புத் திட்டம்" ஒன்று, கோடி ரூபாய் செலவில், செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்குச் செலவிடப்படும் 10 கோடி ரூபாயில், ஐந்து கோடி ரூபாய், மகளிருக்கு மானியமாக வழங்கப்படும். ஆதிதிராவிட மகளிர், பொருளாதாரச் சுதந்திரத்தை அடைய, இத்திட்டம் வழி வகுக்கும் என்று பூரணமாக நம்புகிறேன்.

8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெருமக்கள், தாங்கள் வசிக்கும் வீட்டின் தளம், கூரை, சுவர், போன்றவற்றை மேம்படுத்தவும், சீர்படுத்தவும் 5000 ரூபாய் வழங்கும் திட்டம், செயல்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 30,000 குடும்பங்கள் பயன்பெறும் இந்தத் திட்டத்திற்குத் தமிழக அரசு, 15 கோடி ரூபாய் செலவிடும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. தமிழகத்திலுள்ள, 'அனைத்து ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கும் வீட்டுமனை' என்கின்ற உயரிய கொள்கையின் அடிப்படையில், 1995 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் இறுதிக்குள், 5

இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு, இலவச வீட்டு மனைப் பட்டாக்கள், வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. குடியிருப்புக்கு ஒரு சமூக நலக் கூடம் Community Hall என்ற அடிப்படையில், 1000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு, 25 கோடி ரூபாய் செலவில், 1000 சமூக நலக் கூடங்கள், கட்டித் தரப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. 3 கோடி ரூபாய் செலவில், 2000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் - Colour Television sets முதல் கட்டமாக வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. அண்ணல் டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களது பெயரில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்தில் அரியதொண்டு செய்பவருக்கு ஆண்டுதோறும் 'டாக்டர் அம்பேத்கர் விருது' தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட இன மக்களின், கல்வி மேம்பாடு, பொருளாதார மேம்பாடு, வாழ்க்கைத் தர மேம்பாடு, ஆகிய மூன்று அம்சங்களையும் உள்ளடக்கிய, இந்தப் புதிய திட்டங்கள், 1995-ஆம் ஆண்டு, டிசம்பர் மாத இறுதிக்குள், முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என, நான் ஆணையிட்டுள்ளேன்.

தமிழகத்தைச் சேர்ந்த ஆதி திராவிட, பழங்குடியின மக்களின் வாழ்வில், எத்தகைய தொரு வளமும், நலமும், வந்து சேர வேண்டும் எனத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் கனவு கண்டார்களோ, அந்தக் கனவுகள், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், நிச்சயமாக நனவாகும் என்பதை, உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் வசிக்கின்ற இம்மக்கள், வாழ்க்கை மேம்பாடு அடைந்து, மற்றவர்களோடு சரி சமமாக, சமுதாயப் பங்கு பெறுகின்ற, ஒரு உன்னதமான சூழ்நிலையை உருவாக்காமல், ஓய மாட்டோம் என்று சூளுரைத்து இந்த நன்னாளில், உற்சாகத்துடன் இங்கே குழுமியுள்ள, உங்கள் அனைவரையும் கண்டு மகிழ்கின்ற, நல்ல வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நீங்கள் அனைவரும் எல்லா வளமும், நலமும் பெற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டுப் பல்லாண்டுக் காலம், வாழ வேண்டும் என்கின்ற, எனது நெஞ்சத்துப் பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**—6.12.94 அன்று ஆற்றிய உரையின் முழு விவரம்.**



"உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!"

"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்

"இன்பம் எனப்படுதல் - தமிழ் இன்பம்
எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!"

"தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?
உமைஒன்று வேண்டுகின்றேன் மாசில்லாத
உயர்தமிழை உயிர்என்று போற்றுமின்கள்!"

**- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்**



# "கவிஞர்களின் நட்சத்திரக் கூட்டத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பூரணசந்திரன்!"

## கவியரசு கண்ணதாசன் திருவுருவச் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை

கவியரசு கண்ணதாசன், திரு வுருவச் சிலையைத் திறந்து வைத்து, உற்சாகத்துடன் குழுமி யுள்ள, உங்கள் அனைவரையும் காண்பதில், நான் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறேன்.

அமிழ்தினும் இனிய அருந் தமிழை, இயல், இசை, நாடகம் என்று, முக்கூறாகப் பிரித்த பெருமையைப் படைத்தது. தமிழ் கூறு நல்லுலகம், இயற்கையோடு இயைந்த வாழ்வை, நம் முன் னோர்கள் நடத்தியதால், தமிழ் மொழியும் இயற்கையாக, பண் பட்ட மொழியாக வளர்ந்தது. அந்தத் தேமதுரத் தமிழின் இயற் றமிழ், இசைத் தமிழாக உரு வெடுத்த, பாடல்களாக மாறும் போது, இதமான தமிழிசை பிறக்கின்றது.

பாடல்கள் என்றால், இலக் கணம் பயின்ற பண்டிதர்களுக்கு மட்டுமே, உரித்தான தனிப் பொருள், என்கின்ற நிலையை மாற்றி, சாதாரண மக்களும் புரிந்து கொள்கின்ற, பாடல் களைப் படைத்த முதல் புரட்சி யாளர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார். பாரதியின் வழியைப் பின்பற்றி, கவிதை களையும் பாடல்களையும் எழுதி யவர், புரட்சிக் கவிஞர் பாரதி தாசன். அவருக்குப் பின்னால் வந்த, ஆயிரக்கணக்கான கவிஞர் களின் நட்சத்திரக் கூட்டத்தில், சுடர் விட்டுப் பிரகாசிக்கின்ற, பூரண சந்திரனாக விளங்குபவர், கவியரசு கவிஞர் கண்ணதாசன் அவர்கள். இன்றும் தமிழ் இலக் கிய உலகில் தனது கவிதை களாலும், பாடல்களாலும், அம ரத்துவம் பெற்றவர் கவியரசு கண்ணதாசன் அவர்கள்.

சிலரது பாடல்களில், கருத்து நயம் காணப்படுவதில்லை; சிலரு டைய பாடல்களில், ஓசை நயம் காண்பது அரிது; சிலருடைய பாடல்களில், பொருட் செறிவு அமைவதில்லை. ஆனால் கண்ணதாசனின் பாடல்களிலும், கவிதைகளிலும், மூன்றும் முழு மையாகக் குடி கொண்டிருக்கும்; தெள்ளு தமிழ் துள்ளி விளை யாடும்; இனிமைத் தேன் வெள்ள

மாகப் புரண்டு ஓடும்; பொருள் நயம் களி நடனம் புரியும்.

கடுமையான முள் நீக்கி, கனிந்த பலாச் சுளையைப் பிரித்தெடுத்துக் கொடுப்பது போலக் கடுமையான இலக்கண வரம்புகளைத் தளர்த்தி, தனது மனதில் உள்ள கருத்துக்களைச் சாதாரணப் பாமர மக்களும், எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம், கவிதைகளையும், பாடல்களையும் படைத்திட்டவர் கவியரசு கண்ணதாசன். தான் வாழ்ந்த காலத்தில், மக்களின் வாழ்க்கையில், ஒரு கலாச்சாரப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்த, திரைப்படம் என்கிற வலிமைமிக்க சாதனத்தைப் பயன்படுத்தி, கருத்தாழம் மிக்க திரைப்படப் பாடல்கள் மூலமாகத், தனது கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி, மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்த பெருமை, கவியரசு கண்ணதாசனுக்கு என்றென்றும் உண்டு.

இலக்கணப் போர்வையில், மறைத்து வைக்கப்பட்ட இலக்கியங்களில் உள்ள, செறிவு மிக்க கருத்துக்களைப் பாமர மக்களும் புரிந்துகொள்ள, வழி வகுத்தவர், கவிஞர் கண்ணதாசன் அவர்கள். திரைப்படப் பாடல்களின் வழியாகத் திகட்டாத தமிழை தீஞ்சுவை மணக்கும் தமிழை மக்கள் மனதிலே வளர்க்க, தனது எளிமையான கவிதைகளைத் திரைப்படப் பாடல்களாய் அளித்தவர் கண்ணதாசன்.

'கவிநயம் பிறப்பில் வேண்டும்' என்றார் கவிஞர். அப்படி இயற்கையாகவே, அவருடன் இரண்டறக் கலந்துவிட்ட கவிநயம், அவர் கவிதைகளில், ஒரு தனித்துவம் பெற்று விளங்குகிறது.

வாழ்க்கை அனுபவங்களையே, கவிதைகளாக வடித்துத் தந்தவர், கவிஞர் கண்ணதாசன். அவரது அனுபவங்கள் அவர் கவிதைகளுக்கு, உயிராகவும், உடலாகவும் இருந்தது என்றால், அது மிகையாகாது.



"A poet who could only sit on a chair and write verses, would never write any verses worth the reading" என்று, Carlyle அழகாகக் குறிப்பிட்டார்கள். வாழ்க்கை அனுபவங்களே இல்லாத மனதிலிருந்து, பிறக்கின்ற கவிதைகள், யாரையும் ஈர்க்கும் சக்தியைப் பெற்றதில்லை. ஆனால், கண்ணதாசனின் கருத்தாழம்மிக்க பாடல்களும், கவிதைகளும், அவரது அனுபவ வாழ்க்கையின் வெளிப்பாடு என்பதால், வைரங்களாக ஜொலிக்கின்றன.

தமிழ்த் தாயின் சீரிளமை குன்றாமல் அதே நேரத்தில், கால வெள்ளோட்டத்தால், இசைத் தமிழ்ப் பாடல்கள், மடிந்து விடாமல் இருக்க அவற்றைப் புதிய வடிவத்தில் பாமர மக்களும் உணர்ந்து, பாடி மகிழும் வண்ணம், தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றிய, புலவர் திருக்கூட்டத்தில், கண்ணதாசனுக்கு என்றென்றும் ஒரு தனி இடம் உண்டு.

அதுமட்டுமின்றி, மரபுக் கவிதைகளையும், இலக்கண ரீதியாகப் புனையப்பட்ட, இலக்கிய வடிவங்களையும், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளையும், மனங்கவர் கதைகளையும் படைத்தவர், கண்ணதாசன் அவர்கள். ஒரு கவிஞன் எப்படி இருக்க வேண்டும் என்பதை, கவிஞரே ஒரு கவிதையில் கூறியிருக்கிறார்:

"கவிஞன் யானோர் காலக்
கணிதம்;
கருப்படு பொருளை உருப்பட
வைப்போன்!
புவியில் நானோர் புகழுடைத்
தெய்வம்;
பொன்னிலும் விலைமிகு
பொருளென் செல்வம்!"

என்று கவிஞன், தான் படைக்கும் கவிதைகளிலும், பாடல்களிலும், ஐக்கியமானால் அந்த இலக்கியம், இறவாத் தன்மை அடையும் என்பதை, அழகாக எடுத்துக்காட்டியுள்ள திறம், போற்றத் தக்கதாகும்.

சாகா வரம் பெற்ற தனது கவிதைகளாலும், தமிழ்ப் படைப்புகளாலும், அமரத்துவம் பெற்ற காவியத் தாயின், இளைய மகனது திருவுருவச் சிலையை, இங்கே திறந்து வைத்ததில், பெரு மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

கண்ணதாசன் ஒரு சிறந்த

பேச்சாளர். அர்த்தமுள்ள கருத்துக்களைக் கூறுவதில் வல்லவர். கண்ணதாசன் ஒரு இலட்சியவாதி ஆனால், குறுகிய எண்ணங்களுக்காக, வறட்டுப் பிடிவாதம் பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்.

கண்ணதாசன் பார்க்காத துறை இல்லை எனலாம். பத்திரிகையாளராக இருந்தார்; படத் தயாரிப்பாளராக இருந்தார்; அரசியல்வாதியாக இருந்தார்; ஆன்மீகவாதியாக இருந்தார்.



அவரது புகழ் இந்தப் பூமியில், என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்த இந்த அரசு, உங்கள் அரசு, அவர் வாழ்ந்த பகுதியில், 55 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு மணி மண்டபத்தை அமைத்தது.

மணியான கவிதைகள் எழுதிய, மனித குலக் கவிஞனுக்கு, ஒரு மணி மண்டபம் மட்டும் போதாது என்பதால் அரசின் சார்பில், அவரது திருவுருவச் சிலையை, இங்கே நிறுவி உள்ளோம். எதிர்காலத்தில், கண்ணதாசனின் புகழ், வானோக்கி வளர வேண்டும் என்பதற்காகத் தமிழக அரசு எடுத்த முயற்சிகளை, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன், வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திறமைகளையும், தன்மைகளையும் வரிசைப் படுத்தி, கண்ணதாசன் அவர்கள், "அண்ணா நாற்பது" என்ற கவிதையைப் படைத்தார்.

அண்ணாவுக்குப் "பேரறிஞர்" என்ற அடைமொழி பொருந்துமா, என்ற ஒரு வினா எழுந்த போது, அண்ணா ஒரு ஒப்பற்ற பேரறிஞர் என்று, தர்க்கபூர்வமாகக், கவிதையிலேயே பதில் அளித்தவர் கண்ணதாசன், என்பதை நினைவூட்டுவதில், மகிழ்ச்சி அடைகின்றேன்:

'முறையோடு ஆராய்ந்து விளக்கம் கண்டு முடிவெடுத்து முன் வைத்தார் ஒருவருண்டேல் அறியாய் நீ! நாடறியும்! அவர்தான் அண்ணா! அறிவறிந்த மக்களுக்கு அறிஞர் அண்ணா!'

என்று, 'நமது குடும்பம்' என்ற கவிதையில், குறிப்பிட்டுள்ளார்.

அவரை முழுமையாகக் கவர்ந்த, மற்றொரு திராவிட இயக்கத் தலைவர், நமது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆவார்கள்.

கண்ணதாசன் அவர்கள், தமிழ் இலக்கியத்திற்குத், தனது படைப்புகளால், குறிப்பாகத் திரைப்படப் பாடல்கள் மூலமாக, ஆற்றிய பெரும் தொண்டு, தமிழ் மக்களின் எண்ணங்களில், என்றென்றும் வற்றாத ஜீவ நதியாக, ஓடிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அமரத்துவம் பெற்ற பாடல்களையும், கவிதைகளையும் படைத்திட, ஒரு தமிழ்ப் புலவருக்குச் சிறப்பு செய்யப்படுவதைக் காண, இங்கு குழுமியுள்ள உங்கள் அனைவருக்கும், என் இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**9.12.94**

## அறிவு ஒன்றுதான்!

மனிதனை உயர்த்துவது பணமன்று; பதவியன்று; குலமன்று; பருமனன்று; உயரமன்று. அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும். "அறிவுடையார் எல்லாம் உடையார் என்கின்றார் திருவள்ளுவர்.

**- திருமுருக கிருபானந்தவாரியார்**

# மேனாட்டறிஞர் கண்ட தமிழகம்

**ப**ண்டைய தமிழகம் மிகப் பரந்தது. இன்று திராவிடக்குழு மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய ஐந்து மொழிகளும் பேசப் படும் பரந்த நிலம் முழுவதும் அன்று தமிழே ஆட்சி மொழி யாகத் தனித்தியங்கியது. சேர நாட்டில் எட்டாம் நூற்றாண்டு வரை எழுதப் பெற்ற சாச னங்கள் தமிழிலேயே எழுதப் பெற்றுள்ளன.

—ஸ்மித்

**ப**ட்டு மரத்தில் காய்க்கிறது என்று ரோமானியர்கள் எண் ணிக் கொண்டிருந்த காலத்தில், தமிழர்கள் பட்டு நெய்தலிலும் நுண்ணிய கைப்பொருள்கள் செய்வதிலும் சிறந்து விளங் கினர். உலகத்திலேயே சிறந்த வீரர்களாகவும், கைதேர்ந்த மாலுமிகளாகவும் தமிழர்கள் திகழ்ந்தனர். உலகிலே அவர்கள் ஓட்டிவந்த கலங்கள் தங்காத துறைமுகங்களே இல்லை என லாம். எந்தத் துறைமுகத்திற்குச் சென்றாலும், தமிழர்கள் கொண்டுவந்த முத்தும், பவள மும், அகிலும், மிளகும் தான் கொட்டிக் கிடக்கின்றன.

—பிளினி.

**தி**ராவிட மொழிகள் ஐந்தி னுள் தமிழ் மொழிதான் வேறு எம் மொழியின் தொடர்புமின்றி தனித்தியங்கவல்ல செம்மொழி. உலக மொழிகளர்கிய கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், வடமொழி போன்ற உயர் தனிச் செம் மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழில் உரைநடைப் பகுதி குறைவாக இருந்தாலும் அதில் உள்ள காவியங்களும் இலக்கி யங்களும் உலகில் உள்ள எம் மொழி இலக்கியங்களுக்கும் குறைந்ததல்ல என்று நான் துணிந்து கூறுவேன். தமிழ் மொழியின் இலக்கண அமைப்பு உலகிலேயே சிறந்த அமைப்பு என்றால் அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

—கால்டுவெல்

**நா**ன் முதலில் பாமர மக் களிடம் தொடர்பு கொண்டு மதத்தைப் பரப்புவதற்காகவே தமிழ் கற்கத் துவங்கினேன். ஆனால், துவக்கத்திலேயே இனி மையும் எளிமையும் கொண்ட தமிழ் மொழி என்னை வெகு வாகக் கவர்ந்துவிட்டது. உலகத் தின் தலைசிறந்த மொழி ஒன்றி னைக் கற்கின்றோம் என்ற எண்ணம் உதித்தது. அன்றி லிருந்து தமிழைக் கற்பதிலும், தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து அவற்றை ஆங்கில மொழியில் மொழிபெயர்ப்பதிலுமே என்னு டைய வாழ் நாளைச் செலவிடத் துணிந்தேன். —போப்

## இதோ ஒரு பெர்னார்ட்ஷா!

"**தி**ருச்சிராப்பள்ளியில் 'ஓரிரவு' என்னும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததன் பயனாக, இதோ ஒரு பெர்னார்ட்ஷா தமிழ் நாட்டில் இருக்கிறார்! இப்ஸனும் இருக்கிறார்! இன்னும் கால்ஸ் வொர்த்திகூட இருக்கிறார் என்று தோன்றியது.

நடிக்கக் கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரியது. அந்த ஆற்றல் திரு அண்ணாதுரையிடம் பூரணமாக அமைந்திருக் கிறது என்பதை 'ஓரிரவு' நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன்.

-பேராசிரியர் கல்கி அவர்கள்






# "மாணவிகளுக்குத் தன்னம்பிக்கையும் தைரியமும்தான் என்றும் கைகொடுக்கும்!"

## லேடி சிவசாமி ஐயர் பள்ளி விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

**த**மிழகத்தில் பெண் கல்வியின் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து, 125 ஆண்டுகளாக, மகத்தானதொரு கல்விப் பணியை ஆற்றி வருகின்ற, சீமாட்டி சிவசாமி ஐயர், மகளிர் மேல்நிலைப் பள்ளியின், 125-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு, அன்றலர்ந்த தாமரை போல, மலர்ந்த முகங்களுடன் அமர்ந்திருக்கும், உங்கள் அனைவரையும் காண்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, பலதரப்பட்ட மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்புகள், எனக்குக் கிடைத்தாலும், அப்போதெல்லாம் கிடைக்காத ஒரு பூரிப்பு, உங்கள் குழந்தை முகங்களைக் காணும்போது, எனக்கு ஏற்படுகின்றது. வசந்த காலத்தின் முதற்படியில் இருக்கும், உங்கள் மகிழ்ச்சி கலந்த ஆரவாரத்தையும், ஆனந்தத்தையும் காணும்போது, நான் பள்ளியில் கல்வி பயின்ற, இனிமையான பள்ளிப் பருவ காலம், எனது நினைவிற்கு வருகின்றது.

பள்ளி நாட்களின் பழைய, ஆனால் இனிய எண்ணங்கள், என் மனதில் தோன்றும்போது, ஒரு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. பள்ளிப் பருவத்தின் தாக்கம், அந்த இனிய இளமைக் காலப் பிராயத்தின், இனிய நிகழ்ச்சிகளின் எண்ண ஆக்கிரமிப்பு எத்தனை வயதானாலும், நம்மை விட்டு விலகுவது இல்லை. அந்த வகையில், இன்று உங்களுடன், சிறிது நேரத்தைப் பகிர்ந்து கொள்கின்ற, ஒரு அருமையான வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பார்க்கின்ற அனைத்திலும், ஒரு புதுமை உணர்வு; பழகுகின்ற மனிதர்களைப் பற்றிய வியப்பு; இயற்கை மீது ஒரு அளவிட முடியாத மோகம் எல்லாவற்றையும் ஒரே நாளில், கற்றுக் கொள்ள வேண்டும் என்ற உந்துதல், இது தானே பள்ளிப் பருவம்?

மற்றவர்கள் மனதைக் கொள்ளை கொள்கின்ற, வெள்ளை மனதுக்குச் சொந்தக்காரர்கள் நீங்கள்; இனிய கனவுகள் காணும், இளகிய இதயங்களின் உரிமையாளர்கள் நீங்கள்: இந்த இனிய பருவத்தில், கற்பவை அனைத்தும், பசுமரத்தாணி போல, நெஞ்சில் பதிந்துவிடும்.

"The Childhood shows the man, as morning shows the Day" என்று John Milton குறிப்பிட்டதை-

"The childhood shows the man and woman
As morning shows the Day"

-என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் நீங்கள் எப்படி உருவாகப் போகிறீர்கள், என்பதன் வெளிப்பாடுதான், இந்தப் பள்ளிப் பருவம்.

உன்னதமான கற்பனைகளையும், உயரிய எண்ணங்களையும், உள்ளத்திலே தாங்கியிருக்கின்ற மாணவப் பருவத்தில், மகிழ்ந்திருக்கின்ற நீங்கள், எதிர்காலத்தில் கடுமையான சோதனைகளையும், பிரச்சினைகளையும், சவால்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும்; இந்தத் தேசத்தின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டியிருக்கும்; சமுதாயத்தின் பல்வேறு மாற்றங்களுக்கு, வழிகாட்ட வேண்டியிருக்கும்: அறிவியல், தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு, ஊன்றுகோலாக இருக்க வேண்டியிருக்கும்: நல்ல தத்துவங்களை உருவாக்கி, புதியதோர் உலகம் படைக்க வேண்டியிருக்கும். உங்கள் எதிர்காலச் சவால்களைச் சமாளிக்கின்ற திறமைக்கு அச்சாரமாக, அடிப்படையாக விளங்கப்போவது, பள்ளியில் கற்கின்ற கல்வியும், உயரிய சிந்தனைகளும், சிறந்த நற்பண்புகளும்தான், என்பதை நினைவுப்படுத்துவது, எனது கடமை என்று கருதுகிறேன்.

கல்வியிலும், கலையிலும், சிறந்து விளங்கியவர்கள் நாம் என்பதை, சங்க கால இலக்கியங்கள், எடுத்துக் காட்டுகின்றன. நமது சமுதாயத்தில் பெண்கள், சிறப்பானதொரு இடத்தில் வைத்துப் போற்றப்பட்டனர். ஆனால், இடைப்பட்ட ஒரு இருண்ட காலத்தில், பெண் கல்வி தடைப்பட்டது; பெண்களின் முன்னேற்றம் சிறைப்பட்டது.

'பெண் கல்வி' கிட்டத்தட்ட மறுக்கப்பட்ட ஒரு காலக்கட்டத்தில், சீமாட்டி சிவசாமி ஐயர் பெண்கள் பள்ளி உருவானது, என்பதை எண்ணிப் பாக்கும்போது, அந்தக் காலத்தில் இது, ஒரு புரட்சியாகத் தான் அமைந்திருக்கும் என்பதில், சந்தேகமில்லை.

எத்தனை எத்தனை எதிர்ப்புக்களை, இந்த நிறுவனம் சந்தித்திருக்கும் : எத்தனை எத்தனைச் சவால்களை, எதிர்கொண்டிருக்கும் இந்தப் பள்ளி; ஒரு மாபெரும் சரித்திரமே, இந்தப் பள்ளியின் பெயருக்குப் பின்னால் மறைந்திருப்பதை, என்னால் உணர முடிகின்றது. அத்தகையதொரு பாரம்பரியம் மிக்க, ஒரு பள்ளியில், நீங்கள் பயின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதே, உங்களுக்குக் கிடைத்த மாபெரும் பேறு ஆகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நீங்கள் கல்வியை நன்முறையில் கற்று, வாழ்க்கையில் முன்னேற வேண்டும்;




நாட்டிற்கு வீட்டிற்கு, பயனுடைய ஒரு வாழ்க்கையை, மேற்கொள்ள வேண்டும் என்பதே, எனது பேரவா! நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்! அவை தான் எல்லாக் காலங்களிலும், உங்களுடன் உடனிருக்கும் உற்ற துணையாகும்.

அறிவை நன்கு பெருக்கிக் கொள்ளுங்கள். ஏனென்றால், அதுதான் . உங்களுக்கு எல்லா நிலையிலும், மனமகிழ்ச்சியை அளிக்கக் கூடிய மாமருந்தாகும்.

உழைக்கக் கற்றுக் கொள்ளுங்கள் ஏனென்றால், உண்மையான உழைப்புதான், உங்களுக்கு ஒரு தனி முகவரியைக் கொடுக்கும்.

> "இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்"

—என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க, சுறுசுறுப்பாக இயங்குபவர்களுக்கு மட்டும் தான், இந்த உலகம் சொந்தம் என்பதையும், எடுத்துக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பெண்களின் வளர்ச்சிக்கும், உயர்விற்கும், தடையாக இருக்கும் அனைத்துச் சக்திகள், இன்று உலகம் முழுவதிலும், ஒன்றன் பின் ஒன்றாக, விலகிக் கொண்டிருக்கின்றன. ஒளிமயமான எதிர்காலம், உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதில், எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனால், எதிர்காலத்திற்கு, உங்களை நீங்கள் தயார் செய்து கொள்ள வேண்டும், என்பதுதான் எனது வேண்டுகோள்.

கூடிப் பழங்கதைகள் பேசித் திரியும், அர்த்தமற்ற வாழ்க்கை முறையை, காலத்தின் தேவைக்கேற்ப, நாம் மாற்றியாக வேண்டும். கல்லாமையும், இல்லாமையும், நமது இல்லங்களில் இல்லாதவைகளாக்க வேண்டும். அறிவு ஒளியை எங்கும் பரப்பி, அறியாமை இருளை அகற்ற வேண்டும்.

அறிவியலும், தொழில்நுட்பமும், விஞ்ஞானமும், கம்ப்யூட்டரும், வளர்ந்து வரும் அசுர வேகத்திற்கு, ஈடு கொடுத்து, நமது கல்வி நிலையும், மனப்பாங்கும், மாற வேண்டும் என்பதே, எனது அவா! பெண்கள் பங்கேற்காத ஒரு துறையே இல்லை, என்ற உன்னதமான சூழ்நிலையை, நீங்கள் உருவாக்கிட வேண்டும்.

நான் கனவு காணும் இலட்சிய சமுதாயத்தில், பெண்கள் பொருளாதார சார்பு இன்றி, ஆண்களோடு சரிநிகர் சமானமாக வாழ வேண்டும்; ஆனால்,- உலகிற்கே வழிகாட்டியாக விளங்கும் நமது தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலாச்சாரம், ஆகியவற்றின் அடிப்படை மரபுகளான குடும்ப வாழ்க்கை, பாச உணர்வு, தியாக உணர்வு, நட்புணர்வு, ஆகிய நற்பண்புகளை, கண்ணெனப் பாதுகாக்க வேண்டும் என்பது எனது அவா! மாறி வரும் புது உலகிற்கு, நம்மை, நாம் தயார் செய்து கொள்ளும் அதே நேரத்தில், நமது அடிப்

படைப் பண்புகள் சிதைந்து விடாமல் நமது பண்பாட்டையும் கலாச்சாரத்தையும், போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதே, எனது வேண்டுகோள். அத்தகைய ஒரு சூழ்நிலையை, நீங்கள் உருவாக்கித் தருவீர்கள் என்று, நான் பரிபூரணமாக நம்புகிறேன்.

பெண்களின் கல்வி வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு காட்டி வரும் தீவிரத்திற்கு, இந்த உணர்வுதான் அடிப் படையான காரணம் ஆகும்.

வீடும் நாடும் சிறப்படைய, உங்களுக் கென்று உயரிய கொள்கைகளை, வகுத்துக் கொள்ளுங்கள். உள்ளத்தில் உறுதியும், சலி வடையாத உழைப்பும் இருந்தால், வெற்றி உங்களைத் தானாக வந்து சேரும்.

*1869*-ஆம் வருடம், துவக்கப்பட்ட இந்தப் பள்ளி, Dr. Annie Besant அம்மையார் போன்ற பெருமக்களின் தலைமையில், பல ஆண்டு களாக இயங்கி, விடுதலை உணர்வையும், மாணவிகளுக்கு ஊட்டி வளர்த்தது என்பதை அறியும்போது, நான் மிக்க பெருமை அடை கின்றேன்.

வரவேற்புரையாற்றிய ஆர்.கே. சுவாமி இப்பள்ளிக்கு ஒரு பெரிய விளையாட்டு மைதானம் அமைக்க மையிலாப்பூர் பகுதியில் இரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய வேண் டும் என்ற கோரிக்கையை என் முன் வைத் தார். இப்பள்ளி மாணவிகளின் விளையாட்டு மேம்பாட்டிற்கு வழிவகுக்க இப்பள்ளிக்கு அருகாமையில் அமைந்துள்ள ஒரு பகுதியில் இரண்டு ஏக்கர் நிலம் பள்ளி விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு வழங்க நட வடிக்கை எடுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பள்ளியில் இறுதியாண்டு பயின்று பள்ளியைவிட்டு வெளியே செல்லும் மாணவிகளில் - படிப்பு, விளையாட்டு, நற் பண்புகள் இதர பணிகளில் ஈடுபடுதல் போன்றவற்றில் சிறந்து விளங்கும் மாண விக்கு, அதாவது Overall performanceக்காக சுழற்கேடயம் Rolling Shield ஒன்று இந்த வருடம் முதல் என்னால் நிறுவப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ரோலிங் ஷீல்டு விரைவில் இப்பள்ளிக்கு வழங்குவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ரோலிங் ஷீல்டு இப்பள்ளிக்கு வழங்குவேன் என்று நான் அறிவித்ததற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு.




"சர்ச் பார்க் கான்வென்டி"ல் மெட்ரி குலேஷன் படிப்பை முடித்துக் கொண்டு நான் அந்தப் பள்ளியை விட்டு வெளியேறிய போது அந்தப் பள்ளியால் நிறுவப்பட்ட அத்தகைய Most outstanding outgoing student of the year என்ற விருதை நான் பெற்றேன். அந்த நினைவு இன்று வரை என் மனதை விட்டு அகலவே இல்லை. வாழ்க்கையில் இதுவரை எத்தனையோ விருதுகளை நான் பெற்றிருக்கிறேன். ஆனால் இன்று வரை நான்



## வள்ளுவர் வாய்மொழி மாண்பு !

திருக்குறள் ஓதுவதற்கு எளிது. மனப் பாடஞ் செய்வதும் சுலபம். ஒரு முறை படித்தாலே போதும். உணர்வதற்கு அரிது. வேதங்களிலுள்ள விழுப்பொருள்களை யெல்லாம் விளக்கமாக உரைப்பது. நினைக் குந்தோறும் நெஞ்சில் தெவிட்டாத இன் பத்தை ஊற்றெடுக்கச் செய்வது. இதன் பெருமையை நன்குணர்ந்த மாங்குடி மருதனார்,

'ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு' என்றார்.

**- திருமுருக கிருபானந்தவாரியார்**

மிகவும் பெருமையாக நினைவில் கொண் டுள்ள ஒரு விருது ஆரம்பத்தில் பெற்ற அந்த விருதுதான். இதற்கு முன்னால் எனது உரையில் இந்தப் பள்ளியில் பயிலும் மாணவிகள் எதிர்காலத்தில் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சவால்களைச் சந்திக்கத் தங் களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினேன்.

ஆகவே, ஆசிரியப் பெரு மக்களை நாம் தெய்வமாக வணங்க வேண்டும், மதிக்க வேண்டும். அவர்கள் புகட்டிய அந்தக் கல்வி தான், அவர்கள் எனக்குப் போட்டு வைத்த அந்த பலமான அஸ்திவாரம்தான், இன் றைக்கு எனக்கு கை கொடுக்கிறது. இவ்வளவு பெரிய பொறுப்புகளையும் தன்னம்பிக்கை யுடன் நிர்வகிக்கக்கூடிய ஒரு தன்னம்பிக் கையை, ஒரு தைரியத்தைக் கொடுத்து இருக் கிறது. இதை எல்லாம் எதற்கு உங்களுக்குச் சொல்கிறேன் என்றால் நான் பள்ளிப் படிப்பை முடித்து அந்த நாட்களில் என் வாழ்க்கையில் இப்படிப்பட்ட சோதனைகள், சவால்கள் ஏற்படும் என்று நான் நினைத்ததே இல்லை.

கல்லூரிக்குப் போவேன், படிப்பேன் என்றுதான் நினைத்தேன். ஆனால், எதிர் பாராத எத்தனையோ மாற்றங்கள் என் வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்டன. அதுபோல நாளை யார் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை நாம் முன் னாலேயே யூகிக்க முடியாது.

ஆனால், பெண்கள் நினைத்தால் சாதிக்க முடியாதது எதுவுமே இந்த உலகத்தில் இல்லை. அந்தத் தைரியம்தான் உங்களுக்கு வேண்டும். அந்தத் துணிச்சல்தான் உங்களுக்கு வேண்டும். அந்தத் தன்னம்பிக்கைதான் உங் களுக்கு இருக்க வேண்டும். என் அன்பிற்குரிய மாணவிகளாகிய உங்களுக்கு என்றென்றும் அந்தத் துணிச்சல்தான் கைகொடுக்கும். ஆகவே, நேர்மையோடு இருங்கள், முடிந்த வரை கல்வியை நீங்கள் கற்க வேண்டும். எது வந்தாலும் என்னால் துணிவுடன் அதனை எதிர்கொள்ள முடியும் என்ற தைரியம் உங்கள் நெஞ்சில் இருக்க வேண்டும். அப்படி நீங்கள் செய்தால் 'The sky is the limit and world will be at your feet.'

பிறருக்கு உதவ வேண்டும்; பிறருடைய துன்பங்களைத் தீர்க்க, நாம் இயன்ற அளவு பாடுபட வேண்டும், என்ற மனித நேயக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு நாம் படிக்கும் பள்ளிச் சூழ்நிலையும் கல்வி கற் பிக்கும் ஆசிரியப் பெருமக்களின் வழிகாட்டு தலும் முக்கியக் காரணங்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தக் கல்வி நிறுவனம், மென்மேலும் வளர்ச்சி அடைந்து, பெரும் புகழை அடைய வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த் துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்தப் பள்ளியின் நிர்வாகிகள், ஆசிரியப் பெரு மக்கள், மற்றும் மாணவச் செல்வங்களாகிய நீங்கள் அனைவரும், எல்லா வளங்களும் நலன்களும் பெற்று, நல்வாழ்வு வாழ வேண் டும் என்று வாழ்த்துகிறேன்."

**–12.12.94-ல் ஆற்றிய முழு உரை விவரம்.**

# தஞ்சையின் தனிப் பெருமை

**கா**விரியின் கருணையால் நஞ்சை வளம் பெற்றது தஞ்சை நாடு. பஞ்சம் என்பதறியாத அத்திருநாட்டில் தஞ்சை மாநகரம் தழைத்தோங்கி வளர்கின்றது. அஞ்சன வண்ணனாகியதிருமால் அந்நகரில் அமர்ந்து அருள் புரிகின்றான்.

"வம்புலாம் சோலை மாமதிள்
தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான்கண்டு
கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"

என்று தஞ்சை மாமணிக் கோயிலை நெஞ்சாரப் போற்றினார் திருமங்கை மன்னன். நெஞ்சடைப் பெருமானாகிய ஈசனும் தஞ்சையம்பதியிலே கோயில் கொண்டருளினான். அக்கோயிலைத் "தஞ்சைத் தளிக் குளம்" என்று தேவாரம் பாடிற்று.

இத்தகைய தஞ்சை மாநகரின் பெருமையெல்லாம் தன் பெருமையாக்கிக் கொண்டான் இராசராசன் என்ற சோழன். அவன் மன்னர் மன்னன். மாநில வேந்தன். வெற்றி மேல் வெற்றி பெற்ற கொற்றவன். கடல் சூழ்ந்த இலங்கையையும் வென்று அரசாண்ட இணையற்ற வீரன். அம்மன்னன்தஞ்சையைச்சோழ நாட்டின் தலைநகர் ஆக்கினான். அதற்கு அருமையும் பெருமையும் அளித்தான். முத்தமிழும் அங்கு முழங்கக் கண்டு களித்தான். தஞ்சையம்பதியில் அம்மன்னன் எடுத்த தனிப் பெருங்கோயில் தமிழ்நாட்டின் ஒரு நல்ல அணியாகத் திகழ்கின்றது. இராசராசன் பெயர்தாங்கி நிற்கும் அப் பெருங்கோயிலை அந்நாளில் பாடினார் கருவூர்த் தேவர் என்னும் பெரியார்.

சோழ மன்னரின் செல்வச் செழுமைக்கும் சமயப் பற்றுக்கும் ஒரு சான்றாகத் திகழ்கின்றது தஞ்சைப் பெருங்கோயில். அதன் உயர்ந்த நடுவிமானத்தின் உச்சியிலே குன்று போன்ற கருங்கல்லொன்று நின்று நிலவுகின்றது. அக்கல்லைக் கோபுரத்தின் உச்சியிற் கொண்டு சேர்ப்பதற்கு நெடுந்தொலைவிலிருந்து சாரம் அமைத்ததாகவும், தஞ்சைக்கு நான்கு மைலுக்கு அப்பாலுள்ள சாரப்பள்ளம் என்ற சிற்றூரின் பெயரே அதற்குச் சான்று பகர்வதாகவும் அறிந்தோர் கூறுவர். இன்னும் அத் திருக்கோயிலின் முன்னே பெரிய நந்தி என்னும் மாக்காளையும் ஒரே கல்லில் எடுப்பாக வைக்கப்பட்டிருக்கின்றது. சுருங்கச்சொல்லின் தஞ்சைக் கற்கோயில் முற்காலச் சிற்பக் கலையின் சீர்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அக்கோயிலின் சுற்றாலையில் அமைந்துள்ள முருகன் திருவுருவைக் கண்டு ஆனந்தமுற்றார் அருணகிரியார்.

"தஞ்சென வாம்அடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய
பெருமானே"

என்று பாமாலை சூட்டிப் பணிந்தார்.

சிவ நெறியிலே சிறந்த ஆர்வமுடைய இராசராசன் சிவபாத சேகரன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். அம் மன்னனைப் பற்றிய பாட்டும் கூத்தும் முன்னாளிற் பல உண்டு. "இராசராசேந்திர நாடகம்" என்னும் கூத்து தஞ்சைத் திருவிழாக் காலங்களில் சிறப்பாக நடைபெற்றதென்பது பெரிய கோவில் கல்லெழுத்தால் புலனாகின்றது. அந்நாடகம் கிடைத்தால் சிவபாத சேகரன் பெருமை இன்னும் நன்றாக விளங்கும்.

பெருஞ்சோழ மன்னர் காலத்திற்குப் பின், நாயக்க மன்னர் சில காலம், மராட்டிய மன்னர் சில காலம் தஞ்சை மாநகரில் ஆட்சி புரிந்தனர். அன்னார் கட்டிய கோட்டைகளும் மாளிகைகளும் இன்னும் அந்நகரில் பொலிவிழந்து நிற்கக் காணலாம். அவற்றில் ஒன்று சங்கீத மண்டபம் என்று வழங்கும் இசைமன்றம். நெடுங்காலமாக ஒளி மழுங்கிக் கிடந்த அம்மன்றம் இப்பொழுது கலையரங்கமாக மீண்டும் காட்சியளிக்கிறது.

வீர சிவாஜியின் மரபில் வந்த மராட்டிய வேந்தர் பலர் தஞ்சையில் அரசு புரிந்தாரேனும், சரபோஜி மன்னன் ஒருவனே இன்றும் பொதுமக்களால் நினைந்து போற்றப்படுகின்றான். அரசாட்சியில் அவன் கருத்து

செல்லவில்லை. ஆதலால், ஆங்கிலேயரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவித்தான். அவன் தந்த பொன்னையும் பொருளையும் கொண்டு கவலையின்றி வாழ்ந்தான். அருங்கலைவாணரை ஆதரித்தான். பாட்டின் தரம் அறிந்து பரிசளித்தான். அவன் மீது ஒரு குறவஞ்சி நாடகம் பாடினார் ஒரு கவிஞர். அம் மன்னன் தஞ்சை மாநகரில் பவனி வந்த கோலத்தையும், அவன் அழகைக் கண்டு மையல்கொண்ட மதனவல்லியின் மோகத்தையும் அக் குறவஞ்சி நாடகத்திலே காண்பது ஓர் இன்பம்.

காதலுற்ற மதனவல்லியின் முன்னே குறி சொல்லும் குறவஞ்சி, கூடையும் கையுமாய்த் தோன்றுகிறாள். அவள் தப்பாமல் குறி சொல்லி எப்பாலும் புகழ் பெற்றவள் பலநாட்டுப் பாவையரின் கைபார்த்துப் பரிசு பெற்றவள். இத்தகைய குறவஞ்சி மதனவல்லியை மகிழ்ந்து நோக்கி,

"சொன்ன குறிகளும் பெற்ற
வரிசையும்
சொல்லுகிறேனடி கண்ணே"

என்று எடுத்துத் தான் பார்த்த பெண்களையும் பெற்ற பரிசுகளையும் அடுக்குவானாயினாள். 'அம்மே! நான் ஆந்திர நாட்டிலே ஒரு பெண்ணின் கைப்பார்த்துக் குறி சொன்னேன். அவள் மனமகிழ்ந்து இந்த மூக்குத்தியைப் பரிசளித்தாள். ஒரு கன்னடப் பெண் 'என் கையைப் பார்' என்று காட்டினாள். நான் பார்த்து நல்ல குறி சொன்னேன். அவள் இந்தக் காதோலை தந்தாள். இன்னும் கேள்! அம்மே! ஓர் ஆங்கிலப் பெண்ணும் தம் கையைக் காட்டிக் குறி கேட்டாள். அவள் தந்ததே இந்த மேகலை என்று அடுக்கினாள்.

குறத்தி சொல்லிய சொல்லை நம்பி மதனவல்லியும் குறி கேட்டாள். அவள் கையை நன்றாகப் பார்த்து, 'தஞ்சையை ஆளும் சரப மன்னன் உனக்கு இன்னருள் புரிவான்' என்று கூறினாள் குறவஞ்சி.

சரபேந்திர குறவஞ்சி நாடகம் தஞ்சைக் கோவிலில் நெடுங் காலம் நடந்து வந்தது. 'பல கலைகள் உணர்ந்த தஞ்சைச் சரபோசி' என்று பாராட்டப் பெற்ற மராட்டிய மன்னன் மாளிகை அழிந்தது. மருத்துவச் சாலை மறைந்தது. ஆயினும் அவன் ஆசையுடன் தொகுத்த அருமையான நூல் நிலையம் மட்டும் 'சரஸ்வதி மகால்' என்னும் பெயரோடு இன்றும் தஞ்சையிலே காட்சி தருகிறது.


**–'ஆற்றங்கரையினிலே' என்னும் நூலில், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை.**

## நாடகக் கலை!



நாடகக் கலைக்கு ஏனைய கலைகளைக் காட்டிலும் அபூர்வ சக்தியொன்றுண்டு. மக்களை உடனடியாகச் செயலில் இறங்கச் செய்வது நாடகக் கலைதான். இதனால்தான் நாகரிக நாட்டினர், தங்கள் சீர்திருத்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்கு நாடகங்களைக் கருவியாக உபயோகித்து வந்தார்கள், வருகிறார்கள், வெற்றியும் கண்டார்கள்.

**-கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்**



# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நோக்கமும் வளர்ச்சியும்

—டாக்டர் ச.சு. இராமர் இளங்கோ—
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

'தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற முதன்மை நோக்கத்துடனும்,

"அணிசெய்யும் இலக்கியம்செய்!
அறத்தைச் செய்!
விடுதலைகொள்
அழகுநாட்டில்!
பணிசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
பழநாட்டானே"

என்ற வளர்ச்சிக்கான திட்டத் துடனும் 3.1.1968 முதல் 10.1.1968 வரை நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒன்றை அமைக்க விழைந்தார். அவருடைய கருத்துப்படி சென்னையில் இந் நிறுவனம் தொடங்கப்பட்டது.

தமிழ் மொழியின் சிறப்பை, இலக்கியத்தின் பெருமையை, அதன் தொன்மை வளத்தை உலகளாவிய நிலையில் எடுத்துக்கூறவும் உல கெங்கிலும் உள்ள தமிழர்கள் தொடர்பு கொள்ளவும் தமிழுடன் தொடர்புடைய பிற துறைகளுடன் மொழிகளுடனும் ஆய்வு மேற் கொள்ளவும் வழிவகுத்தளிப்பது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கையாகும். அக் கொள்கையின் அடிப்படையில் தான் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தொடர் இந் நிறு வனத்தின் அடையாளச் சின்ன மாகப் பொறிக்கப்பட்டுள்ளது. முனைவர் கா.மீனாட்சிசுந்தரம், முனைவர் ச.வே. சுப்பிரமணியம், முனைவர் அ.நா. பெருமாள், முனைவர் க.தி. திருநாவுக்கரசு, முனைவர் சிலம்பொலி செல்லப் பன் ஆகிய பெருமக்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் எமக்கு முன்னர் இயக்குநர்களாக பணி யாற்றியுள்ளனர்.

1. இலக்கியத் துறை, 2. கலைப் பண்பாட்டுத் துறை, 3. சமூகவியல் துறை, 4. மொழியியல் துறை, 5. பன்மொழிக் கல்வியியல் துறை என்ற ஐந்து துறைகள் இந் நிறுவனத்திளல் அமைந்துள்ளன. இவையன்றி, மொழிபெயர்ப்பியல், சுவடியியல், பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், இத் துறைகள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொண்டு சென் னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டம் பெறும்வகையில் இந் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. பிறநாட்டோர் தமிழ் கற்றுக் கொள்ள ஏதுவாகப் பயிற்சி வகுப் புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அறிமுக நிலை, உயர்நிலை, குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளின் மூலம் 300-க்கும் மேற்பட்ட ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, கொரியா, தென்னாப்பிரிக்கா, ரியூனியன் மேலைநாட்டு ஆர்வ லர்கள் இத்தமிழ் கற்றல், பயிற்சி யின் மூலம் பயனடைந்துள்ளனர்.

தமிழாராய்ச்சித் தொடர்பாக வெள்ளிக்கிழமை கருத்தரங்கு, ஆய்வு, மற்றும் மாதக் கருத்தரங்கு, அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், தேசியக் கருத்தரங்கு, பிறநாட்டு அறிஞர்களின் சிறப்புச் சொற் பொழிவுகள் ஆகியன சிறப்புற நடைபெறுகின்றன. பல அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளை, இடம்பெறச் செய்து சிறப்பிக்கும் நிலையில் Journal of Tamil Studies 'தமிழியல்' ஆண்டுக்கு இருமுறை இந்நிறுவனம் வெளியிட்டு வரு கிறது. இலக்கியம், ஒப்பிலக்கியம், இசை, நாட்டியம், வரலாறு, பண்பாடு, சிற்பம், நாட்டுப் புறவியல், மொழிபெயர்ப்பு, திற னாய்வு, மொழியியல், தத்துவம் ஆகிய துறைகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி 39 இதழ்கள் இதுவரை வெளிவந் துள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செயல்பாடுகளை அறிவிக்கும் வகையில் 'செய்திக் கதிர்' வெளியிடப்படுகிறது.

தமிழ் தமிழர் ஆய்வுத் தொடர்பாக 192 நூல்களை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளி யிட்டுள்ளது. இவற்றுள் 29 நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன.

| | |
|---|---|
| அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் | - 53 |
| மொழியியல், மொழிபெயர்ப்பு, சமயம், தத்துவம், மற்றும் பொதுத் தலைப்புகள் தொடர்பாக | - 53 |
| தொல்காப்பியம் தனித்தனி ஆய்வுகளாக | - 23 |
| சுவடியியல் பதிப்பு நூல்கள் | - 20 |
| தமிழ் தமிழர் தொடர்பான நூல்கள் | - 17 |
| தொகுப்பு நூல்கள் | - 14 |
| தமிழ் மரபியல் தொடர்பாக | - 9 |
| மொழிப் பயிற்சி நூல்கள் | - 3 |

பிறமொழியினர் தமிழ் கற்றுக் கொள்ள ஒலி ஒளி நாடாத் தயாரித்து வெளியிடுவதும் குறிப் பிடத்தக்க முயற்சியாகும்.

தமிழ் இலக்கிய வரலாறு தமிழ் அழகியல், ஊர்ப்பெயராய்வு, தமி ழகத்தில் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு, தெருக்கூத்து, தமிழ் இலக்கியத்தில் உடல் ஊனம் பற்றிய ஆய்வு, அகநானூறு, ஹால சப்தசதி ஒப்பியல் ஆய்வு, தமிழக மகளிர், பிறநாட்டினருக்குத் தமிழ் கற்பித் தலுக்குரிய திட்டப்பணிகள், மொழிபெயர்ப்புத் தொடர்பான திட்டப் பணிகள் ஆகியன தற் பொழுது இந்நிறுவன ஆராய்ச்சி யாளர்கள் மேற்கொண்டு வரும் திட்டப்பணிகளாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தில் உள்ள நூலகத்தில் சுமார் 40,000 நூல்கள் இடம்பெற்றுள்ளன. இவை தவிர நாளிதழ்கள், மாத, வார, ஆண்டு இலக்கிய இதழ்கள், சேமிக்கப்பட்டு வருகின்றன. தமிழ் ஆராய்ச்சிக்கு இங்குள்ள நூல்கள் தூண்களாக, ஒளி விளக்குகளாகத் திகழுகின்றன.

# எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

பெரும் புலவர்களை வர வேற்றுப் பெருமைப்படுத்துவது என்பது தமிழகத்திலுள்ள பழம் மரபு ஆகும். பழங்காலத்தில் மன்னனின் மணி மண்டபத்திலோ அரசவையிலோ நடைபெறும் பல்வேறு விழாக்களிலே வெளியிலிருந்து வரும் புலவர்களை வரவேற்பதுதான் மிகச் சிறந்த விழாவாகக் கருதப்படும்.

வெளியிலிருந்து வந்த புலவர்களை அரசவைக்கு உலாவாக அழைத்து வருவார்கள், அரசவையிலே ஏற்கெனவேயுள்ள புலவர்களுடன் அவர்கள் உரையாடி மகிழ்வர்.

## பேரறிஞர் அண்ணா

தமிழ்நாட்டில் தமிழர்கள் தமிழ் மொழியைத் தங்கள் எண்ணங்களை வெளியிடும் கருவியாக மட்டும் நினைக்கவில்லை. தங்கள் மொழியையும் - வாழ்வையும் ஒன்றாக இணைத்துக் கொண்டார்கள் மொழியைக் கருவி என்று நினைக்காமல், தங்களை வழிநடத்தும் துணைவன்; வழிகாட்டும் வழிகாட்டி; பாடம் போதிக்கும் ஆசான்; உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன் என்று நினைக்கிறார்கள், அதனால் தான் தமிழுக்கு ஆபத்து வருகிறது என்று அறிகிறபோது- ஆபத்து வருமோ என்று ஐயம் தோன்றும் போது- ஆபத்து வரக்கூடுமோ என்ற சந்தேகம் வரும்போது தமிழர்கள் ஆர்த்தெழுகிறார்கள்.

தமிழார்வம் பெருகிப் புதுப் புதுக் கவிஞர்கள் - புலவர்கள் புதுப்புதுப் பொருளை ஆராய்ந்து வெளியிடுகிறார்கள். நல்ல உரை நடையாசிரியர்கள் - மொழி பெயர்ப்பாளர்கள் - பேச்சாளர்கள் தொகை ஓங்கி வளர்ந்தது ஓங்கி வளர்ந்தபடி இருக்கிறது! எதற்குமே ஆபத்து என்றால்தான் அதற்குப் பாதுகாப்பும் - உணர்ச்சியும் தோன்றுகிறது!

தமிழ்க் கவிதைகளை - தமிழ் நூல்களைக் கற்பது மூன்று வகையில்;

ஒன்று, நூலிலுள்ள அருமை பெருமை - நூல் நயம் - இலக்கணச் சுவை கண்டுபிடித்து இன்பம் பெறுவது.

இரண்டு, அந்த இலக்கியத்தைப் பிறநாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு எந்தெந்த வகையில் அது உயர்ந்தது என அறிந்து பிற நாட்டாரும் உணரச் செய்வது.

மூன்று, அந்த ஏடுகளின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன் இருக்கிறது என்று ஆராய்ந்து சமுதாயத்திற்கு அதைத் தருவது.

ஏடுகளிலுள்ள நயம் எண்ணி மகிழ்வது என்றால் அது புலவர் குழுவோடு நின்றுவிடும்.

பிறநாட்டார் நமது ஏடுகளை அறிந்து கொள்வதற்கு என்றால் - அது கருத்தரங்கோடு நின்றுவிடும்!

சமுதாயத்திற்கு என்ன பயன் என்று ஆராயும் வழியில் தமிழ் நெறியோடு புலவர்கள் தமிழ் மக்களை உடனிருந்து அழைத்துச் செல்ல வேண்டும்!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற திருக்குறள் உள்ளபோது நாலுவர்ணம் நமக்குள் புகுந்த மார்க்கம் என்ன?

அந்தக் கொள்கை வந்தபோது எதிர்த்தவர் எத்தனைப் பேர்? வந்தது வரட்டும் என்று இருந்தனரா?

உள்ளமெலாம் தமிழ் நிறைந்திருக்கும் வேளை ஊனும்


உயிரும் தமிழோடும் கலந்திருக்கும் வேளை - எதைப்பற்றிப் பேசினாலும் தமிழைப் பற்றியே பேசிடும் வேளை எதையும் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வேளை இந்த வேளையில் நான் ஆற்றும் பேருரை - பேருக்குத் தான் உரையாக அமையுமேயல்லாது பேருரையாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

இங்கு பூம்புகாரில் நாம் கண்ட காட்சி கேட்ட கருததுக்கள் - உள்ளத்தில் பொங்கிய எழுச்சியைப் பார்த்த நாம் நாளைய தினம் இதே உற்சாகத்தோடும் - உள்ள எழுச்சியோடும் இங்கு காணப்போகிறோமா? என்றால் காண முடியாது.

ஏதாவது ஒரு முறையில் இந்த மாநாடு தொடர்ந்து நடக்காதா? பத்து நாள் நிலவிய தமிழ் நாதம் நாதமாக இருக்காதா? - இந்த மாநாடு போல் எல்லா ஊர்களிலும் மாநாடு நடத்தக் கூடாதா? தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் தமிழ் எழுச்சி எழச்செய்யக் கூடாதா என்று அனைவரும் நினைக்கத் தகும் அளவில் பூம்புகார் மாநாடு அமைந்தது.

மொழிக்காக ஒரு மாநாடு கூட்ட முடியும்- அதற்கு இலட்சக் கணக்கில் மக்கள் வருவார்கள் மணிக்கணக்காக நாள் கணக்காக உட்கார்ந்திருப்பார்கள் என்று நாங்கள் அவ்வளவு அதிகமாக எதிர்பார்க்கவில்லை. ஆனால் தமிழ் மொழிப் பற்று எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை மக்கள் காட்டிவிட்டார்கள். மக்களின் இந்த ஆர்வத்தைக் கண்ட வெளிநாட்டார் தத்தமது நாட்டிற்குச் சென்று கூறப்போகிறார்கள்.

எந்தத் தமிழைப் பற்றி ஆராய தமிழகம் சென்றோமோ, அந்தத் தமிழகத்திலுள்ள மக்கள்



எங்களுக்கு முன்பே நெடுங்காலம் தொட்டு ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியால் அகமகிழ்ந்து அந்தத் தமிழ்மொழியை ஆவியிலும் மேலாக நேசிக்கிறார்கள். தங்களுக்கு இன்பமளிக்கும் எல்லாச் சாதனங்களிலும் உயர்ந்ததாக நினைக்கிறார்கள். தமிழ் மொழியின் மாண்பை, எண்ணி எண்ணி மகிழ்கிறார்கள். அந்தத் தமிழுக்கு எந்தப் பக்கமிருந்து - எவரிடமிருந்து எந்த வகையான ஊறு வந்தாலும் - ஊறுவரும் என்று ஐயப்பட்டாலும் தமது இன்னுயிரைத் தந்தேனும் தமிழைக் காப்போம் - என்று அந்த வெளிநாட்டு வித்தகர்கள் தமது நாடுகளான ருஷ்யாவிலும், ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், இலங்கையிலும், மலேசியாவிலும், இந்தோனேசியாவிலும், மோரிஸ் தீவிலும், பீஜித் தீவிலும் பேச இருக்கிறார்கள். பேச வாய்ப்பும் - உரிமையும் உள்ள இடத்திலெல்லாம் பேச இருக்கிறார்கள்.

பூம்புகார் மாநாட்டில் எந்த வகையில் - எந்த முறையில் - யார் பங்கு கொண்டிருந்தாலும் - வாழ் நாளிலேயே எண்ணிப் பெருமிதம் அடையும் நாளாக இந்தப் பத்து நாட்களும் அமையும்.

இந்த மாநாட்டு மேடையில் சேரன் ஒரு நாள் நின்றிருப்பான் சோழன் இன்னொரு நாள் உலவியிருப்பான்; பாண்டியன் மற்றொரு நாள் தோன்றியிருப்பான் இளங்கோவடிகள் வந்திருப்பார். இலக்கண ஆய்வாளர்கள் வருகைபுரிந்திருப்பார்கள்!

வானத்தில் பால் நிலவு காய்

கின்ற வேளை - அந்த நில வொளிபட்டதால் கவிதா உணர்ச்சி உள்ளத்தில் பொங்கி எழுகிறது! யாப்புத் தெரியா விடினும் பால் நிலவொளி மேனியில் பட்டு இன்பம் பெருக் கிய காரணத்தினால் - அந்தப் பசுமை நினைவு மாறாத கார ணத்தால் ஒளி குன்றி அணைந் திட இல்லத்தில் இருள் சூழ்ந்தால் உள்ளம் என்ன பாடுபடும்?

வெளியிலே நிலவொளி உள்ளே இருள் வெளியே உணர்ச்சிப் பெருக்கு - உள்ளே மனம் உடைந்த நிலை! தத் தளிப்பு! தவிப்பு!

பத்து நாட்களும் தமிழ்ப் பெருமக்கள் தந்த விளக்கங் கேட்டு வான் நிலவு ஒளியில் தோன்றிய பெருமித உணர்ச் சியை அடைகிறோம்.

நிகழ்காலம் பற்றி நினைக்கும் போது விளக்கணைந்த வீடு போல் நம்முள்ளம் மாறுகிறது.

உன்னதத் தமிழைப் பெற்ற மக்களை வாழ்த்துவதா? அத் தகைய தமிழ் இருந்தும் வாழ்வில் வளமடைய முடியாத நிலை குறித்து வருந்துவதா? எனத் தெரியவில்லை.

ஐம்பெருங் காப்பியங்களும் காவியங்களும் படைத்த தமிழ் மொழியின் அருமை பெரு மையை நினைத்து மகிழ்வதா? தமிழ் மொழியைவிட வேறு மொழி சிறந்தது எனக் கூறும் சிலரும், இருப்பது கண்டு வருந்துவதா? எனத் தெரிய வில்லை.

தமிழ்ச் சமுதாயம் தமிழ் மொழி யின் அடிப்படையில்தான் இயங் குகிறது! இதை உணர்ந்திருந் தாலும் எடுத்துச் சொல்ல முடி யாமல் - எடுத்துச் சொல்லும் வகையறியாது நாம் இருக்கலாம்! ஆனால் தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ முடியும். தமிழர் வாழ்ந்தால்தான் தமிழ்ச் சமு தாயம் வாழமுடியும் என்று நாம் உள்ளூர உணர்ந்திருக்கிறோம்.

அதனால்தான் மொழிக்காக ஒரு மாநாடு என்றால் தமிழா சிரியர் மட்டும் - புலவர் மட்டும் - கற்றறிந்த கவிவாணர் மட்டும் இந்த மாநாட்டுக்கு வரவில்லை. தமிழர் அனைவரும் வந்திருக் கிறார்கள்.

அவர்களே ஒரு கவிதையாக விளங்குகிறார்கள்; அவர்கள் பேச்சிலே ஒரு பாட்டொலி. அவர்கள் மூச்சிலே தமிழ் எழுச்சி. அவர்கள் நடமாடும் போது வீரத் தமிழகமே நடமாடு வது போன்ற ஓர் உணர்வு இங்கே தோன்றுகிறது!

இங்கே ஆடவரும் வந்திருக் கிறார்கள் ஆரணங்களும், வந் திருக்கிறார்கள் இளைஞர்களும் முதியவர்களும் வந்திருக் கிறார்கள். தாய்மார்கள் தாங்கள் பெற்றெடுத்த வெற்றியான குழந் தைகளுடன் வந்திருக்கிறார்கள்.

தமிழின்பத்தைத் தாங்கள் செவிமடுப்பதோடு - தங்கள் குழந்தைகளுக்கு கருத்து விளங் கினாலும் விளங்காவிடினும் தமிழ் ஓசை இன்பம் அந்தக் குழந்தைகளின் செவி வழி புகுந்து ரத்தத்தோடு ரத்தமாய் - மழலையோடு மழலையாய் மாறட்டும் என்ற நினைப்பில் இடுப்பில் குழந்தைகளுடன் வந் திருக்கிறார்கள் தாய்மார்கள்!

அரும்பும் மலரும் பூத்திடும் பூங்காவை ஓவியமாகத் தீட்ட நினைக்கலாம் ஓர் ஓவியன் அதைக் கவிதையாக்கிடத் துணி யலாம் கவி பாடக் கற்றவன்!

நான் ஓவியனல்லன் - அதைக் கற்றுத் தோற்றவன். கவிபாடிட நினைப்பிருந்தும் நேரமில்லா தவன், எனினும் உள்ளத்தில் பதிந்ததை என்றும் மறவாமல் நினைவில் வைத்திருப்பவன்!

பூம்புகார் என்ற நகரையும் - இந்த நகரில் அந்நாளில் அமைந்த கட்டடம்போல் பழங் கால கோட்டையையும் - இங்கு ஒளிவிடும் ஒளிவிளக்குகளையும் - அந்த ஒளிவிளக்குகளையும் விஞ்சும் வகையில் மக்கள் கண்களிலிருந்து ஒளி கிளம்பி அந்த ஒளி விரவி-பரவி நிற்கும் காட்சியும் என் மனத்தை விட்டு என்றும் நீங்காது, இந்த உணர்ச்சி எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் இருக்கும்.

தமிழ் உணர்வு உள்ளத்தில் உள்ள காரணத்தால் கட்டாயம் கவிதை வரும், அதைக் கவிதை அல்ல என்று கூறுவார்கள் புல வர்கள். ஆனால் நான் கவிதை அல்ல என்று கூறமாட்டேன். இலக்கணத்தை அடிப்படையாக வைத்து அதைக் கவிதை அல்ல என்று புலவர்கள் கூறலாம். நான் உணர்ச்சியை வைத்து அதைக் கவிதை என்கிறேன்.

இன்னும் சொன்னால் - மக்கள் பார்வையே ஒரு கவிதை; மக்கள் பேச்சே ஒரு கவிதை; மக்கள் கையொலியே ஒரு கவிதை; மக்கள் வாழ்த்தொலியே



## திருவள்ளுவன்

புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச் சித்தம்
கலங்கித் திகைப்பதேன்? - வித்தகன்தெய்வப்
புலவன் திருவள் ளுவன்சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது

**- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை**

# தமிழைப்பற்றி...

'இனிமையு நீர்மையுந் தமிழென லாகும்'

**–பிங்கலம்**

'தேனுறை தமிழ்'

**–கல்லாடம்**

'தமிழ் தழீஇய சாயல்'

**–சீவகசிந்தாமணி**

'.....பாண்டியர் பாடு தமிழ் வளர்த்த கூடலின் வடா அது.....'

**–ஆசிரியமாலை, புறத்திரட்டு**

'கானார் மலயற் றருந்தவன் சொன்ன கன்னித்தமிழ்'

**–யாப்பருங்கலம்**

'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப்
பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே'

**–மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்**

'பண்டை இயற்கை வளங்களெல்லாம் -
பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் கமழும் அருந்தமிழ்
வாச நுகர்ந்து மகிழ்வோமே'

**–கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.**

ஒரு கவிதை. இங்கே எங்கும் நிறைந்திருக்கும் நாதமே ஒரு கவிதை.

இதைப்பற்றி எந்தக் கவிஞன் முழுவதும் பாடிட முடியும் அன்றலர்ந்த மலரைத்தான் கவிஞன் பாடிட முடியும், நாட்களும் மலர்ந்திருக்கும் மக்களின் முக மலர்களைப் பற்றி எந்தக் கவிஞன் பாடிட முடியும்?

ஒரு வெண்ணிலவைத்தான் கவிஞன் பாடிட முடியும்? கறையேதுமில்லாத இலட்சக் கணக்கான வெண்ணிலவுகளை எந்தக் கவிஞன் பாடிட முடியும்? மக்களே மக்களைக் கவிதையில் வடிக்க முடியும்.

முன்பு மாநிலம் ஆண்ட தமிழர் மீண்டும் அரசாளும் நாள் வருமா? எனக்கேட்ட பாரதி தாசன்- தமிழர் அரசு வரும் என்று தித்திப்பான சேதியைக் கூறினார்.

தமிழர்கள் தங்கள் அரசைப் பெற்றிருக்கிறார்களா? என்பது விரிவாக விவாதிக்க வேண்டிய விஷயம்.

முன்பிருந்த மன்னர்கள் - அலை கடலை வென்றார்கள். நமது வணிகர்கள் நாவாய்களில் ஏறிக் கொண்டு மோரிஸ் தீவுக்கும் பீஜித் தீவிற்கும் - மடகாஸ் கருக்கும் சென்று தமிழ்மணம் பரப்பினர் என்று இப்போது ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால், இந்தச் செய்தியை நமது பழம்பெரும் கதைகள் வெகுநாட்களுக்கு முன்பே கூறியிருக்கின்றன. தாரணி மெச்ச வாழ்ந்தோம் ஒரு நாள்.

வானத்தில் பறக்கும் புள்ளினம் - வேறு பக்கம் பறந்துகொண்டிருப்பினும் இனிய கானத்தில் ஈர்க்கப்பட்டு கப்பல் இருக்கும் திசை நோக்கி வரும். கப்பல் மீது புள்ளினம் சிறகடித்துப் பறப்பது - கப்பலுக்கு வானக்குடை விரித்தது போல் அக்காட்சி அமைய வேண்டும். தமிழரின் இசையை அந்தப் புள்ளினம் கேடு அவை பாட - புள்ளினத்தின் பாட்டை இவர்கள் பாட வேண்டும்.

"பறவைகளாகிய எங்களுக்குத் தூய உள்ளம். ஆகவே நாங்களும் தமிழினம்தான். உயர உயரப் போகிறோம் - இதுதான் தமிழினம் என்று கூறிட வேண்டும் அந்தப் பறவைகள்!

இந்த நாளை எண்ணித்தான் பார்க்கிறோம். எண்ணியது நடக்கும் நாம் திண்ணியராகப் பெற்றால் - என்று வள்ளுவர் கூறுகிறார்.

உலகத்தில் நாம் எண்ணியது நடக்கும் - நாம் திண்ணியராகப் பெற்றால்!

தயங்காதே தமிழா! மயங்காதே தமிழா! என்ற பாடல்களோடு தமிழர் திண்ணியராகவும் வேண்டும்! அவ்விதம் திண்ணியரானால் உலகில் அவர் எடுக்கின்ற காரியங்கள் அனைத்தும் முடியும் என்ற நம்பிக்கை - நாதம் நிறைந்த பாடத்தைப் பெற்றால் நம்மை உலகிற்கு யாரும் அறிவிக்கும் நாளும் வரும்!

**(1968-இல் நடைபெற்ற 2 வது உலகத் தமிழ் மாநாட்டின்போது பூம்புகாரில் - (சென்னைத் தீவுத் திடல்) ஆற்றிய நிறைவு விழாச் சொற்பொழிவிலிருந்து.)**

# தமிழ்க் கலாச்சாரம் வளர வேண்டும்!

## — டாக்டர் எம்.ஜி.ஆர் —

**ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்தரங்கிலே பங்கேற்று, ஆன்ற விந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களை வாழ்த்திப் பேசுகையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் குறிப்பிட்டதாவது:**

இங்கே கூடியுள்ள அறிஞர் பெருமக்கள் தங்கள் உள்ளத்தில் உருவாகியுள்ள கருத்துக்களை வெளிப்படுத்தித் தமிழ்மொழி வளரவும், எதிர்காலத்தில் தமிழகம் நன்மை பெறவும் உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கில் என்னை வாழ்த்தும்படி கூறினார்கள். என்னால் வாழ்த்த முடியுமா? தமிழ் இலக்கியத்தின் ஒரு கருத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி விளக்கிக் கூற இயலுமா என்ற சிந்தனை என்னிடத்தில் தோன்றினாலும், என் உள்ளத்தில் தோன்றும் கருத்தை, எண்ணத்தை எதையும் தாங்கும் இதயத்தோடு வெளிப்படுத்தப் பின்வாங்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டில் பிரதிநிதிகளாக வந்திருக்கும் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் சில பிரச்சினைகளைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் தங்களை வெளிநாட்டவர் என்று கருதிக் கொள்ள வேண்டாம். தமிழுக்குச் சொந்தக்காரர்கள் எல்லோரும் சமம். நமக்கு இருக்கும் உரிமை அவர்களுக்கும் (வெளிநாட்டவர்) உண்டு.

தமிழ் அறிஞர்களைப் பிரித்து நோக்குவது எங்கள் நோக்கமல்ல. ஆராய்ச்சிக் கருத்தரங்கிற்கு மக்கள் கூட்டம் தேவையுமில்லை. அறுவைச் சிகிச்சை நடைபெறும் இடத்தில் மருத்துவர்கள் தங்கள் காலணிகளைக் கூடக் கழற்றி வைக்கவேண்டும். கட்டுப்பாட்டோடு இருந்தால் தான் அறுவைச் சிகிச்சை ஒழுங்காக நடைபெறும். அதனால் தான், பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

மாநாட்டின் வெற்றியின் பாராட்டுக்கு நான் மட்டும் சொந்தக்காரனல்ல; இரவு பகலாக உழைத்த அமைச்சர்கள், அதிகாரிகள், ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள். அவரவர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து காரியங்கள் ஒழுங்காக நடைபெற ஒத்துழைத்தார்கள்.

குமரிக்கண்டம் என்பது பற்றி இலங்கையைச் சேர்ந்த அமைச்சர் ராஜதுரை ஒரு பிரச்சினையை எழுப்பினார்.

நான் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.



தமிழகத்தில் முதலில் ஒரு உலகத் தமிழ் மாநாடு நடந்தது. இப்போது இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது. முதலில் நடந்த மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்துக்கள் பற்றியும் எதுவும் முயற்சி எடுக்கவில்லை என்று கேட்கலாம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்கெல்லாம் வழி வகுத்திருக்கிறார். அலட்சியப்படுத்தவில்லை. இடையே அதற்குத் தேவையான விளம்பரம் தரப்படவில்லை.

அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால்தான், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு

நடைபெற்றிருக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இங்கே அமைக்கப்படும் தமிழ்ச் சங்கம், ஐந்தாவது சங்கமாகவோ ஆறாவது சங்கமாகவோ இருக்க வேண்டும் என்று விரும்பவில்லை.

உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் தெரிந்த ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் இச்சங்கம் அமைக்கப்படும்.

டெல்லி, பம்பாய், காஞ்சி, மதுரை ஆகிய இடங்களில் தமிழ்ச் சங்கம் இருக்கிறது. மதுரையில் மீண்டும் அமைக்கப்படும் சங்கம் எந்தத் தமிழ்ச் சங்கமாக அமைவதும் சரியாக இராது.

வெளிநாடுகளிலும் உலகத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்புகளை ஏற்படுத்தி அதற்கான விதிகளை ஏற்படுத்தி, ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ ஆராய்ச்சியாளர்கள் கூடி, தங்களின் புதிய கண்டுபிடிப்பை அனுப்ப வேண்டும். அப்படிச் செய்பவர்கள்தான் அடுத்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு அழைக்கப்படுவார்கள்.

தமிழ் நலன், தமிழின் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ்க் கலாச்சாரம் வளர வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.

இந்த அரசு இருக்கும் வரை அதற்காக ஒத்துழைப்பு தருவோம் என்ற உத்தரவாதத்தைத் தரத் தயார்.

இந்த மாநாட்டின் அழைப்பிதழ் ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டிருந்ததாகக் குறை கூறினார்கள். சஞ்சீவியே குறையைச் சொன்னார். தமிழாராய்ச்சிக் கழகம் அழைப்பிதழைத் தயாரித்தது. வெளிநாட்டவர்களும் புரிந்து கொள்ள வசதியாகத்தான் ஆங்கிலத்தில் அழைப்பிதழ்

# உயரிய பண்பாட்டின் களஞ்சியம்

## மறைந்த குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள்

இந்த உலகத் தமிழ் மாநாட்டுடன் தொடர்பு கொள்வதை ஒரு பேறாக நான் கருதுகிறேன். தென்கிழக்கு ஆசியாவின் ஆக்கமுள்ள பரந்த கலாச்சாரத்தின் ஒரு களஞ்சியமாகத் தமிழ் விளங்குகிறது.

இந்த மாநாட்டைத் துவக்கிவைக்கும்படி என்னை அழைத்ததன் மூலம், உண்மையில் நாம் எவ்வாறு ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறோம் என்பதையும், கலாச்சார ஆன்மிக ஒற்றுமை உணர்வை எவ்வாறு வளர்க்க முடியும் என்பதையும் மேலும் தீவிரமான முறையிலும் புதிதாகவும் நான் தெரிந்து கொள்ளும்படி அழைத்திருக்கிறீர்கள்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே உள்ள முக்கியத் தொடர்புகளைத் தமிழ் மொழி இணைத்திருக்கிறது. நம் நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால், தமிழ் ஒரு சர்வதேச மொழியாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் எல்லைகள் பழமையானவை. நில எல்லைகளையும் கலாச்சார எல்லைகளையும் தாண்டிச் செல்கின்ற ஒரு பண்பாட்டையும் தமிழ் மொழி பெற்றிருந்தது. தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம் தமிழ்நாடு பரவியிருந்தது. வடக்கில் இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் திரைகடல்களையும் அந்தக் கடலுக்கு அப்பாலுள்ள நிலங்களையும், அது கண்டது.

***–சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து .. (3.1.1968)***

அச்சடிக்கப்பட்டது. தமிழைப் பின்னால் தள்ளும் எண்ணம் கிடையாது. தமிழிலும் அழைப் பிதழ் அச்சிடப்பட்டது.

மொரிஷியஸ் தீவு மக்களுக்குத் தமிழ் படிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள். இதற்கு வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் ஒரு அரசு உத்தரவில் கையெழுத் திட்டிருக்கிறேன். மூன்று நான்கு மாதமாகிறது. இங்கிருந்து தமிழா சிரியர்களை மொரிஷியஸ் தீவுக்கு அனுப்ப உத்தரவில் கையெழுத்திட்டிருக்கிறேன். மத்திய அரசு அனுமதி கிடைத் ததும், தமிழாசிரியர்கள் அனுப்பப் படுவார்கள்.

நாங்கள் இதையெல்லாம் விளம்பரம் செய்து கொண்டிருக் கவில்லை. எங்களால் முடிந்த அளவு தமிழருக்கு, தமிழ்நாட் டிற்கு, தமிழுக்குத் தொண்டு புரிந்து வருகிறோம். தமிழுக்கு ஒன்றும் செய்யாமல் ஒதுங்கி யிருக்கவில்லை. இங்கே நடை பெறும் மாநாட்டில் எப்படிப் பட்ட பேரறிஞர்கள் எல்லாம் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறேன்.

பேரறிஞர் அண்ணா, உப தேசித்த அறிவுரைகள், "ஏதாவது ஒரு வகையில் நம்மைவிட மற்ற வர்கள் சிறந்திருப்பார்கள். அவர் களை மதித்து நடக்க வேண்டும்" என்று சொன்னார். என் தாயும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்டவர்களை மதித்து வருகிறேன்."

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

# பட்டிமண்டபம்

புலவர்கள் இருந்து தமிழாராய்ச்சி செய்வ தற்கு மிக வசதியாக ஒரு மண்டபம் அக் காலத்திலிருந்த பாண்டிய அரசனாற் கட்டிக் கொடுக்கப்பட்டது. அம்மண்டபத்திற்கு, 'பட்டி மண்டபம்' என்று பெயர். இது,

"தெற்கண் வாயில் திறவாத பட்டிமண்ட பத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின" (தொல். செய், சூத்திரம், 179 பேர்) என்பதனாலறியப்படுகிறது. இன்னும்,

"பட்டிமன் றென்னன்" (தேவாரம்)

"பட்டிமண்டப மேற்றினை யேற்றினை"
(திருவாசகம்)

"பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்"
(மணிமேகலை)

"பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்"
(கம்பராமாயணம்)

என்பவற்றால் அப்பெயர் முன்பு வழங்கி வந்தமை புலனாகிறது. இப்படியே வேறு சில ஆதாரங்களுமுண்டு. பட்டியென்ற சொல் வரம்பு கடந்து நடக்கு மிருபாலாரையும் குறிப் பாகக் காலக்கிரமத்தில் வழங்கிவந்துவிட்டமை யால் அதனையறிந்த பெரியோர் அப்புலவர் தொகுதியைத் தொகை, சங்கம், கூடல், கழகம் என்னும் பெயரால் வழங்குவராயினர்.

"மதுரைத் தொகை யாக்கினான்"
(தேவாரம்)

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி"
(தேவாரம்)

"கூடலினாய்ந்தவொண் டீந்தமிழ்"
(திருக்கோவையார்)

"கந்தனை யனையவர் கலைதெரி
கழகம்" (கம்பராமாயணம்)

—'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்' என்னும் நூலில் டாக்டர் உ.வே. சாமிநாதையர்.

# சித்திர விளக்கு

– உவமைக் கவிஞர் சுரதா



பாரிதான் மனித மேகம்;
    பறவைதான் உயிர்வி மானம்;
மாரிதான் முகிலின் வேர்வை;
    மௌனந்தான் உதட்டின் போர்வை;
ஏரிதான் வயலின் தாய்ப்பால்;
    எரிகின்ற விளக்கே! எண்ணெய்ச்
சூரியன் நீதான்! தீயின்
    தொடர்கதைச் சுருக்கம் நீதான்.

சித்திர விளக்கே! உன்றன்
    தேகமோ, கன்னார் செய்த
பித்தளைப் பள்ளம்! உன்றன்
    பெருமூச்சே புகையாம்! காதல்
நித்திரைக் கேற்ற வெள்ளை
    நிலவினில் ஆணும் பெண்ணும்
ஒத்திகை பார்ப்பர்; நீயோ
    உன்னடி நிழலைப் பார்ப்பாய்!

எரிகின்றாய் அரும்பு போலே
    எனினும்நீ எரிவ தற்குத்
திரிவேண்டும்; எண்ணெய் வேண்டும்;
    தீக்குச்சி வேண்டும்-பெண்ணின்
வரிவிரல் உதவி வேண்டும்;
    மழைநீரோ, தென்றல் காற்றோ
ஒருதரம் உன்மேற் பட்டால்
    உன்னுயிர் உடனே போகும்.


தாண்டுகோல் ஒருவன் பெற்றான்;
    தலைக்கோலை ஒருத்தி பெற்றாள்;
தூண்டுகோல் அதைநீ பெற்றாய்;
    துலாக்கோலை வணிகன் பெற்றான்;
ஈண்டெனைத் தொடாதே என்றால்
    என்மகன் கேட்பான். உன்றன்
வேண்டுகோ ளதனை அந்த
    விட்டில்தான் கேட்ப தில்லை!


# இளைஞர்கள் எழுக இன்றே!

புலவர் புலமைப்பித்தன்

புலிக்கொடி பறக்க சோழன்
  பூமியில் தமிழ்மா நாடு
அலைகடல் எழுந்து வந்தே
  ஆர்ப்பரித் திடுதல் போல
மலைநிகர் தோள்உ யர்த்தி
  மாத்தமிழ் மறவர், தாய்மார்
ஒலிமுழக் கங்கள் வான்போய்
  உயர்ந்திட வருவீர் ஆங்கே!

பார்த்திடும் பக்கம் எங்கும்
  பைந்தமிழ் வாழ்க என்றே
ஆர்த்திடும் முழக்கம் வையம்
  அதிர்ந்திடச் செய்க! நெஞ்சை
ஈர்த்திடும் இலக்கி யத்துக்
  காட்சிகள் பொலிய வண்ணத்
தேர்களின் வரிசை தஞ்சைத்
  தெருவெலாம் நடக்கக் காண்போம்!





படையது பெருத்த தாலே
பாரது சிறுத்த தென்னும்
நடைமுறை நேரில் காணும்
நாளிந்த நாளே! இந்த
உடலது மண்ணுக் கென்றும்
உயிரது தமிழுக் கெனினும்
இடையறாத் தமிழ்த்தொண் டாற்ற
இளைஞர்கள் எழுக இன்றே!

எந்தமிழ் நாடான இனிய
எமதருந் தலைவி இன்பச்
செந்தமிழ் வளர்ச்சிக் காகச்
செய்திடும் செலவும் அன்னார்
சிந்தையில் கொண்டி ருக்கும்
சிறப்பான உணர்வும் வெல்ல
வந்தது திருநாள் என்றே
வருவீர்கள் தஞ்சை நோக்கி!

# வாழ்க புரட்சித் தலைவி



**—கவிஞர் முத்துலிங்கம்**

(1)

தமிழுக்குத் தொண்டுசெய்த தமிழறிஞர் அண்ணாபோல்
தகுதியாலே
இமிழ்கடல்சூழ் தமிழ்மக்கள் இதயமெலாம் வீற்றிருக்கும்
எம்.ஜி.ஆர்.போல்
அமிழ்தனைய தமிழுக்கிவ்வுலகளவில் விழாவெடுக்கும்
ஆற்றல்மிக்க
தமிழ்முதல்வர் ஜெயலலிதா தனக்குவமை இல்லாஇத்
தலைவி வாழ்க!

(2)

இனிஎவரும் இப்படிஓர் விழாவெடுக்க இந்நாட்டில்
இயலாதென்றே
கனிஇனிமைத் தமிழ்மொழிக்குக் கச்சிதமாய்
விழாவெடுத்த கருணைதன்னைப்
பனிமொழியில் பாராட்டி பால்மொழியில் சீராட்டிப்
பாடிவைப்போம்!
நனிபுகழில் உறைகின்ற நம்முதல்வர் ஜெயலலிதா
நாளும்வாழ்க!

(3)

திறமைக்கு மதிப்பளித்து, சிறப்புக்கள் பலசெய்யும்
சீர்த்திமிக்க
அறங்காக்கும் திருமகளாய் அவதரித்த ஜெயலலிதா
அன்னைபோலே
பிறந்தோர்கள் எவருமில்லை பெருநிலத்தில் இனிமேலும்
பிறப்பாரில்லை!
மறத்திவழி ஆளுமிந்த மாதரசி மக்களுக்கு மழைபோல்
வாழ்க!



# தமிழ் மாநாடு! புகழின் ஏடு!



தாயிருந்து படைக்குமொரு தமிழ்மா நாடு!
தனியிருந்து படிக்குமொரு புகழின் ஏடு!
போயிருந்து தஞ்சையினைப் பார்த்தேன்! அந்தப்
புதுமையினை என்னசொல்வேன்? அடடா! கோடி
வாயிருந்து வருணிக்க முடியா வண்ணம்
வார்க்கின்றார் புதிதாகத் தஞ்சை தன்னை!
நோயிருந்து காணுமொரு விழியி னோரே!
நோவாதீர்! தஞ்சையினைச் சென்று காணீர்!


ஏழுமுறை உலகளவில் தமிழ்மா நாடு,
எழுந்தமுறை நாமறிவோம்! தமிழ்எங் கெங்கும்
வாழுமுறை நாமறிவோம்! தமிழை ஏந்தி
வளர்ப்புமுறை தனையும்நாம் அறிவோம் நன்றாய்!
ஏழேழு பிறவியிலும் தமிழை யன்றி
ஏற்கின்ற மொழிநமக்கு உலகில் இல்லை!
கூழுதனைக் குடித்திடநாம் மறந்த போதும்,
கொஞ்சுதமிழ் மொழிமறந்து வாழ மாட்டோம்!

எட்டாத புதுக்கீர்த்தி தமிழுக் கிங்கே
எய்துதற்கு எட்டாம்மா நாடு கண்டோம்!
கட்டாத கோபுரத்தைத் தமிழுக் காகக்
கட்டிடுவோம்! தமிழ்நமக்குக் கலச மாகும்!
பட்டாளத் தமிழர்நாம்! உலக மெங்கும்
பைந்தமிழைப் பரப்பிடுவோம்! பகைவர் எந்த
வட்டத்தில் வாழ்ந்தாலும், தமிழை நன்றாய்
வாழவைப்ப தேநமது திட்ட மாகும்!

புகழ்பூத்த நம்புரட்சித் தலைவி, இன்பப்
புதுவாழ்க்கை தமிழுக்குத் தரப்போ கின்றார்!
இகழ்பூத்த சிலர்வீணே துள்ளு கின்றார்!
எங்கிருந்தோ சேற்றையவர் அள்ளு கின்றார்!
பகல்பூத்த வானமெங்கள் தலைவி! எந்தப்
பகைபூத்த போதினிலும் அஞ்ச மாட்டார்!
சிகரத்தைத் தமிழுக்குப் படைப்பார்! சட்டம்
செய்துதமிழ் மொழிக்குமுதல் இடத்தை ஈவார்!

சாதனையின் தேவியிடம் நாட்டின் ஆட்சிச்
சக்கரம்தான் சுழல்வதனைப் பார்க்கின் றோம்நாம்!
வேதனையின் குரல்எங்கே வெளிப்பட் டாலும்
விரைந்தோடி அதன்துயரை மாற்றி வைப்பார்!
நாதமெனும் தமிழுக்குக் குறையா வைப்பார்?
நல்லதொரு முடிவெடுப்பார்! தமிழைக் காப்பார்!
சேதிவரும் காத்திருப்போம்! இவரை யன்றிச்
செந்தமிழைக் காக்குமொரு தலைவர்இல்லை!

—புலவர் இளஞ்செழியன்





# புதிய தமிழ் யுகம் எழுகிறது

எட்டுத் திசையும் கொட்டி முழக்கும்
இன்பத் தமிழின் மாநாடு
இத்தரை போற்றும் முத்தமிழ் முதல்வர்
கூட்டிய எட்டாம் மாநாடு!

எத்திசை வாழும் தமிழரும் ஒன்றாய்
இணைகிற எட்டாம் மாநாடு
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
எனும் இசை கேட்கிற மாநாடு!

தொன்னூற் றைந்தாம் ஆண்டு பிறக்கையில்
தோன்றுது புத்தொளி தஞ்சையிலே
தொன்மைத் தமிழின் புதுமைப் பயிர்கள்
துலங்குது காவிரி நஞ்சையிலே!

ஆயிரம் ஆயிரம் அருமைகள் பெருமைகள்
அழகிய முத்தமிழ் தனியுடைமை
அறிவியல் தமிழெனும் நான்காம் பிரிவும்
அன்னைக் காகும் இனியுடைமை!

ஆயிரத் திருநூ றாகிய அறிஞர்கள்
ஆய்வாம் மணிமுடி சூடுகிறார்
அறிவுத் திருமகள் புரட்சித் தலைவி
அழைப்பினில் தஞ்சையில் கூடுகிறார்!

இயலும் இசையும் இன்றமிழ்க் கூத்தும்
எல்லா வேளையும் விருந்தாகும்
இத்தனை காட்சியை எப்படிப் புகழ்வது
என்பது வார்த்தையின் தவிப்பாகும்!

வான்மகள் ஏந்தும் மேன்மைகள் தாங்கும்
வானவில் வண்ணம் ஏழாகும்
வரலா றாகும் தமிழ்மா நாட்டின்
தோரண வாயிலும் ஏழாகும்!

புரட்சித் தலைவியின் அழைப்பை ஏற்றுப்
பூமிப் பந்தே மகிழ்கிறது
பூவிரி சோலைக் காவிரிக் கரையில்
புதிதாய்த் தமிழ்யுகம் எழுகிறது!







**கவியரசர் இளந்தேவன்**

# அறிவுச்சோலை

—கவிஞர் சங்கரலிங்கம்

படிப்பதனால் அறிவுவரும் தினமும் ஆழ்ந்து
பயில்வதனால் தெளிவுவரும்; இலக்கி யத்தேன்
குடிப்பதனால் கிளர்ச்சிவரும் மிகச்சி றந்த
கொள்கைகளும் நமக்குவரும் புலமை யாற்றைக்
கடப்பதனால் வாய்மைவரும் எவர்க்கும் நன்மை
கருதுவதால் பெருமைவரும் அறிஞர் பாதை
நடப்பதனால் உயர்வுவரும் எதையும் தேடி
நாடோறும் கற்கவரும் புதும லர்ச்சி!

கற்றதனால் மதிப்புவரும் அவற்றை நித்தம்
கடைப்பிடித்தால் வாழ்வுவரும் உயர்ந்த ஞானம்
பெற்றதனால் பணிவுவரும் உலகை வெல்லும்
பெருஞ்சிறப்புத் துணிவுவரும் இழிந்த எண்ணம்
அற்றதனால் அமைதிவரும் எழுச்சிச் சிந்தை
அறிவியலால் பொலிவுவரும் தினம்ப டிக்கும்
பற்றதனால் திறமைவரும் அறிவுச் சோலை
பயன்நல்கும் மலர்கள்வரும் மிகம ணக்கும்!

ஆட்சிவரும் வலிமைவரும் கேள்வி ஞானம்
அடைவதனால் நுட்பம்வரும் தமிழ்ப டிக்க
மாட்சிவரும் அழகுவரும் புவிம ணக்கும்
மரகதப்பொன் ஒளிவளரும் முதுமைக் கோலக்
காட்சிவரும் பொழுதினிலும் படித்து வந்தால்
கவினிளமை தொடர்ந்துவரும் அனைவ ருக்கும்
ஏட்டில்வரும் கல்வியினும் அனுப வத்தால்
எழுந்துவரும் பேரறிவை உலகம் போற்றும்!

கேட்டுவரும் திறமையிலும் வினாக்கள் கோடி,
கிளக்கவரும் பகுத்தறிவு அமுதக் கம்பன்
பாட்டுவரும் திசைநோக்கிச் செவிகொ டுத்தால்
பயன்நல்கும் சுவையரும்பும் புத்த கத்தின்
மாட்டுவரும் பெருங்காதல் நமக்கு நல்ல
மாண்புதரும் மேன்மைவரும் ஞானக் கோயில்
கூட்டுவரும் நன்னெறியில் தொடர்ந்து நின்றால்
கோபுரத்துப் பொன்சுடராய் வரும கிழ்ச்சி!

இருள்நீங்கி ஒளிவளரும் திசையில் நல்ல
ஏற்றமிகு கலைவளரும் உழைத்துச் சேர்க்கும்
பொருள்நீங்கி வறுமைதரும் நிலையில் கூடப்
புகழ்க்கல்வி துணைக்குவரும் வணங்கும் தெய்வ
அருள்நீங்கி அகன்றாலும் ஒழுக்க முள்ளோர்
அமுதமொழி நமைக்காக்கும் சமுதா யத்தின்
மருள்நீங்கப் பேரொளியைக் கொளுத்தும் போதும்
மானிடரில் சிலரின்னும் பெறாத தேனோ!






# ஊனமுற்றோர் நலனுக்கான பன்னாட்டு மாநாடு:

## -மாண்புமிகு முதல்வர் உரை

என்னுடைய அழைப்பை ஏற்று வருகை புரிந்துள்ள மாண்புமிகு மத்திய சமூக நலத்துறை அமைச்சர் திரு சீதாராம் கேசரி அவர்களையும், பிற மாநிலங்களிலிருந்து வருகை புரிந்துள்ள சமூகநலத்துறை அமைச்சர்களையும், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்துள்ள இத்துறையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களையும், தமிழக மக்களின் சார்பாகவும், தமிழக அரசின் சார்பாகவும் வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். உடல் ஊனமுற்றோர்களின் தற்போதைய நிலைமை, உரிமைகள் மற்றும் நலவாழ்வு ஆகிய முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க நாம் இங்கே கூடியுள்ளோம். இந்த விவாதங்களின் மூலம், ஊனமுற்றோர் நலனுக்கான மாநிலக் கொள்கை உருவாகும் என்று நம்புகின்றேன்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து தமிழக அரசு விவாதித்துக் கொண்டிருக்கின்றது. இந்த உன்னத நோக்கங்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டுள்ள, -அறிவாற்றலை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வந்துள்ள, உங்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊனமுற்றோர் மீது எங்களுக்குள்ள உண்மை






யான ஈடுபாட்டையும்,அக்கறையையும் குறிக்கும் ஒரு மாநிலக் கொள்கையை வகுக்க இது வழிவகுக்கிறது.

உடல் ஊனம் என்பது என்ன? நாம் ஒவ்வொருவரும் ஒருவகையில் ஊனமுற்றுள்ளோம். ஊனமுற்ற அளவு மாறுபடலாம். ஒருவர் வறுமையினால் ஊனமுற்றிருக்கலாம். அல்லது மனவளம் குன்றியிருக்கலாம். எனவே, முதலில் நாம் ஊனமுற்றோரிடையே உள்ள மனோதத்துவ ரீதியான தடைகளை நீக்க முயலுவோம். பிறகு, அவர்களது சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சி செய்வோம். அப்பொழுதுதான் அவர்களின் வாழ்க்கைத் தரம், நாம் ஒவ்வொருவரும் அடைய விரும்புமளவிற்கு, அவர்களும் அடைய இயலும்.

மாநிலத்தின் வழிகாட்டியாக விளங்கும் அளவிற்கு ஊனமுற்றோர்க்கான கொள்கையை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். ஒரு கொள்கையை வடிப்பதற்கும், அதை அமல்படுத்துவதற்கும் நிறைய நிதி ஆதாரங்களும், மனித வளமும்,பயிற்சியும் தேவைப்படுகின்றன. பிறவியிலேயே ஊனத்தைத் தடுக்கவும், அவர்களது வாழ்க்கை முழுமைக்கும் புனரமைப்புத் திட்டங்களை அமல்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளையும் சேவைகளையும் பல்வேறு திட்டங்களின் கீழ் ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. குறிப்பாக நலவாழ்வு, சத்துணவு, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல், போன்றவை அதில் அடங்கும். அரசுத் துறைகளையும், தங்களது ஆதரவையும் நேரத்தையும், நிதியையும் தந்துதவ முன்வரும் அரசு சாரா நிறுவனங்களையும் நாம் இணைக்க வேண்டும். அத்தகைய ஒருங்கிணைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டால் தான் இந்தக் கொள்கை அமல்படுத்தப்படத் தேவையான ஒரு முழு சக்தியையும், ஊனமுற்றவர்கள் கல்வி, பயிற்சி, பொருளாதார, சமூக புனரமைப்புச் சேவைகள் ஆகியவற்றின் மூலம் சுறுசுறுப்பாகவும், தன்னம்பிக்கையுடனும் மாநிலத்திற்கும், தேசத்திற்கும் ஆக்கப்பூர்வமான உதவிகளைப் புரியும் குடிமக்களாகத் திகழ்வார்கள்.

கருவிலேயே ஊனங்களைத் தடுப்பதற்குத் தேவையான ஆராய்ச்சி முயற்சிகளைப் பற்றி

நாம் பேசும்போது அதற்குத் தேவையான நேரம், சக்தி, திறமை, பயிற்சி மற்றும் பொறுமை ஆகியவற்றிற்குக் கணிசமான ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. நம்மைப் போன்ற, அரசாங்கத்திலும், பொது நிர்வாகத்திலும் உள்ளவர்களுக்கு இந்தப் பிரச்சினைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அதன் எல்லைகளை மட்டும் தொட்டுள்ளது என்பது தெரியும். மாநிலத்தின் மக்கள் தொகையில் 2 சதவிகிதம் ஊனமுற்றோர்களாக இருக்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ரூபாய் 2,750 கோடியாக உள்ள மாநில வருடாந்திரத் திட்ட மதிப்பீட்டில், 2 சதவிகிதம் அதாவது ரூ.55 கோடி ஊனமுற்றோர் நல்வாழ்விற்காக ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், நிதிப்பற்றாக்குறை காரணமாக, நடப்பு நிதியாண்டில் ரூபாய் 8.40 கோடி மட்டும் நம்மால் ஒதுக்க முடிந்தது. எனினும் 1978-79-இல் ஒதுக்கப்பட்ட 39 இலட்ச ரூபாயைவிடவும், 1989-90-இல் ஒதுக்கப்பட்ட ரூ.400 இலட்சத்தை விடவும் இது அதிகமே.

இந்தத் தருணத்தில் நம்மால் நிதி ஆதாரங்களைத் திரட்ட முடிந்து இந்த உன்னத காரணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்ய முடிந்தால், மத்திய அரசு 200 சதவிகிதம் இதற்கு இணையாக ஒதுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் இந்தத் திட்டங்கள் நிறைவேற நீண்ட காலமாகும்.

இன்றைய தினம் நாம் இங்கு கூடி ஒற்றுமையுடனும் உன்னத நோக்கத்தோடும் விவாதித்து, தனிப்பட்ட ஊனமுற்றோர்க்காகவும் ஒட்டு மொத்தத் திட்டங்களுக்காகவும் திட்டங்கள் வகுத்து அதன் மூலம் கல்வியாளர்கள்,மனோதத்துவ நிபுணர்கள், துணை மருத்துவ ஊழியர்கள், சுகாதார ஊழியர்கள் ஆகியோர் தங்களுடைய திறமைகளை வளர்த்துக் கொண்டு, உடலாலும் உள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட சகோதரர்களுக்கு உதவி செய்ய வழி வகுப்போம்.

ஊனமுற்றவர்களுக்கு மாநில அரசுகள் மட்டுமல்லாமல் ஒவ்வொரு குடிமகனும் உதவி செய்யும் வகையில் புதிய சேவை மாதிரிகளை உருவாக்குவதில் உங்களுடைய உதவியை நாடுகிறேன். தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள இயலாதவர்களுக்கு உதவ வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் உலகின் பல பாகங்களிலிருந்தும், நாம் இங்கே கூடியுள்ளோம். நம்முடைய முயற்சிகள், ஊனமுற்ற நமது சகோதர சகோதரிகளின் சுமையையும் வேதனையையும் குறைக்க வேண்டும். அடுத்தவரின் துன்பத்தைப் போக்குவததுதான், நாம் மனித சமுதாயத்திற்குப் புரியும் உன்னதமான சேவையாகும். நமது விழிகளையும் செவிகளையும் கூர்மையாக்கி, திறந்த மனதுடன் ஊனமுற்றோரின் செவி, விழி வழியாக தைரியமாக உலகத்தைக் காண்போம். அப்பொழுது, ஊமைகளின் குரலை நாம் கேட்க முடியும். காது கேளாதோர் குரலை நாம் கேட்க முடியும். கால் ஊனமுற்றோருடன் நடக்க முடியும். மனநலம் குன்றியோருடன் உரையாட முடியும்.

இந்த அகில உலக மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன். இங்கு நடைபெறும் விவாதங்கள் பயனளிப்பவையாகவும் தேவையுள்ளவர்களுக்கு உதவுவதாகவும் அமையும் என்று நான் நம்புகிறேன்.

# ஊனமுற்றோர் நலனுக்கான மாநிலக் கொள்கையை வெளியிட்டு மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை

இந்த உன்னதமான பணியில் உங்களுடன் பங்கு கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்று காலை நாம் கூடி, அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள, ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கான அரசு கொள்கையை விவாதித்தோம். அது ஒரு செயல் திட்டமாக மட்டுமல்லாமல், குணப்படுத்தக்கூடிய நலத்திட்டமாக அது எவ்வளவு செலவானாலும், தேவையான நிதியைத் திரட்டி, அமல்படுத்துவோம். பல்வேறு

துறைகளிலிருந்து, உலகெங்குமிருந்து வருகை தந்து, இந்தக் கொள்கையை உருவாக்குவதில் தங்களது மேலான ஆலோசனைகளை நல்கி உறுதுணை புரிந்த நிபுணர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகமெங்கும், மனிதர்கள் உடல் ஊன முற்றோரிடம் கனிவாக நடந்து உதவிபுரிந்து வருகின்றனர். இரண்டு உலகப் போர்களினாலும் அதற்குப் பின் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளினாலும் இந்த எண்ணம் உருவாகி வளர்ந்திருக்கலாம். இந்த நூற்றாண்டு மட்டும், என்ன காரணத்தைக் கொண்டோ, கடவுள் படைத்ததைவிட அதிகமாக, ஊனமுற்றோர்களைப் படைத்துள்ளது.

நாம் விதியுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்று பெருமையாகக் கூறுகிறோம். ஆனால், ஊனத்துடன் பிறந்த அல்லது பெற்றோர்களின் கவனக்குறைவால், அறியாமையால் பிறந்த ஊனமுற்ற குழந்தைகளைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் எங்கே சென்று கொண்டிருக்கின்றனர்? அவர்கள் மெதுவாக, விரக்தியுடன் தங்கள் விதியின்படி சென்று கொண்டிருக்கின்றனர். இங்கே ஆங்கிலேயக் கவிஞர் மில்டனின் அழகிய வரிகளை நினைவுகூர விரும்புகிறேன்.

''So much the rather thou,
Celestial light, Shine inward''

(said Milton when he became blind)

'And the mind through all her powers
Irradiate; there plant eyes;
all mist from thence
Purge and disperse
that I may see and tell
Of things invisible to mortal sight''

இசைமேதை பித்தோவன், காது கேளாதவராக இருந்தார் என்பது உங்களுக்குத் தெரியும். மனித சக்திக்கும் அப்பாற்பட்ட உறுதியுடன், பித்தோவன் தன் இசையின் தரத்தைத் தொடர்ந்து காப்பாற்றினார் என்றால், அதுவே ஒரு மகத்தான சாதனையாகும். இருப்பினும், உண்மை, கதைகளைவிட ஆச்சரியமானது ஏனெனில், பித்தோவன் தன் செவித்தன்மைகளை முற்றிலுமாக இழந்த காலக்கட்டத்தில்தான், தன் வாழ்வின் மிகச் சிறந்த இசையை மீட்டினார். "வித்தியாசமான திறமை கொண்டவர்கள்" (ஊனமுற்றோர்களை அல்லது இயலாதவர்களை நாம் அப்படித்தான் அழைக்க வேண்டும்.) சரியான சூழ்நிலை அளிக்கப்பட்டால், அதிசயங்களை உருவாக்குவார்கள்.

தேசத்தின், மாநிலத்தின், கொள்கைக் கண்ணோட்டம், போக்கு ஆகியவற்றைப் பொறுத்தே முன்னேற்றம் அமையும். இந்த உணர்வுக்கு ஒரு வடிவம், ஓர் அமைப்பு, பாதை, வேகம் ஆகியவற்றைத் தரவேண்டுமெனும் வேட்கைதான், முன்பு மகளிர்க்கான ஒரு கண்ணோட்டத்தையும், குழந்தைகள் நலனுக்காக 15 அம்ச திட்டத்தையும், தற்போது ஊனமுற்றோர் நலனுக்காக அரசு கொள்கையையும் அறிவிக்கத் தூண்டியது.

நல்ல வேளையாக, புனரமைப்பிற்கான மருந்துகள், இந்நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்தது போன்று ஆரம்ப நிலையில் இல்லை. பயங்கரமான இரண்டு உலகப் போர்கள், இத்துறையில் ஒரு வேகத்தை ஏற்படுத்தி, மறுவாழ்விற்கான மருந்துகள், குறிப்பாக, தொழில்நுட்பம், புரட்சிகரமான மாறுதலைக் கொண்டுவந்தது. ஊனமுற்றோர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளத்தக்க வகையில் உதவிப் பொருட்கள், வழிமுறைகள் ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டு, உலகெங்கும் உள்ள இலட்சக் கணக்கான ஊனமுற்றோர், தன்னந்தனியாகவே சமுதாயத்திற்குப் பயனுள்ள வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

நான் உங்களுடன் ஒரு கதையைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு சர்க்கஸ் அரங்கில், ஒரு சர்க்கஸ் வீரர் கயிற்றின் மீது நடந்து கொண்டும், மேலும் கீழும் குதித்துக் கொண்டும் ஓடுவதை, அங்கு வந்திருந்த ஒரு திருடன் கவனித்தான். அவன் அந்த சர்க்கஸ் வீரரிடம் சென்று ஒரு வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்தின் மீது வெடிமருந்து வைக்க வேண்டும் எனக் கேட்டான். அத்திருடன் அவனை, நடுநிசி இருட்டில், காம்பவுண்ட சுவர் அருகே கூட்டிச் சென்று, குதிக்கச் சொன்னான். ஆனால் அத்திருடன் அசையாமல் நின்றான். சற்று தயங்கி பின் கூறினான், "என்னை குதிக்கச் சொல்கிறீர்களா? ஆனால், என்னைச் சுற்றி கும்பல் இருக்க வேண்டுமே. இப்போது என்னால் குதிக்க முடியாது'' என்றான். உண்மையென்னவென்றால், மக்கள் அளித்த உற்சாகமான கைதத்தட்டே அந்தச் சாதனைகளைப் புரிய அவனுக்குத் தேவையான சக்தியையும்




**உடல் ஊனமுற்றோர்க்கான 15 அம்சக் கொள்கைத் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு சீதாராம் கேசரி அவர்கள் பெற்றுக் கொண்டார்.**

உத்வேகத்தையும் அளித்தது. இந்த உற்சாகம் இல்லாவிட்டால் அவன் காய்கறிக்குச் சம மானவன். ஒரு நிர்வாகப் பூர்வமான மாதிரியை விட, சமுதாய அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படுவதற்கே முக்கியத்துவமும் உதவியும் அளிக்கப்பட வேண்டும்.

ஒரு மாணவனுக்கு, அவன் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணில் 50 சதவிகிதம் மட்டும் வழங்கப்பட்டு, வகுப்பின் சராசரி மதிப்பெண்ணின் 50 சதவிகிதம் அத்துடன் சேர்க்கப்படும் முறையைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நன்கு படிக்கும் மாணவர்கள், நன்றாக படிக்காத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக, காப்பி அடித்து அல்ல, வகுப்பின் சராசரியை உயர்த்துவதற்காக, இந்த முறை கடைப்பிடிக்கப் படுகிறது. இதுபோன்றதொரு முறை ஊனமுற்றோர் சிறப்புப் பள்ளிகளிலும் அமல்படுத்துவதுப்பற்றி கல்வியாளர்கள் பரிசீலிக்கலாம்.

ஊனமுற்றோர் வரிசையில் மனநலம் குன்றியவர்களையும் சேர்க்கலாம். வயது முதிர்ந்தவர்களையும் அத்துடன் இணைந்த பிரச்சினைகளையும் கூட இதில் சேர்க்கலாம். ஆனால், இது தனி ஒரு துறையைச் சாரும். மனவளம் பொருந்தியவர்களுக்குச் சரியான இலக்கணம் இல்லையென்பது போலவே, மனநலம் குன்றியவர்களுக்கும் இலக்கணம் இருக்க முடியாது என்றே கருதுகிறேன். நவீன நாகரீகத்தின் இடைவிடாத பீடு நடையினுடன், மனநலக்குறைவும் வளர்ந்து கொண்டே வருகிறது. சில இடங்களில் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு மனோதத்துவச் சிகிச்சை தேவைப்படுகிறது. இப்போது வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் நிலைகளில் இருபது சதவிகித மக்கள் மனநலம் குன்றியுள்ளனர். இதில் திடீரென வன்முறையில் இறங்கி, பஸ் மற்றும் பொதுச் சொத்துக்களைச் சேதப் படுத்துபவர்களும், சோர்வடைந்து, துன்பப் படுபவர்களும் அடங்குவர். இந்தக் கொள்கையில் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்படவுள்ள, நிவாரணக்குழு, மனநலக் குறைவினைப் பொருத்தமாக விளக்கி, அதன்மூலம், ஊனமுற்றோர் நலத்திட்டத்தின் கீழ் உதவி பெற வழிவகை புரியும்.

1993ஆம் ஆண்டு அதிக எண்ணிக்கையில் ஊனமுற்றோரைப் பணிக்கு அமர்த்தியமைக்காக, மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு முதல் பரிசை வழங்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உடல் ஊன முற்றோர் மற்றும் மனநலம் குன்றியவர்களுடைய பெற்றோர் இறந்தால், அவர்களின் சொத்து, ஊனமுற்றோருக்குக் கிடைக்கச் சட்டம் கொண்டு வர எனது அரசு முயற்சிக்

கும். மத்திய மாநில அரசுகள் மற்றும் சேவை நிறுவனங்களின் அரிய முயற்சிகளை ஒருங்கிணைத்து, இவைகள் வகுக்கும் திட்டங்களின் பலன்கள், உரியவர்களுக்குப் போய்ச் சேர வகை செய்வதே எங்களின் அடுத்த முயற்சியாகும்.

மாநிலக் கொள்கையை வெளியிடும் இவ்விழா வெற்றியடையச் செய்த உங்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கொள்கையை அமல்படுத்தத் தேவையான சில அறிவிப்புகளை இங்கே வெளியிட விரும்புகிறேன்.

1. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் துறைத் தலைவர்களையும் நிபுணர்களையும் கொண்ட மாநிலப் புனரமைப்புக்குழு (State Rehabilitation Council) உடனடியாக அமைக்கப்படும்.

2. இன்ஸ்டியூட் ஆப் ரிஹேபிலிடேஷன் மெடிசன் (Institute of Rehabilitation Medicine) இன்ஸ்டியூட் ஆப் ஸ்பீச் அண்டு இயரிங் (Institute of Speech and Hearing) இன்ஸ்டியூட் ஆப் ஆப்தால்மாலஜி (Institute of Opthalmology) இன்ஸ்டியூட் ஆப் மெண்டல் ஹெல்த் (Institute of Mental Health) மற்றும் இதர நிறுவனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மாநில அளவில் நிறுவனம் அமைக்கப்படும். மாநில புனரமைப்புக் குழுவின் பரிந்துரைகளை இக்குழு அமல்படுத்தும்.

3. ஊனமுற்றோர் உரிமைகளைப் பாதுகாக்கத் தேவையான சட்டபூர்வமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

4. இத்துறையில் உள்ள நிபுணர்களின் ஆலோசனைப்படி மனநலம் குன்றியவர்களும் (Mental Illness) ஊனமுற்றோர் பட்டியலில சேர்க்கப்படுவர்.

5. ஊனமுற்ற குழந்தை ஒவ்வொருவரையும் கண்டுபிடித்து 6 வயதுக்குள் பள்ளியில் சேர்ப்போம். மனமகிழ் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் தரப்படும். ஊனமுற்றோர்க்கான, பள்ளிக்கு முந்தைய கல்விக்கான நர்சரி பள்ளிகள் துவக்கப்படும்.

6. கிராமப் புறங்களிலுள்ள ஊனமுற்ற பெண்கள் பயிற்சி, வேலை வாய்ப்புக்காக, கோவையிலுள்ள அன்னை சந்தியா குழந்தைகள் வளாகம் ஆண்டுதோறும் ரூபாய் பத்து இலட்சத்தை நன்கொடையாக வழங்கும் என்பதைத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு (மகம்) மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **“எல்லா நாட்டினர், எல்லா மதத்தினர், எல்லாக் கொள்கையினர்க்கும் இன்றியமையா வாழ்க்கை ஒழுக்கங்களைத் தெளிவாக எடுத்துக் கூறும் பெருமை வாய்ந்தது”**
>
> **–மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர்**

மனோதத்துவ நிபுணர் திரு ஆர்.டி. லேங்க் கூறியதாவது

R.D. Laing, the Psychologist, said;

‘There is something I don’t know
that I am supposed to know.
I don’t know WHAT it is
that I don’t know,
and yet I am supposed to know it.
You may know
what I do not know
Still, you may not know
that I do not know
In any case
What do we tell each other?’

ஒரு பெரும் மனோதத்துவ நிபுணர் இதைக் கூறியுள்ளார். தொடர்பு கொள்வதும் அறிவைப் பகிர்ந்து கொள்வதும், குறிப்பாக ஊனமுற்றோர்களிடையே, மிகவும் சிக்கலாகிவிடுகிறது. நாம் இன்று ஒரு தொடக்கத்தைத் தான் ஏற்படுத்தியுள்ளோம்.

மனித மூளை, நமது மூளைதான் இதுவரை தயாரிக்கப்பட்டதிலேயே மிகச் சிறந்த மலிவான கணினி ஆகும்.

நீங்கள் ஒவ்வொருவரும், ஊனமுற்றோரின் பிரச்சினைகளை, யதார்த்தத்துடனும், இரக்கத்துடனும் அணுகி நடைமுறையில், அவர்களுக்கென வகுக்கப்பட்டத் திட்டங்கள் நிறைவேறப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் அவர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுங்கியிருக்கிறோம் என்ற உணர்வினைக் களைந்து சமுதாயத்துடன் இணைந்து கண்ணியத்துடன் வாழ இயலும்.

# தனிநாயக அடிகளாரும் தமிழாராய்ச்சி மன்றமும்

—கங்கைகொண்டான்—

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு காணும் நாம், உலகளாவிய மாநாடு நடத்திடும் நிலை நம் அன்னைத் தமிழுக்கு ஏற்படக் காரணமான முன்னை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றி அறிந்துகொள்ளுவது நல்லது. அதிலும் குறிப்பாக, இவ்வாறான மாநாட்டிற்கு அடிப்படை ஆதாரமாக விளங்கும் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் (International Association of Tamil Research) உருவாகக் காரணமாக் இருந்த சேவியர் தனிநாயக அடிகளார் பற்றித் தெரிந்துகொண்டே ஆக வேண்டும்.

### சில ஆதாரங்கள்

சேவியர் தனிநாயக அடிகளார் நினைவாக 18.7.1981-இல் 'தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர்' ஒன்று வெளியிடப்பட்டது. அதில், அடிகளாரைப் பற்றிப் பேராசிரியர் கா.பொ. இரத்தினம் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் அவரே "அனைத்துலகத் தமிழ் ஆரர்ய்ச்சி மன்றத்தின் தந்தையும் தாயும் அவரேயாவார்" என்று அடிகளாரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

முதல் உலகத் தமிழ் மாநாட்டுத் தொகை நூலின் பின்னிணைப்பு 1-இல் உள்ள குறிப்பில் (Proceedings of the First International Tamil Conference - Seminar P.*879)* உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தைத் தொடங்க வேண்டும் என்று முன்மொழிந்தவர் தனிநாயக அடிகளாரென்றும், வழிமொழிந்தவர் முனைவர் கமில் சுவல்லபில் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில், 1974-இல் நடைபெற்ற நான்காம் உலகத் தமிழ் மாநாட்டுக்குத் தலைமையேற்றிருந்த முனைவர் சு. வித்தியானந்தன் அவர்களும் தம்முடைய 'அருள்திரு தனிநாயக அடிகளார் நினைவு மலரில்' (பக்.44) 'மன்றத்தின் தாபகர் தனிநாயக அடிகளே' என்று குறிப்பிட்டுள்ளார்.

முனைவர் கமில் சுவல்லபில், 'தனிநாயக அடிகளே உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஞானத் தந்தை' என்று தெரிவித்திருக்கிறார்.

### நிறுவனத்தின் தோற்றம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து கீழ்த்திசை நாடுகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டனர் அனைத்து நாடுகளில் அறிஞர் பெருமக்கள். அவர்களால் கீழ்த்திசை ஆய்வாளர்கள் மாநாடு (Orientalists Conference) நடத்தப்பட்டு வருகிறது.



தமிழ்நாடு, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளின் தமிழறிஞர்களும் உலகநாடுகளிலிருந்தெல்லாம் வரும் பிறமொழி அறிஞர்களும் அம் மாநாட்டில் பங்கேற்று ஆய்வுரைகள் படிப்பது வழக்கம்.

1964 தைத்திங்களில் (ஜனவரி) டில்லியில் நடைபெற்ற கீழ்த்திசை ஆய்வாளர் மாநாட்டில், தமிழகம் புறக்கணிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தால் புண்பட்ட தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் ஒன்றுகூடின. நம் தாய்த் தமிழுக்கு மட்டும் தனியே இப்படியோர் உலகளாவிய கருத்தரங்கம் - அல்லது மாநாடு ஏன் நடத்தக்கூடாது என அவர்களால் விவாதிக்கப்பட்டது. அதன் விளைவாகத் தோன்றியதுதான், 'உலகத் தமிழாராய்ச்சி மன்றம்' (International Association of Tamil Research).

### முக்கியமானவர்கள்

இந்த முடிவு மேற்கொள்ளப்பட முனைந்து கூடிய அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் ஆவார்.

தவத்திரு தனிநாயக அடிகள், பேராசிரியர் கா.பொ. இரத்தினம் (இலங்கை), முனைவர் மு. வரதராசனார். திரு ஏ.சுப்பையா, முனைவர் சாலை இளந்திரையன் (இந்தியா), முனைவர் ஜான் பிலியோசா (பிரான்சு), முனைவர் டி.பர்ரே (யு.கே.), முனைவர் எம்.பி. ஒமனா (அமெரிக்கா), எப்.பி.ஜே. கூப்பர் (ஆலந்து), முனைவர் கமில் சுவல்லபில் (செக்கோஸ்லாவியா) ஆகியோரும் மற்றும் சில தமிழறிஞர் பெருமக்களும் கூடி முடிவெடுத்து 1964-இல் உருவாக்கியதுதான் இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்.

### மன்றப் பொறுப்பாளர்கள்

கூட்டத் தலைமையேற்ற பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள், ஜான் பிலியோசா பெயரை 'மன்றத்தின் தலைவர்' என்று முன்மொழிந்தார். அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டனர்.

### துணைத் தலைவர்கள்

பேராசிரியர் தாமஸ் பர்ரே (ஆக்ஸ்போர்டு), பேராசிரியர் எபி.ஜே. கூப்பர் (இலண்டன்), பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (மதுரை), பேராசிரியர் மு. வரதராசன் (சென்னை)

### மன்றச் செயலாளர்கள்

பேராசிரியர் கமில் சுவல்லபில் பேராசிரியர், சேவியர் எஸ். தனி நாயகம்.

**1964**-ஆம் ஆண்டு முதல், தமது இறுதி மூச்சு வரை தவத்திரு அடிகளார் மன்றத்தின் செயலாளராகவே இருந்து மாண்புறச் செயல் பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**1967**-இல் நடைபெற்ற **27**-வது கீழ்த்திசை ஆய்வாளர்கள் மாநாட்டின்போது இம்மன்றம் 'யுனெஸ்கோ' ஆதரவு பெற்ற அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டது.

### முதல் மாநாடு

இந்த அமைப்பின் மூலம் முதலாம் உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழ்நாட்டில் நடத்துவதெனத் தீர் மானிக்கப்பட்டது. ஆனால், அப் போதைய தமிழக அரசால் மாநாடு நடத்த இயலாமையால், தவத்திரு தனிநாயக அடிகளாரே பெரு முயற்சி எடுத்துக் கொண்டு கோலாலம்பூரில் சிறப்புற (மலேயா) முதல் மாநாட்டை நடத்தினார். தமிழ்நாட்டுப் பேராளர்களும் அம் மாநாட்டிற்கு அன்புடன் அழைக் கப்பட்டனர். மலேசிய நாட்டு அரசின் முழு ஒத்துழைப்போடு நடைபெற்ற அம்மாநாட்டில், அன்றைய தமிழக முதல்வரும் சென்று கலந்துகொண்டு தம்மால் அம்மாநாட்டை ஏற்று நடத்த முடியாத இயலாமையையும் தெரி வித்துக்கொண்டார்.

### தனிநாயக அடிகளார்

இதோ, நாம் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு காண்கிறோம். இது காறும் நாம் எடுத்துக்காட்டிய வற்றால் தமிழ் மாநாடுகள் உலகளாவிய அளவில் நடைபெறத் தவத்திரு தனிநாயக அடிகளாரே காரணம் என்று தெளிவாகும். ஓரளவுக்கேனும் அந்தத் தமிழறிஞர் பற்றிய வரலாற்றுண்மைகளையும் தெரிந்துகொள்ளுவது நல்லது தானே?

தவத்திரு தனிநாயக அடிகளார் யாழ்ப்பாணத்தில் உள்ள கரம்பனில் **2.8.1913**-இல் பிறந்தவர். புகழ்பெற்ற இந்துக் குடும்பம் ஒன்றில் பிறந்து, கிறித்துவக் குருமார் நிலையைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொண்ட வராவார்.

இங்குள்ள அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தில் தமிழ் பயின்ற அவர், நெல்லை மாவட்டத்தில் உள்ள வடக்கன்குளம் புனித தெரசாள் உயர்நிலைப் பள்ளியில் துணைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். அதன்பின், அழைப்பின்பேரில் சென்று இலங் கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற் றினார்.

இதனையடுத்து, மலேசியப் பல் கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தார். கோலாலம்பூரெங்கும் தமிழ்மணம் கமழ்ந்திடச் செய்தார்.

### பெயர் மாறிய விதம்

'சேவியர்' என்பதுதான் அடிக ளாரின் இயற்பெயர். இளமையில், தந்தையாரின் பெயரையும் இணைத்து சேவியர் ஸ்தனிஸ்லாஸ் என்றே அழைக்கப்பட்டார்.

வடக்கன்குளத்தில் இருந்தபோது, பண்டித குருசாமி என்பாரிடம் தமிழ் பயின்றார். தமிழில் புலமை பெற்ற பின்னாலே தான் இவர், அதுவும் மதகுரு மார்களின் வேண்டுதலின்பேரில் 'சேவியர் ஸ்தனிஸ்லாஸ் தனி நாயகம்' ஆனார்.

### இணையற்ற எழுத்தாளர்

**1961**-இல், தனிநாயகம் நம் சென்னை மாநகரில் 'தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்' (Academy of Tamil Culture) என்ற ஓர் அமைப்மைத் தோற்றுவித்தார். அதன்மூலம், தமிழ், தமிழர், தமிழகம் பற்றி உலகநாடுகளிளெல்லாம் அறிந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தில் 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) என்னும் ஆங்கில அரை ஆண்டு இதழ் ஒன்று வெளிவர வகைசெய்தார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல பல ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் தனிநாயக அடிகளாரால் எழுதி வெளியிடப்பட்டது உண்டு. வர லாற்றுப் புலமையும் மிக்க அவருடைய பொருள் பொதிந்த உரைகளும்கூட நூற்களாக வடிவம் பெற்றிருக்கின்றன.

எல்லாமுமாகச் சேர்த்து, 'தமிழ்த் தூது' என்ற தமிழ் நூல் முதலாக வெளிவந்துள்ள அந்த எழுத் தோவியங்களின் எண்ணிக்கை **137** ஆகும்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் மட்டு மின்றிப் பலமொழித் திறமையும் பெற்ற அடிகளார், 'முனைவர்' பட்டம் பெற்றவரும் ஆவார்.

**1969**-இல் தம் ஐம்பத்தாறாம் வய தில் மலேயாப் பல்கலைக் கழகத் திலிருந்து ஓய்வுபெற்ற தனிநாயக அடிகளார், ஓராண்டுக்காலம் பாரி சில் உள்ள பிரான்சுக் கல்லூரி யிலும், ஓராண்டுக் காலம் நேப் பிள்ஸ் பல்கலைக் கழகத்திலும் சிறப்புப் பேராசிரியராகப் பணி யாற்றினார்.

### அடிகளார் மறைவு

யாழ்ப்பாணம் - வேலணையில் **1980**-ஆம் ஆண்டு மே மாதம், பேராசிரியர் கா.பொ. இரத்தினம் அவர்கள் எழுதிய 'தமிழ்மறை விருந்து' என்ற நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

அதன்பின், பெரிதும் உடல் நலிவுற்ற தனிநாயக அடிகளார், **1.9.1980** மாலை **6.30** மணியளவில் உயிர்நீத்தார்.

**1981**-இல், மதுரை மாநகரில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில், அத்தமிழ்ப் பெரி யாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

தமிழுக்குப் பெருமை சேர்க்க, உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் துணையோடு உலகளாவிய மாநாடு நடத்திட முழுமுதல் காரணமான தவத்திரு தனிநாயக அடிகளாரின் புகழ், தமிழுள்ளவரை தழைத் திருக்கும்!

# சமய இலக்கியங்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

எல்லா மொழிகளும் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் கண்டன. ஆனால், தமிழில் விளங்கும் தொன்மையான நூலான தொல்காப்பியம் அம்மொழியைப் பேசி வாழும் மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துத் தந்திருக்கிறது. இப்படித்தான் வாழவேண்டும் என்ற உணர்வு அரும்பும் தொடக்கமே சமய நெறியின் தொடக்கம். வாழ்க்கை அருமைப்பாட்டை உணர்தல், வாழ்க்கையின் நோக்கத்தையறிதல், வாழ்வாங்கு வாழக் காமுறுதல், ஒழுங்குகள் கால்கொள்ளுதல், ஒழுக்கநெறி நிற்றல் ஆகியன தலையெடுக்கச் செய்து தனி மனிதனையும் சமுதாயத்தையும் வழி நடத்துவதே சமயம். ஆதலால், தொல்காப்பியம் சமய இலக்கியம் எனப் பெறாவிட்டாலும் சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. தமிழரின் சமய அனுபவம் மெய்ப்பொருளியல் அடிப்படையிலானது. உலகியலை உலகியலின் நிகழ்வுகளை ஆய்ந்து, சிறந்த செம்பொருள் காணும் ஆர்வமுனைப்பில், வாழ்க்கையில் முகிழ்த்த நெறி செந்தமிழ்ச் சமயநெறி, இக்கருத்தினைத் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்கூட நமக்குத் தருகின்றன.

பொருளதிகாரத்திலும் கடவுள் வாழ்த்து, மனையற வாழ்க்கை, துறவற வாழ்க்கை ஆகியன குறித்து விளக்கும் தொல்காப்பியத்தை ஒரு சிறப்பான சமய இலக்கியமெனக் கூறல் தவறன்று. ஆயினும் இன்றுள்ள நிலையில் வாழ்க்கையிலிருந்து சமயம் பிரிந்து நெடுந்தொலைவு விலகி, வாழ்க்கையின் ஒரு பகுதியாகச் சமயம் விளங்குவதால், பலர் தொல்காப்பியத்தைச் சமய நூல் என்று கருதுவதில்லை.

தொல்காப்பியர் காலந்தொட்டே நெறிமுறை உணர்வு, தமிழர் வாழ்வில் பொதுளியிருந்ததால் பின்தோன்றிய சங்ககால இலக்கியங்கள் காதல், வீரம் பற்றி மிகுத்துக் கூறினும் வாழ்வாங்கு வாழும் ஆர்வத்தையும் காண்கின்றோம். சங்ககால இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும் தனித்தன்மையுடைய சமய இலக்கியங்களாகும்.

பரிபாடல் மிகச் சிறந்த சமய இலக்கியம். உயிர், உலகியல் தொடர்புடைய வேட்கைகளில் ஆர்வம் காட்டித் தேடும் இயல்பினது; இவ்வுலகில் உயிர் வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. தவிர்க்க முடியாதது. தேவைகள் வாழ்க்கையை உந்திச் செலுத்துவன.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

என்பது தமிழ்மறை. ஆனால் பரிபாடலில் பொன்னை விரும்பி வேண்டவில்லை. பொருளை விரும்பி வேண்டவில்லை. போகத்தை விரும்பி வேண்டவில்லை. ஏன்? பொன்னும் பொருளும் மானிட சாதியின் படைப்பாற்றல் துணைக்கொண்டு படைக்கப்படுவன. போகம், அதாவது இன்புறுதல் மனித நலன்களைப் பொறுத்தது. இவற்றை இறைவனிடம் கேட்கும் பழக்கம் தமிழ்ச் சமய நெறியில் இல்லை. கேட்டாலும் இறைவன் தரமாட்டான். அவன் காரணங்களாக அருள் செய்வானேயன்றிக் காரியங்களாக அல்ல. என்ன வேண்டப்படுகிறது? அருள் வேண்டப்படுகிறது. அருளைப் பெற்றுத் தரும் அன்பு வேண்டப்படுகிறது. அருளையும் அன்பையும் படைத்திடும் அறம் வேண்டப்படுகிறது.

'யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே'
(பரிபாடல்-5)

மேலும் சமய வாழ்க்கை தனி ஓர் உயிரின் உய்திக்கு மட்டுமன்று. ஓர் உயிரின் வாழ்க்

கையைச் சமுதாய வாழ்க்கையில் இணைத்து வளர்ப்பதே சமயம். சிறந்த சமய நடைமுறை சமுதாய அமைப்பு கால்கொள்ளத் துணை செய்வது. சமுதாயத்தை இணைத்து அலைத்து இன்புறுத்த- இன்புற அன்பு தேவை, அறம் தேவை. தமிழ்ச் சமய இலக்கியங்கள் சமுதாய ஒழுகியலை வலியுறுத்துவன. ஏன்? கடவுளுக்கே "நீதி" என்று பெயரிட்டு அழைத்தது தமிழ்ச் சமயம். ஆதலால் சமுதாய வாழ்வியலறங்கள் உணர்வுகள் இங்கு வேண்டப்படுகின்றன.

சங்க கால இலக்கியங்கள், முழுமையாக வளர்ந்த கவிஞர்கள் பலரை நமக்கு அடையாளம் காட்டுகின்றன. சங்க கால இலக்கியங்களில் காதல் உண்டு; வீரம் உண்டு; ஆட்சி முறைகள் உண்டு. இவைகளின் ஊடே அற நெறிக் கொள்கைகளும் விளக்கமுற அமைந்து கிடக்கின்றன என்பதை அறிதல் வேண்டும்.

சங்ககால இலக்கியம் காட்டும் வாழ்க்கை முறை, பொறிகளில் தூய்மை காத்தலன்று; புலன்களில் தூய்மை காத்தலாகும். புலன்களில் தூய்மையுடையாருக்கே செந்தண்மை வரும். அதனால் தான் "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்று (புறநானூறு-126) பேசுகிறது. இதொரு சமயக் கோட்பாடேயாம்.

அதுமட்டுமா? தமிழர் தம் வழிபடு கடவுளாகிய பரமசிவனின் வரலாறுகள் பலப்பல. அவை பழைய வரலாறுகளாகவும் உருப்பெற்றுள்ளன; இலக்கியச் சான்றுகளாகவும் இடம் பெற்றுள்ளன. நமக்கு வரலாறு இன்றியமையாததன்று. அந்த வரலாறு வடித்துத் தரும் பயனுடைய வாழ்க்கை நியதி இன்றியமையாதது. சாதாரணமாக உயிரினம் வாழத்தான் விரும்புகிறது. எளிதில் இறக்க யாரும் விரும்புவதில்லை. ஏமாற்றங்களால், ஏற்படும் மனக்குறையால் நிகழும் தற்கொலைகள் உணர்ச்சி வயப்பட்டவை. அவை கணக்கில் எடுத்துக்கொள்ளத் தக்கன அல்ல. எல்லாரும் நெடுநாள் வாழத் துடிக்கின்றனர். அதற்காக மருந்துகளைத் தேடி அலைகின்றனர். அதுமட்டுமா? தாம் வாழ்வதற்காக மற்றவர்களைப் பலிகொடுப்பதற்கும்கூட சிலர் ஆயத்தமாகின்றனர். இது மனித இயல்பாக இன்று இருக்கிறது. பரமசிவத்தின் நிலை என்ன? அமரர்களைக் காப்பாற்ற அலை கடலில் எழுந்த நஞ்சினை, தாம் உண்டது சிவம். அமரர்கள் சாவா மருந்தாகிய அமுதத்தை உண்டனர். ஆனால் சாவைத்தரும் நஞ்சினையுண்ட சிவம் வாழ்ந்தது. சாவா மருந்தை உண்ட அமரர்கள் செத்தனர்.

"விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்"

என்பது சிலப்பதிகாரம் (12:22) ஏன்? அமுதத்தால் மட்டுமா வாழ்ந்திட முடியும்? அமுதத்திலும் உயர்ந்த நல்லெண்ணம் வேண்டாமா? மற்றவர்கள் வாழவேண்டுமென்ற உணர்வே சிவம். யார் செத்தாலும் அக்கறை இல்லை. தாம் வாழ்ந்தால் போதுமென்ற அமரரின் எண்ணம் நஞ்சினும் கொடியது. ஆதலால், அமரர்தம் நெஞ்சத்திலூறிய நஞ்சை, அமுதத்தாலும் மாற்ற முடியவில்லை. ஆதலால், செத்தொழிந்தனர். இக்கருத்தினை நயம்பட புறநானூறு பேசுகிறது.

நெல்லிக்கனி, சாவா மருந்து. அதியமான் தான் வாழ விரும்பாமல் தமிழ் மூதாட்டியாகிய ஔவையாரே வாழவேண்டும் என்று எண்ணித் தருகின்றான். அதனால் பண்பாட்டுலகில் என்றும் அதியமான் வாழ்கிறான். "நீலகண்டம்" தன்னல மறுப்பின் சின்னம். அருளுடைமையின் அடையாளம்.

ஓர் இனத்தின் சமயம் தோன்றி வளர்வது அந்த இனம் நன்கு வளர்ந்த காலக்கட்டத்தில்தான்; தமிழ், சமயத்தில் சிறந்து விளங்கும் மொழி. கடவுள் நம்பிக்கை, மதம், சமயம் ஆகியன ஒரு தன்மையனபோலத் தோன்றினாலும் மிகுதியும் வேறுபாடுடையன என்பது எண்ணத்தக்கது. தமிழர் சமய நெறிக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால், தமிழ்ச் சமய நெறியின் கடவுள் நம்பிக்கை மற்றச் சமயங்கள் அல்லது மதங்கள் கடவுளைக் கருதுவது போலவன்று. தமிழ்ச் சமயத்தின் கடவுள் நம்பிக்கை, நம்பிக்கையின்பாற்பட்டது; நல்லெண்ணத்தின் பாற்பட்டது; ஆக்கத்தின் வழியிலானது; நீதியின்பாற்பட்டது.

மதம், மக்கள் மன்றத்தைத் தழுவாதது. சமயம், மக்கள் மன்றத்தைத் தழுவியதாக, மனித குலத்தை ஆக்குவதற்காகவே தோன்றியது. மதம், உருவாக்கப்பட்டது. சமயம் பரிணாம வளர்ச்சியில் உருவானது. மதத்திற்குப் பகுத்தறிவு பகையானது. சமுதாயத்திற்குப் பகுத்தறிவு உடன்பாடானது. மதம், மறுமையைப்

"தித்திக்குந் தெள்ளமுதாய்த்
தெள்ளமுதின் மேலான
முத்திக்கனியே என் முத்தமிழே!"

- தமிழ்விடுதூது

பற்றிப் பேசுவது. சமயம் இம்மையையும் பேசும்; மறுமையையும் பேசும். மதம் ஊழ் வினையின் வலிமையை மிகுத்துக் காட்டும். சமயம், ஆள் வினையை மிகுத்துக் காட்டும். மதம், சிற்றெல்லைகளைப் படைக்கும். சமயம், எல்லைகளைக் கடந்த பொதுமையைப் படைக்கும். இத்தகு சமயமே தமிழர் சமயம். இதனையே சேக்கிழார் "செந்தமிழ் வழக்கு" (சம்பந்தர் புராணம் 1-24) என்கிறார். இந்தச் சமயநெறி "இந்து மதம்" என்ற கட்டமைப் பிற்குள் இல்லாதது. ஆனால் நாட்டின் நடப்பில் பிணைப்பு ஏற்பட்டு இந்து மதப் பிணைப்பில் வந்தபிறகு அதன் கொள்கை களும் இதன் கொள்கைகளாகக் கலப்பின் வழி வந்துள்ளன.

சமயம் என்பது "சமை" என்னும் சொல் லின் அடிப்படையில் பிறந்தது. மானிட வாழ்க்கை, புலன்களின் நுகர்வுகளால் ஆயது. நுகர்வுகளுக்கு வாயிலாக இருக்கின்ற பொறி களால் ஆயது. இப்புலன்களும் பொறிகளும் உயிரின் நலத்திற்கு ஒத்திசைந்து உள்ளவாறு இயங்கினால் உயிர்நலமுறும். ஆனால், இயற் கையில் புலன்களும் பொறிகளும் உயிரோடு ஒத்துழைக்கவில்லை. எந்த உயிருக்கு நன்மை செய்து இன்புறுதல் வேண்டுமோ அந்த உயிருடன் இப்புலன்களும் பொறிகளும் போராடும்; அதை அலைக்கழைவு செய்யும். இதனால், உயிர்க் குலத்தின் வாழ்க்கை தடம் புரண்டு போகிறது. மனித அறிவு, எண்ணத் தொடங்கிய காலந்தொட்டு சற்றேறக்குறைய 14,500, போர்கள் உலகத்தில் நிகழ்ந்துள்ளன. இப்போர்கள் நாடுகளுக்கிடையே நடந்த போர்கள். சாதிகளிடையே நடந்த போராட் டங்கள். மதங்களுக்கிடையே நடந்த போராட் டங்கள். வீடுகளுக்குள் நடந்த போராட்டங்கள் இந்தக் கணக்கில் சேரவில்லை. இக்கொடிய போராட்டங்களில் கொன்று குவிக்கப்பட்ட மனிதர்களின் எண்ணிக்கை 364 கோடி என்றொரு புள்ளிக் கணக்கு பேசுகிறது. இப்புள்ளி விவரமும் நாடுகளிடையே நடந்த போர்கள் பற்றியதுதான். இங்கும் அங்குமாக நடைபெற்ற கொலைகள் இந்தக் கணக்கில் சேரா. ஏன் இந்த அவலம்? உயிரை, உயிரின் உணர்வை அன்பில் சமைத்து உலகு தழீஇய வாழ்க்கை வாழச் செய்யும் சமய நெறியில் ஈடுபடாமைதான்.

உயிரின் அறியாமைக்கு மிகுதியும் கார ணம் "செருக்கு" என்பது சமய நூற் கருத்து, உயிரின் அனைத்துத் தீமைகளுக்கும் அதுவே அடிப்படை. இதனை அப்பரடிகள் (6,665.)

'தினைத்தனையோர்பொறையிலா உயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகுவுன்னி மதியால் இந்த
அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும்
ஆங்காரம் தவிர்நெஞ்சே அமரர்க் காக
முனைத்துவரும் மதில்மூன்றும் பொன்ற அன்று
முருகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்நெய்த் தானமென்று
நினையுமா நினைந்தக்கால் உய்ய லாமே'

—என்று கூறி விளக்குகின்றார்.

சமய வாழ்க்கையின் பயன், பொறிகளும் புலன்களும் தூய்மையுடையனவாகி உயிர் அன்பில் தழைத்து வளர்தலேயாம். உயிரின் தூய்மை என்பது பயன்படாத் தூய்மையன்று. அல்லது தீமை செய்யும் தூய்மையன்று. மாறாக, நன்றாற்றல் நிகழ்த்தும் தூய்மையே தூய்மை. அகத்திலும் புறத்திலும் ஒத்து இயல்வதே தூய்மை. இதனைச் சேக்கிழார் "பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்று விளக்குவார். தூய்மையில் உவர்ப்பு இல்லை; உவப்பு உண்டு. தூய்மை அருள் நலஞ் சான்றது. அங்கு வேறுபாடுகளில்லை. காய்தல் இல்லை. அதுவே தூய்மை. பழுத்த மனத்து அடியார்களாக விளங்குவது சமய வாழ்க்கை யின் பயன்.

பொறை, சமய இயலின் ஒழுகலாறுகளில் சிறந்தது; விழுமியது. பொறையுடைமை வழி மேலும் பல நல்ல ஒழுக்க இயல்புகள் வந்த மையும். பொறை பொறுத்தாற்றல். நன்றும் தீதும் உலகியற்கை சுழன்று வருவன. அவை மானிட சாதியினாலேயே படைக்கப் பெற்று அனுபவிப்பன ஆகும். இதில் ஏன் மகிழ்ச்சி, மகிழ்ச்சியின்மை? பெரியோர், சிறியோர் என்பது அவரவர்தம் சூழ்நிலைக்கு ஏற்ப அமையும். ஒழுகலாறுகளில் விளங்கும் தன்மை, இதனால் பெரியோரை வியந்து பாராட்டுதலைத் தவிர்க்க வேண்டும். ஒரேவழி பெரியோரை வியந்து பாராட்டலும்

"தொண்டர் நாதனைத்
தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை
அழைத்ததும் என்புபெண் ணுருவாக்
கண்டதும் மறைக்
கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ
மறுபுலச் சொற்களோ சாற்றீர்!

- திருவிளையாடல் புராணம்



# தேன்மொழி

வைய கத்தில் இணையி லாத
வாழ்வு கண்ட தமிழ்மொழி
வான கத்தை நானி லத்தில்
வரவ ழைக்கும் தமிழ்மொழி

* * *

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை வழியாகும்
அன்பே அவனுடை மொழியாகும்!

* * *

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியே!

* * *

தமிழன் என்பதை மறக்காதே
தாய்மொழிப் பெருமையைத்
துறக்காதே
"அமிழ்தம் தமிழ்மொழி" ஐயமில்லை
அகிலம் நுகர்ந்திடச் செய்திடுவோம்!

**—நாமக்கல் கவிஞர்**
**வெ. இராமலிங்கம்பிள்ளை**

சிறியோரை இகழ்தலும் கூடவே கூடாது. இது ஓர் ஒப்பற்ற சமுதாய நடைமுறை விதி.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந் தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே
..........................................................
..........................................மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. புறம் (192)

—என்பதறிக.

சங்ககால இலக்கியங்கள் அப்பட்டமான சமய இலக்கியங்களல்ல என்பதும், ஆயினும் சமய நாகரிகம் தழுவிய இலக்கியங்களே என்பதும் முன்பே கூறப்பெற்றன. சங்க காலத்தில் வாழ்க்கையே சமயமாக விளங்கியதால் சங்க கால இலக்கியங்களில் சமய வாழ்க்கையை விளக்கும் பாடல்கள் பல உள்ளன. இத்தகைய சமய வாழ்க்கையின் முடிவான செய்திதான் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (திருமந்திரம்-2066) என்ற சொற்றொடர். "எல்லா உலகமும் ஆனாய் நீயே" (6629) என்ற அப்பரடிகளின் அருள்மொழியும் சாதி வேறுபாடற்ற ஒருமைப்பாடுடைய மனித குலத்தையே விரும்புகிறது.

மனித குலத்தை விரித்துத் தின்றழிக்கும் தீமையில் தீமை வறுமை, ஏழ்மை, சமய அறிவற்றோர், வறுமையில் வாழ்தலும் கூட ஒருவகையான அறம் என்றும் ஆதலால் ஆசைகள் கூடாது என்றும் கூறுவர். இங்ஙனம் சொல்வது தவறான வழிகாட்டுதலாகும். இதனால் உயிரியலில், உலகியலில் ஆர்வம் குறைந்து வறுமையே விஞ்சியது. ஏன்? "வறுமை இயற்கை. மாற்ற முடியாதது" என்ற கருத்து வேரூன்றியுள்ளதால் உழைப் பார்வம் இல்லை.

சமயநெறியின் நோக்கம் துன்பத்தைத் தொலைப்பது; இன்பத்தைப் படைப்பது; இம்மண்ணிலேயே விண்ணகத்தைக் காண்பது என்பர் சங்ககாலச் சான்றோராகிய பக்குடுக்கை நன்கணியார்,

'ஓரில் நெய்தல் கறங்க ஓர் இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் மணிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்
இன்னாது அம்ம, இவ்வுலகம்
இனிய காண்க, இதன் இயல்புணர்ந் தோரே'
(புறம்: 194)

# தன்னேரிலாத தமிழ்

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"
- தமிழ்விடு தூது

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண்டீந்தமிழ்
- திருக்கோவையார்

"இனிமையும் நீர்மையும் தமிழ்என லாகும்"
- பிங்கலம்

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்".
- தண்டி உரைமேற்கோள்

"தழற்புரை சுடர்க்கடவுள்
தந்ததமிழ் தந்தான்"
- கம்ப இராமாயணம் (ஆரண்யகாண்டம்)

என்று பாடுகிறார். ஒரு வீட்டில் துன்பம் ஏன்? அழுகுரல் ஏன்? பிறிதொரு வீட்டில் மணமுரசு ஏன்? இந்த முரண்பாடு உலகில் ஏன்? இந்த முரண்பாடுதான் படைப்பியற்கை என்றால் படைத்தவனே பண்பிலாதவன். உலகியல் இன்னாததாக இருந்தால் என்ன? இந்த இன்னாத உலகத்தை அறிவறிந்த ஆள்வினையால் இனிமையுடையதாக்குக என்று ஆற்றுப்படுத்துவதை, ஆணையிடுவதை அறிக. இக்கருத்தினை வாழ்வியலாக்காததால் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் காலத்திலும் அவருக்கு முன் ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த நிலையே நீடிக்கிறது. சுந்தரர் இன்பதுன்பம் விரவிய வாழ்க்கையை உடன்படாது மறுக்கிறார். சாவாது வாழவேண்டும் என்று மனித குலத்தை அறை கூவி அழைக்கின்றார். சுந்தரரின் இக்கருத்தினைச் சேக்கிழார் அழகுற விளக்குகின்றார்.

வறுமையை விரும்பியேற்பது உயர் சமய நெறியின் மரபன்று. வறுமையை நச்சுப் பாம்பின் நஞ்சினும் கொடியது என்று திருவாசகம் வருணிக்கிறது (போற்றித் திரு அகவல்-2440) "நல்குரவென்னும் தொல்விடம்" என்பது திருவாசகம். மிகப் பிற்காலத்தில் வந்தவர்களாகிய சமய இயலின் தத்துவம் உணராதார் வறுமைக்கு ஊழ் காரணம் என்றனர். மேலும் அறியாதார் சிலர் ஊழை நியதியாக்கி வெற்றிகாணமுடியாது என்றனர். ஆயினும் ஒருவர் வறுமைக்கு மற்றவர் முயன்று அதற்கு மாற்றுத் தேடுவதுதான் வாழ்க்கையின் சீலமாக அமைகிறது. இத்தகு சீலமுடைய ஒரு வாழ்க்கையை மிகப் பிற்காலத்தில் "தருமகருத்தாக் கொள்கை" யென்று கூறினர். இக்கொள்கையை ஏழாம் நூற்றாண்டிலேயே அப்பரடிகள் தந்த திருமறை இலக்கியம் எடுத்து மொழிந்தது.

சமய வாழ்க்கை, உயிரின் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அறிகருவிகளை மையமாகக் கொண்டது. மனம், ஒன்றைப் பற்றுவது. மனம் பற்றிய ஒன்றன் தன்மையை ஆராய்ந்து நிர்ணயிப்பது புத்தி. அந்த ஒன்றை நோக்கி விரிவடைவது சிந்தனை. அதனை அடைதற்குரிய உறுதிப்பாட்டினை மேற்கொண்டு முயற்சி செய்வது அகங்காரம். ஆக, மனம்தான் தோணிபோல் பயன்படுகிறது. இந்த மனம், குறைவிலா நிறைவு, கோதிலா அமுது, வரம்பிலா ஆற்றல், பேரறிவு என்று புகழப்பெறும் கடவுளைப் பற்றுவதன் மூலம் அத்தன்மைகளைத் தன்னிடத்து ஈர்த்துத் தன்னையும் தன்னைச் சார்ந்த இதர கருவிகளையும் தன்னையுடைய உயிரையும் வளர்த்துச் செழுமைப் படுத்துவதே வழிபாடு.

சமய வாழ்க்கையின் சீலம், உடற்சார்புடையது மட்டுமன்று. சமய நெறியில் உடற்சார்பான ஒழுகலாறுகள் - வாயில்கள் - பாதுகாப்பு மட்டுமேயாம். அகம் நிறை ஒழுக்கங்களே சமய வாழ்க்கையின் பயன். உயிர், சமய - வாழ்க்கையின் அனுபவமாகிய பத்திமையில் வளரும்பொழுது தொண்டார்வமும் முகிழ்க்கும்; பார்வாழப் பணிசெய்யும் ஆர்வம் தழைக்கும்.

வையகம் தூய அன்பெனும் பத்திமையில் தழைத்துத் தொண்டுநெறியில் செழித்து வளர்வதே சமய இலக்கியங்களின் நோக்கம், பயன்.

# திருக்குறள் வெளிப்படை

டாக்டர் வ.சுப. மாணிக்கம்

**தி**ருக்குறள், காலத்தால் ஈராயிரம் ஆண்டுப் பழமைப்பட்டது என்றாலும் கருத்தாற் பழமையுடையதா? ஆம், ஓரளவு கருத்தாலும் பழமை வாடை கொண்டது. நால்வகை மதில் பற்றிக் கூறும் அரண் அதிகாரச் செய்திகளும் போர்குறித்த களச் செய்திகளும் வழக்கு விழுந்தன என்றே ஒப்பவேண்டும்.

'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். (774)

'விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. (775)

என வரும் வேல்மறப்போர் இன்றில்லை. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் (758)என்ற மறக்காட்சியும் இன்றில்லை.

**பழமை எவ்வளவு ?**

காலங்கடந்த அறநூல் என்று போற்றினாலும், திருக்குறளில் பொச்சாப்பு, ஒருவந்தம், புத்தேளிர், மாண்ட, முதுக்குறைவு, உஞற்றுதல் போன்ற சொற்பழமைகள் உண்டு; அருங்கேடன், நன்னீரை, நிறைநீர, எனல் போன்ற இலக்கண வீழ்ச்சிகள் உண்டு; யாருள்ளித் தும்மினீர், இருட்டறையில் ஏதில் பிணம் தழுவல், சிவிகை பொறுத்தான், அவிசொரிந்து ஆயிரம் வேட்டல் போன்ற மரபு மறைவுகள் உண்டு. இவ்வாறு எடுத்துக்காட்டினும், இரண்டாயிரம் ஆண்டுத் தொன்மை வாய்ந்த திருக்குறளில் பழமைகளும், வீழ்ச்சிகளும் ஓரிரு விழுக்காட்டிற்கு மேல் இல்லை என்பதையும் ஒப்பவேண்டும். இதற்குக் காரணம் வள்ளுவர் காலத் தமிழ்மொழி வழக்காயினும் செய்யுளாயினும் செந்தமிழாக இருந்த நிலையாகும். அதனாலன்றோ தொல்காப்பியமும் சங்கப் பனுவல்களும் இன்றும் விளங்குவனவாக உள? அவை பிறப்பாற் காலப்பழமை படிந்தனவேயன்றி மொழி நடையால் இன்றும் சாலப்புதுமை தவழ்வன. இடைக்காலத்துத் தோன்றிய மயக்குநடைத் தமிழ் நூல்களோடு ஒப்புநோக்கின், இவ்வுண்மை வெளிப்படையாகும். பழமையான பிறமொழி உலக இலக்கியங்களோடு ஒத்திடினும், நம் தொன்மை இலக்கியங்களின் புதுமைப் பெருவாழ்வு புலப்படும். உலகிற் சிறந்த தொல்லிலக்கியங்கள் தம்மொழியைச் சாகடித்தன; நம் தொன்னூல்களோ எனின், கம்பர் உணர்ந்து பாடியது போலத் தமிழ் மொழியை என்றுமுள மொழியாக்கின.

**உரைப் பொடிகள்**

திருக்குறளுக்குப் பலவுரைகள் வந்துள்ளன; காலந்தோறும் புதுவுரைகள் புறப்படு



கின்றன. சில குறட்பாக்களுக்கு உரைவேற்றுமைகள் பல்கியுள. பாடபாட்டாலும், புணர்ச்சி முறையாலும், கொள்கைப்பிடிப்பாலும், தொகையாலும் இலக்கணத்தன்மையாலும், சொற்பொருளாலும், காலவிடையீட்டாலும், புலமை மிகையாலும், புலமைக்குறையாலும், நயப்பாட்டாலும், பொருள் வேற்றுமைகள் எழுந்துள.

'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள. (223)

என்ற குறளுக்கு எழுந்த உரைகளை நோக்கின் நயவுணர்வு தவிர பொருளுணர்வில் வேறுபாடில்லை என்பது வெளிப்படை; வேற்றுமையுரைகளாகப் பரந்து காணப்படும் இடங்களையெல்லாம் உராய்ந்து பார்ப்பின் அவ் வேற்றுமைகளிற் பல காரமிலாப் பொடி போல உரைப்பொடிகளாக வறிதுபடுவதைக் காணலாம்.

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (82)

'அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். (163)

சாவா மருந்தாகிய அமிழ்தமானாலும் தனித்து உண்ணக்கூடாது என்ற கருத்தும் ஒருவன் தனித்துண்ணுதலே சாவா மருந்து ஆகும் என்ற கருத்தும் பெரிய வேற்றுமைகளா? அறனும் ஆக்கமும் என்ற உம்மைத் தொகையும் அறத்தினால் ஆகிய ஆக்கம் என்ற மூன்றாம் வேற்றுமைத் தொகையும் என்ன பொருள் வேற்றுமையைச் செய்து விட்டன?

'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (605)

இக்குறளில் காமக் கலன் என்பதற்கு விரும்பியேறும் மரக்கலம் எனவும் விரும்பிப் பூணும் அணிகலம் எனவும் பொருள் வேற்றுமை உண்டு. இவை கல்லும் பல்லும் போல முரண்பட்ட வேற்றுமைகள் அல்லவே! இவ்வுரைகள் மூலப்பொருளை மறையா.

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. (338)

குடம்பை என்ற சொல்லுக்குப் பொருள் முட்டை என்பார் பரிமேலழகர்; கூடு என்பார் மணக்குடவர். இவற்றையெல்லாம் உரைக்கிளைகள் என்று கொள்ள வேண்டுமேயன்றி மூலத்தை மறைக்கும் உரைத் திரைகள் அல்லது உரை மூடிகள் என்று

## அறம் பொருள் இன்பம் வீடு

**வ**றுமையில் வந்து யாசித்தவர்க்கு இல்லை என்னாமல் ஒரு பொருளைக் கொடுப்பது அறமாகும்.

தீயவழியை விலக்கி நல் நெறியில் சேர்ப்பதே நல் பொருளாகும். எப்போதும் அன்பால் இணைந்த கணவனும் மனைவியும் ஒருமித்த உள்ளம் கொண்டு ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பதே இன்பமாகும்.

இறைவனை எண்ணி, மேற்குறிப்பிட்ட மூன்றிலும் பற்றை விடுவதே பேரின்பத்தை அளிக்கும் மோட்சத்தை அடைவதற்கு வழியாகும்.

இதை ஔவையார்,

'ஈதல்அறம் தீவினைவிட்டு ஈட்டல்பொருள்
எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்துஒருமித்து
ஆதரவு பட்டதே இன்பம் பரனைநினைத்து
இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு.'

பெரிது படுத்தலாகாது.

### கருத்துப் பூசல்கள்


திருக்குறளின் ஆசிரியர், காலம், அமைப்புப் பற்றித் தோன்றிய, தோன்றி வளர்ந்து வரும் ஆய்வுப் பூசல்கள் எண்ணிறந்தன. திருக்குறள் ஒருவர் செய்த தனிநூலா, தொகுப்பு நூலா எனவும், பாயிரம் எனப்படும் முதல் நான்கு அதிகாரங்களும் திருக்குறளுக்கு உரியனவா எனவும், காமத்துப்பாலை வள்ளுவர் எழுதினாரா எனவும், அதிகாரத் தலைப்புக்களும், அதிகார வைப்பு முறையும், அதிகாரத்துள் குறள் வைப்பு முறையும் செய்தவர் யார் எனவும், கருத்தோட்டங்கள் உள. கடவுள், தெய்வம், வினை, உயிர், இம்மை, மறுமை, நரகம், வீடு, பிறப்பு, இறப்பு, துறவு, ஊழ் முதலான கொள்கைகள் பற்றியும் சாதி, வேள்வி என்றின்ன ஆரிய வேதநாகரிகக் கலப்புப் பற்றியும், பிறப்பொழுக்கம், அந்தணர், பார்ப்பான், எழுபிறப்பு, அடியளந்தான், இந்திரன், அறுதொழிலோர் நூல், ஆதி பகவன் மலர்மிசையேகினான் என்றிவற்றின் பொருள் பற்றியும் கருத்துப் பின்னல்கள் உள.

சொற்பழமை, இலக்கண வீழ்ச்சி, மரபு மாற்றம், உரைப்பன்மை, உரை வேற்றுமை,

உரைப்பொடிகள், கொள்கைப்பூசல்கள், கருத்து மோதல்கள், கருத்துப் பிறழ்வுகள் என்றாங்குப் பல சிக்கல்கள் திருக்குறட்கு வந்து கொண்டிருக்கின்றன எனவும், இந்த இருட்டிரைகளை அகற்றி எல்லாரும் ஒப்ப விளக்கந் தந்தாலல்லது திருக்குறளில் தெளிவுபிறவாது எனவும் கண்டாங்கும் பட்டாங்கும் கற்றாரும் ஆய்வாளரும் மொழியாளரும் குறைபரப்பி வருகின்றனர். இவற்றைத் தெளிவிக்க வேண்டும், வள்ளுவர் நெஞ்சம் நேர்முகமாகத் தெரியவேண்டும், உரைவேற்றுமை குறைய வேண்டும் என்ற வேணவா எனக்கும் நிரம்பவுண்டு. இந்நோக்கில் ஆராய்ச்சிகள் நெறிப்படல் வேண்டும் என்ற ஆராவிருப்பம் குறளன்பர்க்கெல்லாம் வேண்டும் என்ற வேணவா எனக்கும் நிரம்பவுண்டு. எனினும், அழுந்திய ஆழமான ஓர் உண்மையை வலியுறுத்துவதற்காகவே இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

சிலர் நினைப்பதுபோல் கருத்துப் போர்கள் பலவிருப்பினும் மேலும் வளரினுங்கூட, அவையெல்லாம் திருக்குறளின் அடிப்படையறங்களையும் செயலுக்குரிய வாழ்க்கை வள்ளுவங்களையும் தில்லை மறைபோலத் திரையிட்டு மறைக்கவில்லை குறள்யாப்பு என்ற ஈரடிப் பாத்தியில் அறநெறிப் பயிர்கள் வெற்றிக் கொடிபோல வெளிப்படையாகவே இயல்புக் கண்ணாளர்க்கும் காட்சி தந்துகொண்டிருக்கின்றன.

திருக்குறளில் வள்ளுவரின் எண்ணங்கள் வெளிப்படை; அவற்றைக் கற்பதற்கும் கேட்பதற்கும் இயல்பான வழக்குத் தமிழறிவு போதும். இதனால் உரைகளும் விளக்கங்களும் வேண்டா என்பது கருத்தன்று. அவை நம் புலமையையும் அறிவையும் பெருக்குவன. இதுவே அவற்றின் பெரும் பயன். அவை செயலைத் தூண்டா; செயலார்வத்தைப் பெருக்கா; நெஞ்சினை நேரடியாக இயக்கா; வாழ்வினை உணர்ச்சிப்படுத்தா; உள்ளத்துள் ஊடுருவிப் பாயா.



### குறள் வெளிப்படை

திருவள்ளுவர் தம் நூலின் விளக்கத்துக்குப் பிறகால உரைகளை எதிர்பார்த்தோ கட்டுரைகளை எதிர்பார்த்தோ எழுதவில்லை. தம் நூல் தானே விளங்கும், விளங்க வேண்டும் என்ற வெளிப்படை நடையிற்றான் யாத்துள்ளார். மூலக்குறள்களைப் பன்முறை படிக்கப் படிக்க வள்ளுவர் நெஞ்சுக்கும் நம் நெஞ்சுக்கும் உணர்ச்சித் தொடர்பு நெருங்குவதை உணர்கின்றோம்; குறட்சொற்கள் உயிர் நடைபெற்று நம் உள்ளத்தில் பாய்வதை உணர்கின்றோம்; உரைகள், விளக்கங்கள் என்னும் தீண்டாமைகளைக் கடந்து குறள் வடிவாக இருக்கும் திருவள்ளுவரின் நெஞ்சத்தினை நம் செயல் நெஞ்சத்தால் தீண்டுகின்றோம். மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் என்பதுபோல மூலக்குறளைத் தீண்டல் வாழ்வின்பம் ஆகும்.

உரையின்றி, விளக்கமின்றித் திருக்குறளின் மூலங்களை அறிந்துகொள்ள இயலாது என்ற ஒரு பெருந்தவறான கருத்து எப்படியோ மக்களுலகிற் பரவிக்கிடக்கின்றது. இது உரையின் குறையன்று, விளக்கத்தின் குறையன்று கல்வி முறையின் குறையாகும். காலிருப்பினும் செருப்பின்றி நடக்கவியலாது என்ற கருத்து இன்று இல்லையா? நடக்கக்கூடாது என்ற கருத்துக்கூட இன்று பரவக் காண்கின்றோமே!

திருக்குறள் தோன்றிய காலத்து உரையும் உடன் தோன்றவில்லை. ஆயிரம் ஆண்டுகள் கழித்துத்தான் உரை பெருக்கெடுத்தது. மூலத்தைக் கற்கும் முறை வேறு; உரைகளைக் கற்கும் முறை வேறு; மூலத்தின் பயன்வேறு; உரையின் பயன்வேறு; மூலத்தைக் கற்கும்போது வள்ளுவரை நினைக்கின்றோம்; உரைகளைக் கற்கும்போது உரையாசிரியர்களை நினைக்கின்றோம். குறள்மூலத்தின் பயன் செயல் குறளுரையின் பயன் விளக்கம். ஆதலின் வாழ்வு வேண்டின், செயலியக்கம் வேண்டின், வள்ளுவர்தம் உறவு வேண்டின், திருக்குறள் மூலங்களோடுதான் நமக்கு முதலுறவு வேண்டும்.

மூலக்குறள்கள் உரைகளைக் காட்டிலும்- ஏன், உரைக்குரையைக் காட்டிலும் வெளிப்படை.

## இந்தியப் பல்கலைக்கழகங்களில்

# தமிழ் வளர்ச்சி

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்

திரை கடல் ஓடிய தமிழர்கள், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கங்கையையும் கடாரத்தையும் கொண்ட தமிழர்கள், உலகம் முழுவதும் சென்று வாணிபம் நடத்தி மொழியையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொண்டிருந்தார்கள். அதனுடைய எச்சங்களாக இன்று இலங்கையிலும், மலேசியாவிலும், பிஜியிலும், மொரிசியசிலும், அதேபோன்று ரீயூனியன் போன்ற பகுதிகளிலும் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறே உலகம் முழுவதும் பரந்த தமிழர்கள் தமிழகத்தில் இருந்து இந்தியா முழுவதும் பரந்து இருப்பதில் வியப்பு இல்லை.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்று வழங்கப்பெற்ற தமிழ் நிலப் பகுதியில் சிறந்து ஒளிர்ந்த தமிழ் மொழி உலகெலாம் பரவியது. தமிழின் பெருமையை உணர்ந்த பிறநாட்டவரும் அதனைக் கற்றுத் தேர்ச்சி பெற்று புலமை எய்தியமையை வரலாறு வகையுறத் தெரிவித்து வருகிறது. ஒரு காலத்தில் இந்தியத் துணைக் கண்டம் முழுதும் தமிழ் மொழி பரவியிருந்தது என ஆராய்ச்சியாளர் கொண்டிருக்கும் கருத்துக்கு இன்றும் அரணாகத் திகழ்கிறது, பிற மாநிலங்களின் பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழி பயிற்றுவிக்கப் பெறும் இனிய செய்தி.

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழ்க் கல்வியும் வளர்ந்து வருகின்றது. சுமார் 10-ஆம் நூற்றாண்டிற்கு முன்பு தென் மாநிலங்கள் அனைத்திலும் தமிழ்மொழி மிகுதியாகப் பரந்து இருந்தது. 1956-இல் மொழி வழி மாகாணம் பிரிக்கப்பட்ட பின்பு, தமிழர்கள் சிறுபான்மையினர் என்ற நிலையில் எல்லா மாநிலங்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள். குமரியில் இருந்து இமயம் வரை தமிழ்க் கல்வி வளர்ந்துவருவதைப் பார்க்கின்றோம்.

தமிழகத்தில் இருக்கின்ற பல்கலைக் கழகங்களில் தமிழில் வளர்ச்சி இருப்பது இயல்புதான். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்றே தொடங்கப்பட்ட பல்கலைக்கழகம். அங்கு தமிழ்த் துறையில் பல பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோன்றுதான் சென்னைப் பல்கலைக்கழகமும், மதுரைப் பல்கலைக்கழகமும் இயங்கி வருகின்றன. வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்த் துறை உண்டு.

அண்டை மாநிலங்களான கேரள மாநிலத்தில் தமிழ் வளர்ச்சி மிகுதியாக அமைந்துள்ளது. முதல் வகுப்பு முதல் பி.எச்டி. பட்டம் வாங்கும் அளவுக்குத் தமிழ்க் கல்வி உண்டு. பல உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கின்றார்கள். தமிழுக்கும் தனிப் பள்ளிகள் உள்ளன.

பல்கலைக்கழக நிலையில் சிறப்புத் தமிழ் புகுமுக வகுப்பு, பட்ட வகுப்பு, முதுகலை வகுப்புகள் ஆகியவை அமைகின்றன. கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக இராகவையங்கார், வையாபுரிப் பிள்ளை போன்றோர் இருந்து தமிழ் வளர்த்த துறை, அங்கு இப்போது முதுகலை வகுப்பும், எம் ஃபில் வகுப்பும், டாக்டர் பட்டம் பெறுவதற்கும் வேண்டிய வசதிகள் இருக்கின்றன.

கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் சங்க இலக்கியங்கள் அனைத்திற்கும் சொல் அடைவு தயாரிக்கப்பட்டுப் பல அடைவுகள் வெளிவந்துள்ளன. பல முதுகலை வகுப்புக்குரிய ஆய்வு ஏடுகளும் வெளிவந்து உள்ளன. சான்றாக புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை ஆகிய நூல்களுக்குரிய சொல் அடைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கேரள மாநிலத்தில் கள்ளிக் கோட்டைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் சித்தூர் அரசினர் கல்லூரியில் தமிழ் முதுகலை வகுப்பு நடைபெற்று வருகிறது. அதோடு புதுமுக வகுப்பு, பட்ட வகுப்பு ஆகியவற்றில் சிறப்புத்

தமிழ் உண்டு. ஒரு காலத்தில் சித்தூர், பாலக்காடு போன்ற பகுதிகள் தமிழகத்தைத்தான் சார்ந்து இருந்தன. இப்போது தான் அவை கேரள மாநிலத்தில் உள்ளன. தமிழ்க் கல்விக்குரிய எல்லா வசதிகளும் அங்கு இருக்கின்றன. அங்கும் ஆய்வு செய்வதற்குரிய வாய்ப்புகளும் உள்ளன.

மைசூர் மாநிலத்தில் ஏற்கெனவே பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கல்வி இருந்து வருகிறது. மைசூர் பல்கலைக்கழகத்தைக் காட்டிலும் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கல்விக்குரிய சூழ்நிலை மிகுதியாக அமைந்துள்ளது. அங்கு புதுமுக வகுப்பு, பட்டப்படிப்பு மாணவர்கள் ஆயிரம் பேருக்கு மேல் படித்து வருகின்றார்கள்.

தார்வார் கர்நாடக மாநிலத்தில் எம்.ஏ. கன்னடம் படிப்போரும் மொழி இயல் துறை, நாட்டுப்புற இயல் துறை படிப்போரும் தமிழ் கற்பதற்குரிய சூழ்நிலை அமைந்துள்ளது. அதே போன்று மைசூரில் உள்ள கன்னடத்துறையில் தமிழ் கற்பதற்குரிய வாய்ப்பு உண்டு. தமிழ் கற்பிக்கின்றார்கள். அந்தந்த மாநில மொழிகளோடு தமிழ் மொழியை இணைத்துப் பார்ப்பதற்கும், இலக்கியங்களை ஒப்பீடு செய்வதற்கும் நல்ல வாய்ப்பு உண்டு.

ஆந்திர மாநிலத்தில் தமிழ்க் கல்விக்கு நிரம்ப வாய்ப்புகள் உண்டு. அடுத்து இருக்கின்ற திருப்பதியில் அமைந்துள்ளது திருவேங்கடவன் பல்கலைக் கழகம், அப்பல்கலைக் கழகத்தில் முதுகலை, பி.எச்டி. பட்டத்திற்குரிய வாய்ப்புகள் அமைந்துள்ளன. நல்ல பேராசிரியர்களைக் கொண்டு செயல்படுகின்ற வேங்கடவன் பல்கலைக்கழகம் தமிழுக்கு நல்ல தொண்டு செய்து வருகிறது. அத்துடன் ஆண்டிற்கு ஒரு முறை சிறந்த கருத்தரங்கு நடத்தி வருகின்றது. பல மாநிலங்களில் இருக்கின்ற தமிழ் அறிஞர்களை அழைத்து அதன் வாயிலாக அங்கு கற்கின்ற முதுகலை மாணாக்கருக்குப் பயன்படும் வகையில் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. பல தமிழ் நூல்களையும் வெளியிட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் சித்தூர், புத்தூர், நகரி போன்ற இடங்களில் உள்ள அரசினர் கல்லூரிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

ஆந்திர மாநிலத்தில் ஹைதராபாத்தில் அமைந்துள்ள உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை கற்பதற்கும் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்வதற்கும் உரிய சூழ்நிலை அமைந்துள்ளது.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் தென் இந்திய மொழிப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. அதனை மூன்று நிலைகளில் பிரித்துக் கொள்கிறார்கள். ஓர் ஆண்டு, சர்டிபிகேட் வகுப்பு எனவும், இரண்டு ஆண்டு கற்பதை டிப்ளமோ வகுப்பாகவும், மூன்று, நான்கு ஆண்டுகள் கற்கின்ற கல்வியினை உயர்நிலை வகுப்பாகவும் கொண்டு அவற்றிற்குச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

அலகாபாத் பல்கலைக்கழகத்தில் இந்தித் துறையுடன் தமிழ்ப் பகுதி இணைக்கப்பட்டுள்ளது. அங்கும் சர்டிபிகேட் வகுப்புகளும், டிப்ளமோ வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

பனாரஸ் இந்தியப் பல்கலைக் கழகத்தில் இந்தி மொழித்துறையில் தமிழ்ப் பகுதியும் ஒன்றாக அமைந்துள்ளது. அங்கு பி.ஏ., பி.எஸ்ஸி., பயிலுவோர் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படிக்கிறார்கள். தத்துவத்துறைக்குப் பெயர்போன அப்பல்கலைக் கழகத்தில் தமிழ்நாட்டில் இருந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைத்த சைவ சித்தாந்தச் சொற்பொழிவு செய்யப்படுவதும் உண்டு.

லக்னோ பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்கு இந்தித் துறையுடன் அமைந்த தமிழ்ப் பகுதி உள்ளது. அதில் முதல் நிலை, இரண்டாம் நிலை நடைபெற்று வருகின்றன. இளங்கலை, முதுகலை, தமிழ் வகுப்புகள் நடத்த வாய்ப்புகள் உள்ளன.

இந்தியாவில் மிகுதியாகக் கற்றவர்கள் வாழ்கின்ற கல்கத்தா நகரில் உள்ள கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தனித்து அமைந்துள்ளது அங்கு இளங்கலை, புதுமுக வகுப்பு போன்ற வகுப்புகளில் தமிழ் கற்பிக்கின்றார்கள். பல்கலைக் கழக மாணவர்களுக்குக் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் தமிழ் கற்பித்துவருவது குறிப்பிடத்தக்கது.

அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகத்தில் **1969**-இல் தமிழ்த்துறை தொடங்கப்பட்டது. இப் பல்

## அறிவுச் சுரங்கம்

உலகை ஒழுங்கு முறையில் இனிது நடாத்தி வரும் அமைப்புகள் பலப்பல. அவைகளுள் உயிர்ப்பாய்த் திகழ்வது ஒன்று, அது நூல் என்பது.

நூலின் உள்ளுறை யாது? அறிவு. ஆதலின், நூல் அமைப்பை அறிவுச் சுரங்கம் என்று கூறலாம்

**- தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

கலைக்கழகத்தில் தமிழ்ப் பகுதியும் பிற இந்திய மொழிப் பகுதியும் இந்தித் துறையுடன் இணைக்கப்பட்டு உள்ளன. தமிழில் சர்டிபிகேட் டிப்ளமோ வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இளங்கலை சிறப்பு வகுப்பில் தமிழ் பயில வாய்ப்பு உண்டு. முதுகலை பயிலும் இந்தி மாணவர்கள் தமிழை விருப்பப்பாடமாக எடுத்துப் படிக்கின்றனர். அதற்குரிய பாடத்திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

ஆக்ரா பல்கலைக்கழகத்தில் 'கன்ஹையா முன்ஷி இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தி ஸ்டடீஸ் அண்ட் லிங்குஸ்டிக்ஸ்' என்ற இந்தி நிறுவனத்தில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. தமிழில் சர்டிபிகேட் டிப்ளமோ வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்தி முதுகலை வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் மொழி இயலில் முதுகலை வகுப்புப் படிக்கின்ற மாணவர்களும் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துப் படிக்கின்றனர்.

பாட்டியாலாவில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் மொழி இயல் துறையை ஒட்டி இணைந்த தமிழ்ப் பகுதி அமைந்துள்ளது. எம்.ஏ. மொழி இயல் பயிலும் மாணவர்கள் திராவிட மொழியிலும் தமிழ் மொழியிலும் கற்றுவருகிறார்கள்.

பஞ்சாப் மாநிலத்தில் தலைநகராகிய சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் தென் இந்திய மொழித்துறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது. அங்கும் சர்டிபிகேட் டிப்ளமோ வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இரண்டாவது மொழியாக இளங்கலை வகுப்பில் தமிழ் கற்க வாய்ப்புகள் உள்ளன.

இந்தியாவின் தலைநகராகிய புதுடில்லியில் தமிழ் கற்கப் பல கல்லூரிகளும் கழகங்களும் அமைந்துள்ளன. டில்லிப் பல்கலைக்கழகத்தில் 1959-இல் தமிழ்த்துறை ஏற்படுத்தப்பட்டது. இளங்கலை வகுப்பில் தமிழ் பாடமாக அமைந்துள்ளது. பிற மொழியினருக்கு தமிழ் பயிற்றுவிக்க ஓர் ஆண்டு சர்டிபிகேட் வகுப்பும் தொடங்கப்பட்டது. முதுகலை இந்தி படிக்கின்ற மாணவர்கள் தமிழ் படிப்பதற்குரிய வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 1978-இல் முதுகலை வகுப்பு டில்லி பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டது. அது தொடர்ந்து நடந்து வருகிறது. டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்வதற்குரிய நிலை அங்கு அமைந்துள்ளது.

மலேசியத் தமிழ் இலக்கியங்கள் ஒரு சிறப்புப் பாடமாக அப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டு வருகிறது. பல உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதற்குரிய வாய்ப்புகள் அமைந்துள்ளன. அதனால் மிராண்டா கல்லூரி, லேடி ஸ்ரீராம் கல்லூரி போன்ற மகளிருக்கான கல்லூரிகளில் இளங்கலை வகுப்பில் இரண்டாவது பாடமாகத் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. இக் கல்லூரிகளில் நிரம்பத் தமிழ் மாணவர்கள் தமிழ் கற்று வருகின்றனர். தயாள்சிங் கல்லூரி என்ற தென் இந்தியக் கல்லூரியில் முதல் இளங்கலை வகுப்பில் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. முதல் வகுப்பு முதல் டாக்டர் பட்டம் வரை நம் இந்தியத் தலைநகராகிய டில்லியில் தமிழ் படிப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் அமைந்துள்ளன.

அஸ்ஸாம் மாநிலத்தில் கௌஹாத்திப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பகுதி ஒன்று தனியாக அமைந்துள்ளது. அங்கு இரண்டாவது மொழியாகத் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது.

தனித்த சிறந்த பல்கலைக்கழகமாக அமைகின்ற 'சாந்தி நிகேதன்' பல்கலைக்கழகத்தில் இந்தித் துறையுடன் தமிழ்ப் பகுதி இணைந்து செயல்பட்டு வருகிறது. இங்கும் சர்டிபிகேட் டிப்ளமோ வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் தனி மாநிலமாக அமைந்துள்ள புதுச்சேரி மாநிலத்திலும் காரைக்காலிலும் தமிழர்களே வாழ்கின்ற காரணத்தால் முதல் வகுப்பு முதல், முதுகலை வகுப்பு வரை தமிழ் கற்பிப்பதற்குரிய எல்லாச் சூழ்நிலைகளும் அமைந்துள்ளது.

மாஹேயில் உள்ள மகாத்மா காந்தி அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ் கற்பிக்கப்படுகிறது.

இந்தியா முழுவதிலும் பல பல்கலைக்கழகங்களும் தமிழ்க் கல்வி நடப்பதற்கும் மொழி வளர்ச்சி அடைவதற்கும் தமிழக அரசு பெரும் காரணமாக அமைகிறது. திசையெல்லாம் பரவிய செழுந்தமிழ் இந்திய அரங்கில் பல்வேறு மாநிலங்களின் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுச் சிறந்தோங்குவது தமிழுக்கும் - தமிழ்நாட்டுக்கும் பெருமைதரும் செய்தியாகும். இந்திய நாட்டின் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் இனிய தமிழ் இடம்பெறும் காலம் விரைவில் மலர்வதாக!



## பழக்கங்களால் வருவன

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

-ஔவையார்

# உலகத் தமிழ் மாநாடுகள்

இரா. முத்துக்குமாரசாமி

இந்திய மொழிகளுள் ஒவ்வொரு மொழிக்கும் ஆய்வு மாநாடு நடத்தும் பாங்கினை உருவாக்கியது தமிழ் மொழியேயாகும். உலகத் தமிழ் மாநாடு எனத் தமிழ் அறிஞர்கள் நடத்திய பின்- தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் உலகளாவிய மாநாடுகளை நடத்தத் தொடங்கின. இருப்பினும், தமிழ் மொழிக்கு மட்டுமே உலகத்தின் பல்வேறு நாடுகளில் முறையாக மாநாடுகள் நடத்தப் பெற்றுள்ளன. மலேசியா (2 முறை), இந்தியா (2 முறை), இலங்கை (1 முறை), பிரான்சு (1 முறை), மொரீசியசு (1 முறை) என 5 நாடுகளில் மாநாடுகள் நடத்தப் பெற்றுள்ளன.

8-ஆவது உலகத் தமிழ் மாநாடு வருகிற சனவரி 1 முதல் 5 நாள்கள் வரை தமிழ் மணக்கும் தஞ்சைத் தரணியில் நடைபெறவுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாம் மாநாட்டைச் சென்னையிலும்- புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஐந்தாம் மாநாட்டை மதுரையிலும் முறையே 1967, 1981-ஆம் ஆண்டுகளில் சிறப்பாக நடத்தினர். எட்டாம் மாநாட்டைத் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பார்வியக்கும் வண்ணம் நடத்தத் திட்டமிட்டு வருகிறார்கள். அதற்கான ஆக்கப் பணிகள் அனைத்தும் வேகமாகச் செயல்பட்டு வருகின்றன.

### கீழ்த்திசை ஆய்வாளர் மாநாடு

இதுபோல் உலக மொழிகளில் ஒரு மொழிக்குத் தனியாக மாநாடு நடத்த வேண்டிய சூழல் எப்படி எழுந்தது?

சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்து கீழ்த்திசை நாடுகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட உலக அறிஞர்கள், மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு தொடர்பாக மேற்கொள்ளப் பெற்ற ஆய்வுகள் பற்றிக் கீழ்த்திசை ஆய்வாளர்களின் மாநாடு (Orientalists Conference)என்பதனை நடத்தி வருகிறார்கள்.

இந்த மாநாடுகளில் தமிழ் அறிஞர்களும் தமிழ் ஆய்வில் ஈடுபட்டுள்ள பிறநாட்டு, குறிப்பாக மேனாட்டு அறிஞர்களும் கலந்துகொள்வர். தமிழ் மொழி பற்றி தமிழ்நாடு, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து தமிழறிஞர்களும் இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிநாட்டறிஞர்களும் கலந்துகொண்டு ஆய்வுரைகள் படிப்பர்.

ஆனால் காலப்போக்கில் தமிழ் பற்றிய ஆய்வுரை படிப்போர்க்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புக் குறைக்கப்பட்டது. இந்திய ஆய்வு என்றாலே வட இந்தியா பற்றிய ஆய்வு தான் என்பது போன்ற போக்கு தலை தூக்கியது. இத்தகைய போக்கும் புறக்கணிப்பும் தமிழ் ஆய்வாளர்களையும் தமிழஞர்களையும் வருந்தச் செய்தது.

*1964*-இல் தில்லியில் *26*-வது கீழ்த்திசை ஆய்வாளர்களின் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் கலந்துகொண்ட ஈழத்துப் பேரறிஞர்களான தவத்திரு தனிநாயக அடிகளாரும், டாக்டர் க.பொ. இரத்தினம் அவர்களும் ஒத்த கருத்துடைய மேனாட்டு, இந் நாட்டு அறிஞர்களை ஒன்றுகூட்டினர். தமிழ் மொழியின் சிறப்பை மட்டும் எடுத்துச் சொல்லக்கூடிய உலகளாவிய மாநாடு-கருத்தரங்குகளை நடத்தினால் என்ன என்று சிந்தித்தனர்.

### குறிப்பிடத்தக்கவர்கள்

இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் குறிப்பிடத்தக்கோர் தவத்திரு தனிநாயக அடிகள், டாக்டர் க.பொ. இரத்தினம் (இலங்கை), டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார், திரு ஏ.சுப்பையா, டாக்டர் சாலை இளந்திரையன் (இந்தியா), டாக்டர் ஃபிலியோசா (பிரான்சு), டாக்டர் டிபர்ரோ (யு.கே.) டாக்டர் எம்.பி. எமனோ (யு.எஸ்.ஏ.) கூப்பர் (ஆலந்து), டாக்டர் கமில் சுவலெபில் (செக்), இவர்கள் கூடி உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை (International Association of Tamil Research) உடனடியாகத் தோற்றுவித்தனர். அடுத்து அமெரிக்காவில் *1967*-இல் நடைபெற்ற *27*-வது கீழ்த்திசை ஆய்வாளர்களின் மாநாட்டின் போது 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்' யுனெஸ்கோ ஆதரவு பெற்ற அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டது.

### முதல் மாநாடு

*1964*-இல் உருவாக்கப்பெற்ற 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்' இந்தியாவில், சென்னையில் முதல் உலகத் தமிழ் மாநாட்டை நடத்த எண்ணியது. அதற்காகத் தனிநாயக அடிகளாரும், மொழி அறிஞரான திரு. ஏ.சுப்பையா அவர்களும் திட்டமிட்டபோது சீன ஆக்கிரமிப்புக் காரணமாக இந்தியாவில் நிலவிவந்த நெருக்கடி நிலைமை இடையூறாக அமைந்தது.

எனவே, முதல் மாநாட்டை மலேசியாவில் நடத்துவதெனத் தனிநாயகம் அடிகளார்

## இனியது எது?

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளாரைக்
கனவினும் நனவினும் காண்பதுதானே

-ஔவையார்

திட்டமிட்டார். அவர் மலேயாவில் கோலாலம்பூரில் இயங்கிவந்த மலேயாப் பல்கலைக் கழகத்தில் இந்திய ஆய்வுத் துறையில் தலைவராகத் திகழ்ந்தார். மலேயாவில் வாழ்ந்து வந்த தமிழன்பர்களும் அடிகளாருக்குப் பெரிதும் துணைநின்றனர்.

*1966* ஏப்ரல் *16* முதல் *23* வரையிலான நாள்களில் முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது.

தமிழ்நாட்டிலிருந்து தமிழக முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் முப்பதுபேர் கொண்ட குழு மாநாட்டிற்குச் சென்றது.

பல நாடுகளிலிருந்து *300*-க்கும் மேற்பட்ட பேராளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர். மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். இம்மாநாட்டில் படிக்கப்பெற்ற *100*-க்கு மேற்பட்ட கட்டுரைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. இம்மாநாட்டையொட்டித் தமிழக அரசு தொல்பொருள் துறையினர் தமிழரின் சிறப்பை எடுத்துக்காட்டும் காட்சி ஒன்றை அமைத்திருந்தனர்.

அம் மாநாட்டில் கலந்துகொண்ட தமிழக முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் நடத்த விருப்பம் தெரிவித்தார். அதற்கு மன்றமும் இசைவளித்தது.

### இரண்டாவது மாநாடு

*1967*-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் முந்தைய முதல்வரின் வாக்குறுதியை நினைவூட்ட, பேரறிஞர் அண்ணா அவர்களும், மாநாட்டை நடத்த இசைவு தந்தார். *1968* சனவரி *4–10* நாள்களில் சென்னையில் *2*-ஆம் உலகத் தமிழ் மாநாடு பல்வகையான சிறப்புகளுடன் நடைபெற்றது.

முதன் முறையாக ஆய்வுக் கருத்தரங்கும் பொதுக் கருத்தரங்கும் தனித்தனியாக நடைபெற்றன. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பல்கலைக்கழக வளாகத்தில் ஆய்வுக் கருத்தரங்கை நடத்தியது. இக் கருத்தரங்கில் 500-க்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர். இதில் படிக்கப்பெற்ற 200-க்கும் மேற்பட்ட ஆய்வுரைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பெற்றன.

பொது நிலை மாநாடு சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்றது. பொதுமக்கள் பெருந்திரளாக ஐந்து நாட்களிலும் நடைபெற்ற சொற்பொழிவுகள், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கண்டுகளித்தனர். மாநாட்டுத் தொடக்க நாளன்று சென்னை மலைச்சாலையில் மாபெரும் ஊர்வலம் நடந்தது.

**சென்னையில் கிளை அமைப்பு**

மாநாட்டு மலர் சிறப்பாக வெளியிடப்பெற்றது. மாநாட்டுக் காட்சி ஒன்றும் அருமையாக அமைக்கப்பெற்றது. தமிழ்ப் பெரும் புலவர்கள் திருவுருவச் சிலைகள் மெரினா கடற்கரை ஓரத்தில் வரிசையாகத் திறக்கப்பெற்றன. எல்லாவகையிலும் மாநாடு சிறப்பாகத் திகழ்ந்தது.

மாநாட்டின் பயனாகச் சென்னையில் 'உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்' (International Institute of Tamil Studies) அமைக்கப்பெற்றது. சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களிலும் திருக்குறள் ஆய்வுத்துறைகள் தொடங்கப்பெற்றன.

**மூன்றாவது மாநாடு**

மூன்றாம் மாநாட்டை முதன் முறையாக ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பிரான்சு நாட்டில், பாரிசு நகரில், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமும், பாரிசில் உள்ள பிரெஞ்சு இந்திய ஆய்வு நிறுவனம் (French Institute of Indology) என்னும் அமைப்பும் இணைந்து நடத்தியது. இதன் கிளை புதுச்சேரியில் சிறப்பாக இயங்கி வருகிறது.

இதன் தலைவராகத் திகழ்ந்த டாக்டர் ழீன் பிலியோசா (Dr. Jean Filliozat) மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். தமிழகத்திலிருந்து தொலைதூர நாட்டில் மாநாடு நடந்ததால் தமிழறிஞர்கள் 15 பேர் கொண்ட குழுவை மட்டும் தமிழக அரசு மாநாட்டிற்கு அனுப்பியது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

ஐரோப்பிய, மேலைநாட்டறிஞர்கள் உட்பட 100 பேர் மட்டும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். மாநாட்டில் படிக்கப்பெற்ற 40-க்கும் மேற்பட்ட கட்டுரைகள் ஒரு தொகுதியாக வெளியிடப்பெற்றன. பாரிசில் வாழ்ந்த தமிழர்கள் மாநாட்டில் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். மாநாடு 1970 ஜூலை மாதம் 15-18 நாள்களில் நடைபெற்றது.

**நான்காவது மாநாடு**

நான்காவது மாநாட்டை இலங்கைத் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் நடத்த விரும்பினர். மூன்று மாநாடுகளையும் திட்டமிட்டு நடத்திய அடிகளார், மலேசியப் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்று யாழ்ப்பாணத்தில் குடியேறினார். யாழ்ப்பாணத்தில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை மாநாட்டை ஏற்பாடு செய்தது.

இலங்கை அரசு ஒத்துழைக்காத நிலையில் மன்றம் மாநாட்டைச் சுருங்கிய அளவில் நடத்தியது. மேனாட்டறிஞர்களும் தமிழ் நாட்டறிஞர்களும் மாநாட்டில் முழு அளவில் கலந்து கொள்ளத் தயங்கினர். இருப்பினும் தமிழகத்திலிருந்து 2 0-க்கு மேற்பட்டவர்களும் மேனாட்டவர் சிலரும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தனிநாயக அடிகளார் மாநாட்டில் உடல் நலிவுற்ற நிலையில் கலந்து கொண்டார்.

1974 சனவரி 3-9 நாள்களில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப்பெருமக்கள் பெரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ள மாநாடு நல்ல முறையில் நடைபெற்றது.

இறுதிநாளன்று நிறைவுநாள் சிறப்பு நிகழ்ச்சி பொது இடத்தில் நடந்தது. கூட்டம் கட்டுக்கடங்காத அளவில் இருந்தது எனக்கூறி அதனைக் கலைப்பதற்குக் காவல்துறையினர்

## உண்மையைக் காண்!

இளைஞர் எந்த நூலை வாசிப்பினும், எந்தச் சொற்பொழிவைக் கேட்பினும், கண்ணால் எதனைக் காணினும் அவற்றில் தன் அறிவையும் ஆராய்ச்சியையும் செலுத்தி உண்மை காண முயல வேண்டும்.

**- டாக்டர் மா. இராசமாணிக்கனார்.**

சுட்டனர். இதில் சிலர் மடிந்தனர். இனக் கல வரம் வெடிப்பதற்கு இதுவும் ஒரு காரண மாயிற்று.

இம் மாநாட்டில் 200-க்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர். இதில் படிக்கப்பெற்ற 80-க்கு மேற்பட்ட கட்டுரைகள் இரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெற்றன.

**ஐந்தாவது மாநாடு**

5-ஆம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்த திராவிட இன வரலாற்றில் ஈடுபாடுகொண்ட மேற்கு ஆபபிரிக்க நாடான செனகல குடியரசுத் தலைவர் டாக்டர் செங்கோர் விரும்பினார். மன்றமும் இசைவளித்தது.

இடையில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 5-ஆம் மாநாட்டைத் தமிழகத்தில் நடத்த விரும் பினார். எனவே டாக்டர் செங்கோர் அவர் களிடம் இதுபற்றித் தெரிவித்து, பின் தமிழ கத்தில் நடத்த இசைவளிக்கப்பெற்றது.

மாநகர் மதுரையில் 1981 சனவரி 4—10 நாள்களில் 5-ஆம் உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டுப் பொறுப்பு முழுவதையும் முதல்வர் அவர் களே முன்னின்று நடத்தினார். தொடக்க விழா தமுக்கம் மைதானத்தில் மிகக் கோலா கலமாகக் கொண்டாடப்பெற்றது. ஆய் வரங்கம் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. பொது நிகழ்ச்சிகள் தமுக்கம் மைதானத்தில் நடந்தது.

மாநாட்டையொட்டி மதுரை பல வழி களில் அழகுபடுத்தப்பெற்றது. மாநாட்டு மலர் சிறப்பாக வெளியிடப்பெற்றது. மதுரை நுழைவு வாயில்களில் தோரணவாயில்கள் அமைக்கப்பெற்றன.

மாநாட்டுக் கருத்தரங்கில் 800-க்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர். 20-க்கும் மேற்பட்ட வெளிநாடுகளிலிருந்து 100 பேராளர்கள் வருகை தந்தனர். இலங்கை, மலேசியா நாடுகளிலிருந்து 250 பேராளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் படிக்கப்பெற்ற 150-க்கும் மேற்பட்ட கட்டுரைகள் மூன்று தொகுதி களாக வெளியிடப்பெற்றன.

**ஆறாவது மாநாடு**

6-ஆவது உலகத் தமிழ் மாநாடு மலேசியப் பல்கலைக்கழகத்தின் ஆதரவுடனும் மலேசிய அரசு ஒத்துழைப்புடனும் 1987-ஆம் ஆண்டு நவம்பர் 15-19 நாள்களில் கோலாலம்பூரில் நடைபெற்றது. மாநாடு வெற்றியுடன் நடை பெற மலேயா அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்கள் பெரிதும் பாடுபட்டார்கள்.

மாநாட்டுத் தொடக்க விழாவில் மலே சியப் பிரதமர் மாண்புமிகு மகாதீர் மகமது அவர்கள் கலந்து கொண்டு மாநாட்டைத் தொடங்கிவைத்தார்.

ஆய்வுக் கருத்தரங்கம் மலேயாப் பல் கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. அப் பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறை கருத் தரங்கை வெற்றியுற நடத்தியது. இதில் படிக்கப்பெற்ற கட்டுரைகள் இன்னும் அச்சு வடிவில் வராதது வருந்தத்தக்கது.

**ஏழாவது மாநாடு**

இம் மாநாட்டிற்கு வருகைதந்த மொரிசி யசுத் தீவின் அரசுப் பேராளர்களும், தமிழ றிஞர்களும் 7-ஆம் மாநாட்டை மொரிசியசில் நடத்த விருப்பம் தெரிவித்தனர்.

அந்நாட்டின் கல்வியமைச்சர் மாண்புமிகு ஆறுமுகம் பரசுராமன் மாநாட்டை நடத்தப் பலவழிகளிலும் பாடுபட்டார்.

1989 திசம்பர் 4-8 நாள்களில் ஏழாம் மாநாடு அந்நாட்டில் மோகா எனும் ஊரில் உள்ள மகாத்மா காந்தி இந்திய மொழி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்றது. இம் மாநாட்டில் தமிழகத்திலிருந்து 15 பேர் கொண்ட குழு தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்டது. தனிப்பட்ட முறையில் 50-க்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டனர். தென் ஆப்பிரிக்கா, ரியூனியன் நாட்டுத் தமிழன்பர்கள் முதன்முறையாக உலகத் தமிழ் மாநாட்டில் பெருமளவில் கலந்து கொண்டனர். மாநாடு தொடக்க நாளன்று 1000 பேர் கலந்து கொண்ட பண் பாட்டு ஊர்வலம் ஒன்று சிறப்பாக நடத்தப் பெற்றது.

மொத்தத்தில் 300-க்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்ட இம்மாநாட் டில் படிக்கப்பெற்ற கட்டுரைகள் தமிழகத்தில் அச்சாகி வருகின்றன. தஞ்சையில் நடைபெற விருக்கும் 8-ஆவது உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் இந்நூல் வெளியிடப்பெறும்.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

## உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

### ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

## 2%

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இல்வச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**

சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**

*சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/519/DIS/94

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



# இசையும் பாட்டும்

—வித்துவான் ல. சண்முகசுந்தரம்

**ந**மது தமிழிசை உணர்ச்சிமயமாக இருக்கிறது. அதனால் இதயத்தை அப்படியே திறந்து காட்டுகிறது. வார்த்தைகளால் எடுத்துக் காட்ட முடியாத உணர்ச்சியின் நுட்பங்களையும் ஆழங்களையும் கையில் எடுத்துக் காட்டுவது போல் காட்டிவிடுகிறது. காட்டுவது மட்டுமா? காட்சியின் ஒவ்வாரு அம்சத்தையும் மனதில் அப்படி அப்படியே நிற்க வைத்துவிடுகிறது இசை. நமது தமிழிசை.

இல்லை என்றால் இசையைத் 'தெய்வ கடாட்சம் என்று சொல்வார்களா?


இதயத்தை உருக்கி அதோடு எலும்பையும் உருக்கி விடுகிறது நமது தமிழிசை. புடம் போட்டுப் புடம் போட்டுச் சொக்கத் தங்கமாகவே மாற்றி விடுகிறது நமது தமிழிசை.

இதயத்தின் ஆழ்ந்த ஆனந்தத் தத்துவத்திலிருந்து ஒலிகள் உண்டாகின்றன. அவற்றில் கணக்கில்லாத அம்சங்கள் குழைந்தும் நெளிந்தும் சுழன்று சுழன்று வட்ட மடிக்கின்றன. அப்பொழுது உணர்ச்சிகள் கண்ணைப் பறிக்கும் நட்சத்திரங்களாய்ப் பூத்துச் சொரிகின்றன.

தேவாரம், திருவாசகம், கம்பர், திவ்யப் பிரபந்தப் பாடல்கள், கூட வேண்டாம் தாயுமானவர், பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், வள்ளலார் இவர்கள் பாடல்களில் ஏதாவது ஒன்று போதும்.

ஏன் ஒருவரி கூடப் போதும். உணர்ச்சியோடு ஒருவர் அதை எடுத்துப் பாடினால் போதும் கேட்பவர் உள்ளம் உருகிவிடும். வேண்டாத பிர்க்காக்கள். அதிகப்பிரசங்கத்தனமான சங்கதிகள் ஒன்றும் தேவை இல்லை. ஏதோ சுரஸ்தாயின் உச்சத்தைத் தொடுகிறேன் என்று தொண்டையை இறுக்கிக் கசக்கிப் பிழிகிற வித்தை ஒன்றும் தேவை இல்லை. அலட்டிக் கொள்ளாமல் நிதானமாக மனம் ஒன்றிப் பாடினால் போதும். பள்ளத்தை நோக்கி வெள்ளம் பாய்வதுபோல் மனசுக்குள் பாய்ந்து வட்டம் போடும் இசை. பாடலைக் குழைப்பதைப் போலக் கேட்பவர்களின் உள்ளத்தையும் குழைத்துவிடும் அந்தத் தெய்வ கானம். உள்ளத்துள் மண்டிக்கிடந்த துயரங்களை எல்லாம் அள்ளி அள்ளி வெளியே கொட்டிவிடும் அந்த இசை.

பாடலை மனசில் வாங்கி உணர்ச்சியோடு ஒட்டிப் பாடினால் போதும். ஒரு காவடிச் சிந்தோ, பாரதியார் பாட்டோ, நாடோடிப் பாடலோ எதுவானாலும் போதும். பாடப்



# 11,991 இசை வகைகளைக் கண்டுணர்ந்த தமிழ் மக்கள்!

இசையானது, பண் உருவங்கொள்ளும் போது, 'பண்கள்' எனவும் 'திறங்கள்' எனவும் பாகுபாடு கொள்ளப்படும். அவற்றுள் ஏழு நரம்புகளும் நிறைந்தது பண்; அதற்குக் குறைந்த நரம்புகள் அமைந்தது திறம். திறங்கள் பண்களுக்கு இனமானவை. ஒளியில் ஏழு வகையான நிறங்கள் இருந்து இயங்குதல் போல, ஒலிகளும் ஏழு வகைளாக இயங்கி வெளியிற் காரியங்களை நிறைவேற்றுகின்றன. அவ்வெழுவகை ஒலிப்பிரிவுகளே இங்கு, ஏழு நரம்புகள் எனப்பட்டன. இவ்வொலி வகைகளுக்குப் பண்டைக் காலத்திலேயே தமிழ் முன்னோர் முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று பெயர்களிட்டு வழங்கினர். இவ்வெழுவகை ஒலிகளையும் குறிப்பதற்குத் தமிழ் மொழியிலுள்ள உயிரெழுத்துக்களில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு நெட்டெழுத்துக்களையும் முன்னோர் பயன்படுத்தி வந்தார்கள். இப்போது அவை 'ச ரி க ம ப த நி ச' எனப்படுகின்றன. இவ்வெழுவகை யொலிகளையும் பண்களுந் திறமுமென்று பல கிளைகளாக இயங்கும் வகைகளில் தமிழ் மக்கள் 11,991 இசை வகைகளைக் கண்டுணர்ந்து பயின்று இன்புற்றிருக்கின்றனரரென்று தெரிகின்றது. அப்பெரு மக்களின் இசைஞான விரிவுக்கும் நுட்ப திட்பத்துக்கும் இவ்வெண்ணிக்கை ஒன்றே கூடப் போதுமான சான்றாகுமன்றோ!

—"சங்கநூற் கட்டுரைகள் அல்லது பழந்தமிழர் நாகரிகம்' என்னும் நூலில் திரு இளவழகனார்.

பாட ஒன்பான் சுவையும் அங்கங்கே கனியும், தேன் சொட்டும். கேட்பவர்களின் இதயத்தையும் கனியச் செய்துவிடும்.

கமகம் விழ வேண்டிய இடத்தில் கமகம் விழும். கார்வை விழ வேண்டிய இடத்தில் கார்வை விழும். மளமள என்று ஏறும். அப்படியே கடகட என்று இறங்கும். ஒரு இடத்தில் கூட உடைசலோ, பிசிரோ விழாது. அப்படி ஒரு சிமிட்டு, இப்படி ஒரு சொடக்கு, ஒரு சுருட்டு, ஒரு குழிசல், எல்லாம் சேர்ந்து கமகம என்று மணக்கும்.

தமிழ்ப் பாட்டு என்றால் அதற்கு அப்படி ஒரு வல்லமை. தமிழ் இசை என்றால் அதற்கு அப்படி ஒரு சக்தி.

தமிழிசையின் அற்புதம் தெரிய வேண்டும் என்றால் தமிழ்ப் பாடல்களை மனம் வைத்துப் பாட வேண்டும்.

தமிழிசை இன்று நேற்று உண்டானதில்லை. பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உண்டானது. இன்றிருக்கும் நிலையைவிட, பண்பட்ட நயமான வளம் மிக்க சதுரப் பாட்டோடு இருந்தது முந்திய தமிழிசை.

வெறும் கணக்கிலிருந்து சுரங்களின் ஏற்ற இறக்கங்களில் இருந்து மட்டும் உண்டானது இல்லை தமிழிசை. அது உணர்ச்சியிலிருந்து-ஆழ்ந்த அகன்ற ஆனந்த உணர்ச்சியிலிருந்து விளைந்தது.

ஒரு தாமரைத் தடாகத்தில் தாமரை மலர் பூத்துக் குலுங்குவதைக் கண்டால் 'எப்படி உண்டாகியது இது என்ற அதிசயித்து விடுவோம்'. அதன் இதழ்களையும், அவற்றை அடுக்கிவைத்திருக்கிற அற்புதத்தையும், நெளிவுகளையும், குழைவுகளையும் வியந்து வியந்து அனுபவிப்போம். தாமரையின் இந்த அற்புதமான வண்ணத்தை, வடிவத்தை, உருவப் பொலிவை எத்தனைக் கவனத்தோடு உண்டாக்கிவிட்டது இந்தத் தடாகம் என்று வியப்படைவோம்.

அப்படியே நம் முன்னோர்களும் ஒலிகளின் நெளிவு, சுழிவுகளையும் அது ஒரு பண்ணாக உருவெடுத்து நிற்கும் உருவப் பொலிவையும் பார்த்து அதிசயத்தார்கள்.

அந்த அதிசயத்திலிருந்து பிறந்ததுதான் தமிழ்ப்பண்களுக்கு மருதம் (மருதமலர்) குறிஞ்சி (குறிஞ்சிமலர்) முல்லை (முல்லை மலர்) பாலை (பாலைமலர்) நெய்தல் (நெய்தல்மலர்) என்று பெயர்கள். முல்லை நெய்தல் என்று, ஐவகை நிலங்களின் மலர்களின் பெயர்களைப் பண்கள் பெற்றது அதிசயந்தான். அதைவிட அதிசயம் மலர்களைப் போலவே பண்களும் பல ஆயிரம் வருடங்களாகத் தொடர்ந்து உருக்குலையாமல் இன்றைக்கும் நம் கையில் நடமாடுகின்றன. தோடி, சங்கராபரணம், அடாணா, பைரவி, என்று பலபலப் பெயர்களில் இராகங்களாய் நடமாடுகின்றன. அது பேரதிசயம்!

இலட்சோபலட்சம் வருஷங்கள் ஆனாலும் தாமரையில் ஒரு இதழ் கூடி இருக்கிறதா? இல்லை குறைந்திருக்கிறதா? எப்படித் தாமரை தன் வனப்பையும் கட்டுக்கோப்பை யும் மஞ்சாடி கூடப் பிசகாமல் கவனமாகப் பாதுகாத்து வந்துள்ளதோ அப்படியே பண களும் தம் நிலைகளையும் இயல்புகளையும் பாதுகாத்து வருகின்றன.

எந்த நேரத்தில் எந்தப் பூ பூக்கும் என்று ஒரு கணக்கு இருக்கிறது. தாமரை பகலில் மலரும். அல்லி- ஆம்பல் இரவில் பூக்கும். இரவுக்கு அல் என்று பெயர். இரவில் பூப்ப தாலேயே அதற்கு அல்லி என்று பெயர் வந்தது.

கோடான கோடி வருஷங்களாக இந்த முறை மாறினதில்லை. அப்படி ஒரு தெளிவு. அப்படி ஒரு நிச்சயம்.

இந்தத் தெளிவையும் நிச்சயத்தையும் ஒவ்வொரு பண்ணிலும்- ஒவ்வொரு ராகத் திலும் பார்க்கலாம். அப்படி ஒரு உருக் குலையாத உறுதி நிலை- புஷ்பங்களைப் போல நமது பண்களுக்கு உண்டு. அதனால் தான் புஷ்பங்களின் பெயரே பண்களுக்கும் பெயராய் அமைந்தன.

இந்த அற்புதமான சங்கீதம் காற்றோடு காற்றாய் மண்ணோடு மண்ணாய் மறைந்து போய்விடக் கூடாதே என்று முன்னோர்கள் மிகவும் ஆதங்கப்பட்டார்கள்.

தமிழ்நாட்டில் ஊர்தோறும் கோவில்கள். கோவில்கள் தோறும் விழாக்கள். நம்முடைய தமிழிசை என்றென்றும் நிலை பெற்று நிற்பதற்காக கோவில்களில் இறைவனுடைய திருவடிகளில் இசையைப் பாதுகாப்பாய் வைத்துவிட்டார்கள். 'பாட்டால் பரமனைத் தொழலாம்' என்றார்கள்.

கோவில்தோறும் ஓதுவார்கள் உண்டு. அவர்கள் நாள்தோறும் பாடல்களை இசை யோடு பாடி வந்தார்கள். அப்படியே கோவில் தோறும் நாதசுரம் மேளம் பரத நாட்டியம் சின்ன மேளம் இப்படி ஒரு அமைப்பு.

நாதசுரமும் பரதநாட்டியமும் தமிழிசையை மெருகூட்டி மெருகூட்டி வளர்த்தன. பண் களின் பொலிவும், கம்பீரமும், ஒய்யாரமாய் ஓங்கி வளர நாதசுரமும் பரதநாட்டிய முந் தான் காரணம்.

நயங்களும் இன்றைக்கும் தமிழிசையின் பூர்வமான- பண்களும் உயிரோடு இருக்கிறது

## ஒன்றேகுலம் ஒருவனே தேவன்!

தமிழ் ஒரு மொழி மட்டுமன்று, மொழி கடந்த இனம். இனம் மட்டுமன்று, இனங்கடந்த பண்பு. அது ஒரு சமயம், சமயம் கடந்த சமயப் பண்பு. ஒரு நாகரிகம், நாகரிகம் கடந்த நாகரிகப் பண்பு. ஒரு தேசியம், தேசியம் கடந்த உலக தேசியப் பண்பு. இதைக் காட்டும் குறிக்கோள் வாசகமே, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது.

**–பன்மொழிப்புலவர்**
**கா. அப்பாத்துரையார்**

என்றால்- கலையோடு ஜொலிக்கிறது என் றால் அதற்கு நாதசுரந்தான் முழுக்க முழுக்கக் காரணம். பரதநாட்டியம் நாதசுரத்தின் சேவைக்கு ஒத்துழைத்தது.

விலைமதிக்க முடியாத செல்வம் தமிழிசை. அந்தத் தெய்வ இசையை இரு கண் களாய் வைத்துக் காப்பது பெரிய மேள நாத சுரமும், சின்ன மேள பரதநாட்டிய முந்தான்.

தமிழகம் முழுவதும் பட்டிதொட்டிகளில் கூட கோவில்களும் பாடலும், இசையும், கூத் துமாய் ஆனந்தம் தாண்டவம் ஆடின. இதை எப்படிக் கண்டாரோ கவியரசர் ரவீந்திரநாத் தாகூர். அவர் வங்காளத்தைச் சேர்ந்தவர். தமிழ்நாட்டுக்கும் வங்காளத்துக்கும் அப்படி ஒரு நெருக்கமும் இல்லை. ஆனாலும் கவியரசர் "தமிழகம் முழுவதும் இசையகம்" என்றார். "தமிழ்க் கவியைப் போல உலகில் எங்குமே கவி கிடையாது" என்றார்.

இனி, பண்டித ஜவகர்லால் நேருவோ வாழ்நாள் முழுவதும் இருபத்து நாலுமணி நேரமும் அரசியல் பாலைவனத்தில் சுற்றிச் சுற்றி அலைந்தவர். ஆனாலும் அவர் ஒரு தடவை சொன்னார் "சிந்தனைச் செல்வமும் தத்துவவளமும் நிறைந்தது வட இந்தியா. ஆனா் கலைக்கோவில்களும் கலைத் தெய்வங் களும் தமிழ்நாட்டில்தான் அதிகம்" என்றார்.

இந்தப் பெருமைக்கு முக்கியக் காரணம் நமது இசை அதாவது தமிழிசைதான். நமது கலைகளையும் பண்பாட்டையும் தமிழிசை பேணிக்காத்து வந்திருக்கிறது. வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, தமிழிசை என்றெல்லாம் கவிச் செல்வங்கள் நம்மிடம் இருக்கின்றனவே. இப்படி ஒரு அற்புதச்

செல்வத்தை வேறு எங்காவது பார்க்க முடியுமா?

சுதி பிறழாத சுத்தமான பண்ணும், தாளமும், நடனமும், அபிநயமும் ஒவ்வொரு பாடலிலும் பொங்கிப் பூரிக்கின்றன.

ஒரு பாடலை அது பூர்வமான பாடலாக இருந்தாலும் சரி, சமீப காலத்திய தேசிக விநாயகம் பிள்ளை பாடலாக இருந்தாலும் சரி, வெண்பாவோ,விருத்தமோ யாதாக இருந்தாலும் சரி ஒருவர் உணர்ச்சியோடு நிறுத்திப் பாடினால் போதும். கேட்பவர்களுக்கு ஆட்டம் வந்துடும் அதனால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என்ன நினைப்பார்களோ என்கிற நினைப்புவரும். அதனால் ஆட்டம் கொஞ்சம் அடங்கி ஒடுங்கி ஒரு நிலையில் நிகழும். ஆனால், பாடலின் ஒவ்வொரு அசைவும் காட்டுகிற ஒவ்வொரு அசைவுக்கும் ஏற்றபடி மனசே மனசுக்குள் ஒரு அபிநயத்தைப் பிடித்துப் பார்க்கும். பாடலின் ஒவ்வொரு சீரும் தாளக் கட்டோடு பேசும். தளைகளில் நடனத்தின் சஞ்சாரம் நடக்கும். ஒவ்வொரு வரி அடியிலும் நடன மங்கையின் முன்நடை பின்நடை தெரியும். எதுகையிலும் மோனையிலும் உணர்ச்சி பாவங்கள் விம்மிப் புடைக்கும். அத்தனையையும் கண்டுகளிக்கும் மனக்கண்! அதை அனுபவித்து உடம்பு தானாக ஆடும். இசைதான் நடனத்துக்கு மூலாதாரம் என்பதற்கு இது ஒன்று போதாதா?

மற்றநாட்டுச் சமாச்சாரங்கள் எப்படியோ? நமக்கு அதுபற்றிக் கவலை இல்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை நடனத்துக்குத் தாய் இசைதான். தமிழிசையேதான்.

ஆனால், அந்த இசை பாடலோடு பாடலாய்க் கிடக்கிறது, பாடல் இல்லை என்றால் உடம்பில்லாத வெறும் ஆவிதான். பாடல்கள் இல்லை என்றால் வெறும் இசை பிரயோசனப்படாது. ஐந்து நிமிடம் பத்து நிமிடம் வேண்டுமானால் கேட்கலாம். செவிக்கு ஒரு குளுமையைக் கொடுக்கும். அதற்குப் பிறகு ஒத்துக் கொள்ளாது.

அதேபோலத்தான் இசையோடு ஒட்டாத செய்யுள். அது வெறும் சொல்லடுக்குத்தான். உயிரில்லாத சவம் என்றுதான் அதை ஒதுக்குவார்கள்.

இப்படியாகப் பாடலும் இசையும் சேர்ந்து தமிழகம் எங்கும் பரிமளிக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள ஆண் பெண் குழந்தைகள் அத்தனைப் பேருக்கும் சொந்தமானது தமிழிசை. மாடு மேய்க்கிறவனிலிருந்து கோடீஸ்வரன் வரை சேவகனிலிருந்து பேரரசன் வரை அத்தனை பேருக்கும் பிறப்போடு பிறப்பாய் ஒட்டி வந்தது தமிழிசை.

இசை ஆசிரியனைப் பற்றிச் சொல்கிற பொழுது அடியார்க்கு நல்லார்-

"உருக்களை இசை கொள்ளும்படியும் இரதம் கொள்ளும்படியும் புணர்க்கவும் வல்லவனாய் உள்ளவன் இசை ஆசிரியன்" என்று குறிப்பிடுகிறார். உருக்கள் என்றால் பாடல்கள். இசை கொள்ளும்படி என்றால் பாடலுக்குள் இருக்கிற இசை வெளிப்படும் படி என்று பொருள். இரதம் என்றால் ரசம். அதாவது உணர்ச்சிபாவம். புணர்க்கவும் வல்லனாய் என்றால் நவரசங்களும் அங்கங்கே வந்து விளையாட வைத்தல். ஒன்றுக்கு ஒன்று பயந்து ஒதுங்கி ஓடாதபடி அவைகளைச் சேர்த்து வைத்தல்.

பாடலில் உள்ள உணர்ச்சிகளையும் பாவ உருவங்களையும் வெளிப்படுத்துவதுதான் இசை. அப்படி வெளிப்படுத்துகிறவன்தான் வித்வான்.

அப்படியானால் பாடும் பாடல்கள் விளங்காத அன்னிய மொழிப்பாடல்களாக இருந்தால் அது நடக்குமா?

வெறும் சுரவரிசை, நிரவல், பிர்க்கா, சங்கதிகள் என்கிற கணக்கிலேயே நின்றால் அது நடக்குமா?

## தமிழே செல்வம்!

**தமிழ்தான் எனக்குச் செல்வம்; அதுதான் என் அறிவுப் பசிக்கு உணவு; எவ்வளவுக்கெவ்வளவு நான் அதன் தொடர்பை அதிகப்படுத்திக் கொள்கிறேனோ அவ்வளவுக்கவ்வளவு எனக்கு உற்சாகம். நல்லது செய்தோமென்ற திருப்தி. லாபமடைந்தோமென்ற உணர்ச்சி உண்டாகின்றன. அன்றும் சரி, இன்றும் சரி, இந்த நிலைமை மாறவே இல்லை.**

**—டாக்டர் உ.வே. சாமிநாதையர்—**
**'என் சரித்திரம்'**

# குறள் காட்டும் வாழ்வு

## —'முத்தமிழ்க்காவலர்' அமரர் கி.ஆ.பெ. விசுவநாதம்

**வா**ழ்வு பல வகை. குறள் காட்டும் வாழ்வு ஒரு தனி வகை. அதை உலக மக்களுக்குக் காட்டியவர் திருவள்ளுவர்.

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மக்களாகவே வாழவேண்டும் என்பது அவரது பேராசை அல்ல. மிகப் பெரிய ஆசை. அதன் விளைவே திருக்குறள். அது காட்டும் வாழ்வே குறள் காட்டும் வாழ்வு. வாழ்வாங்கு வாழ்தல் என்று அது கூறுகிறது. இது வாழ்வேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள்படும்.

வாழ வேண்டிய முறை என்பது தனக்காக, தன் குடும்பத்துக்காக என்று வாழாமல் பிறருக்காகவும் வாழவேண்டும் என்பதாகும். இவ்வாழ்வு முறையைத் திருக்குறள் கீழ்க்கண்டவாறு பல வகையாக நமக்குக் காட்டுகிறது.

### எது மக்கள் வாழ்வு?

ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கு வாழ்வு. தன்னலங்கொண்டு உயரப் பறப்பது பறவை வாழ்வு. தீமை செய்தவருக்குத் தீமை செய்து வாழ்வது தேள், பாம்புகளின் வாழ்வு. தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்களின் வாழ்வு. தீமை செய்தவர்களை மன்னித்து விடுவது மட்டுமன்று, அவர்களுக்கு நன்மையைச் செய்வதும் வாழ்வதே மக்கள் வாழ்வு எனக் குறள் கூறுகிறது.

### வாழ்வுக்குப் பத்து உடைமைகள்

உடலுக்குச் சில உடைமைகளை அணிவது போல உள்ளத்திற்கும் சில உடைமைகளை அணிந்து வாழ்வதே குறள் காட்டும் வாழ்வு ஆகும். அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இப்பத்து உடைமைகளையும் பத்துத் தலைப்புகளில் நூறு குறளாக்கி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றைத் தம் உள்ளத்தில் அணிந்து வாழ்ந்தாக வேண்டும் எனக் குறள் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

### ஒன்பது கட்டளைகள்

பொய்யைச் சொல்லாதே! புலாலை உண்ணாதே! கள்ளைக் குடியாதே! களவை நினையாதே! காமங் கொள்ளாதே! கொலையைச் செய்யாதே! சூதை விரும்பாதே! புறங்கூறாதே! பொறாமையடையாதே! பேராசை கொள்ளாதே! என்ற பத்துக் கட்டளைகளும் நல்வாழ்வு வாழ குறள் இடும் கட்டளைகளாகும்.

### பழிக்கு அஞ்சி வாழ்தல்

நம் முன்னோர்களாகிய நூலோர்கள் தொகுத்துக் கூறியவற்றுள் எல்லாம் தலையாய அறங்கள் இரண்டு. அவை பகுத்து உண்ணல் ஒன்று. பல்லுயிர் ஓம்புதல் மற்றொன்று. ஆனால், வாழ்வாங்கு வாழ அவை இரண்டு மட்டும் போதாது. ஒழுக்கமாகவும் நடந்தாக வேண்டும் எனக் குறள் ஒரு புதுவழியைக் காட்டுகிறது. இதைப் "பழியஞ்சு! பகுத்து உண்!" என்ற குறள் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

### விரும்பி வாழ நான்கு

நகை, ஈகை, இன்சொல், இகழாமை ஆகிய நான்கையும் விரும்பிக் கைக்கொள். அது உன் வாழ்வை வளமாக்கும் என்பதே குறள் காட்டும் வாழ்வு. இந்த நான்கை வரிசைப்படுத்தியிருப்பதிலும் ஒரு அழகு தோன்றுகிறது. அவை நல்வாழ்வுக்கு எப்போதும் இனிய முகத்தோடு இருத்தல் வேண்டும். அது முடியாவிடில் இயன்றவரை ஏதாவது கொடுத்து அனுப்பிவிட வேண்டும். அதுவும் முடியாவிடில் இனிய சொற்களையாவது சொல்லி அனுப்பிவிடவேண்டும். அதுவும் முடியாவிடில் அவர்களை இகழ்ந்து கூறாமலாவது இருக்கவேண்டும் என்பன. எப்படி? குறள் காட்டும் வாழ்வு?

### வெறுத்து வாழ நான்கு

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன அவை. பிறரைக் கண்டு பொறாமைப் படாதே! பிறர் பொருளின்மீது ஆசை வைக்காதே! எவர் மீதும் சினம் கொள்ளாதே! எப்போதும் கடும் சொற்களைச் சொல்லாதே! இந்நான்கும் நம் வாழ்வுக்கு ஒளிவீசும் எனக் குறள் கூறுகிறது.

### வழங்கி வாழ நான்கு

அன்பு உள்ளம் கொண்ட சான்றோர்கள் தம் குருதியை, நரம்பை, தோலை மட்டுமல்ல தன் எலும்பையும் பிறருக்கு வழங்கி வாழ்வர் என்ற கருத்தை 'எலும்பையும் உரியர் பிறர்க்கு" என்ற குறட் சொற்றொடர் கூறிக் கொண்டிருக்கிறது.

# முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் மறைவு

## டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் இரங்கல் செய்தி



**மு**துபெரும் தமிழ் அறிஞரும், தமிழ் சித்த மருத்துவ வல்லுநரும், தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியத்தின் தலைவருமான 'முத்தமிழ்க் காவலர்' பெரியவர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து நான் மிகுந்த துயரமும், வேதனையும் அடைந்தேன். மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு, அரும்பணி ஆற்றினார் அவர்.

தமிழ் இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கும், சித்த மருத்துவ வளர்ச்சிக்கும் பெரியவர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் ஆற்றிய தொண்டு போற்றிப் பாராட்டத்தக்கதாகும். அவருடைய மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு மட்டுமின்றி, சித்த மருத்துவத் துறைக்கும் ஒரு பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடுகின்ற அவரது மனைவிக்கும், அவரது குடும்பத்தாருக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் உரித்தாக்கிக் கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

### வாழ்வுக்கு வேண்டிய நட்பு

நட்பு நல்வாழ்வுக்குத் தேவை. ஆகவே, நட்பைக் கைக் கொள்! அதையும் ஆராய்ந்து கொள்! தீ நட்பு கொள்ளாதே! பழமையைத் தள்ளாதே! கூடா நட்பு கூடாதே! சிற்றினம் சேராதே! பெரியோரை வெறுக்காதே! என்ற ஏழு தலைப்புகளில் எழுபது குறள்களைக் கூறி வாழ்வுக்கு வழி காட்டுகிறது குறள்.

### கற்றபடி நிற்றல்

படி! எல்லாவற்றையும் படிக்காதே! படிக்க வேண்டியவற்றைப் படி! அதையும் பிழையறப் படி! மனதில் உள்ள கசடு அறும் படி படி! கற்றிலன் ஆயினும் கேள்! கற்றவற்றையும் கேட்டவற்றையும் சிந்தித்து உணர்! அந்த அளவோடு விட்டுவிடாதே. அதன்படி நட! எனக் குறள் நல் வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

### உள்ளத்தை உயர்த்தி வாழ்

நல்வாழ்வு வாழவேண்டுமானால் உள்ளத்தை உயர்த்தி வாழ். சிறியன சிந்தியாதே. எப்போதும் பெரியதையே எண்ணு. அழுத்தமாக எண்ணு, ஆழமாக எண்ணு. அப்படியே ஆவாய்! வெள்ளம் உயர உயர மலர் உயர்வதுபோல, உன் உள்ளம் உயர உயர நீ உயர்வாய்! நல் வாழ்வு வாழ உள்ளத்தை உயர்த்து! எனக் கூறுகிறது குறள்.

### யார் பெரியார்?

நாம் ஒரு காலத்தில் பணக்காரர், நிலக்காரர், முதல்காரர் ஆகியவர்களைப் பெரியர் என நினைத்திருந்தோம். அடுத்து, படித்தவர், பட்டம் பெற்றவர், பதவியிலிருப்பவர் பெரியர் என

எண்ணினோம். பின், வயதில் முதிர்ந்தோர் பெரியோர் எனக் கருதினோம். இப்பொழுது எழுத்தர்களையும் பேச்சாளர்களையும் பெரியோர் என எண்ணுகிறோம். குறள் இவற்றை ஒப்பவில்லை. யார் பெரியர்? என்ற கேள்விக்கு குறள் கூறும் விடை எழுத்தரல்ல, பேச்சரல்ல 'செய்வர் பெரியர்' என்பதே. இதிலிருந்து மலையளவு பேசுவதை விடக் கடுகளவு செய்து வாழ்வதே நல்லது எனத் தெரிகிறது.

**நா நலம் என்னும் நலமுடைமை**

"நா நலம் என்னும் நலமுடைமை" என்பது அரைக் குறள். அடுத்த அரைக் குறளும் கூட 'அந்த நலம் வேறு எந்த நலத்திலும் இல்லை' என்பதே. அது மட்டுமன்று, 'நாநலம்' என்பதே 'நலமுடைமை' என்பது தான். இதுதான் அதன் உண்மையான பெயர் என்றும் குறள் கூறிக்கொண்டிருக்கிறது.

அளவோடு பேசுதல், ஆராய்ந்து கூறுதல், சொன்னபடி நடத்தல், சொல்லியபடி இருத்தல், இனியவை கூறுதல், எவரையும் வையாதிருத்தல் ஆகியவை அனைத்தும் நாநலத்தின் பாற்பட்டவை என்று குறள் கூறுகிறது.'

**தோற்றத்தைக் கண்டு மயங்காதே!**

கருப்பாக இருக்கிறது. கோணலாக இருக்கிறது. நாடும் நரம்புமாக இருக்கிறது என்று வெறுத்துவிடாதே 'வீணை'யை, நீ இன்பத்தை இழந்து விடுவாய்! சிவப்பாக இருக்கிறது, அழகாக இருக்கிறது, நேராக ஒழுங்காக இருக்கிறது என்று நெஞ்சில் வைத்துவிடாதே 'அம்பை'. அது உன்னைக் கொன்றுவிடும். இவை இரண்டும் மட்டுமல்ல, வேறு எதனையும் தோற்றத்தைக் கண்டே மயங்கிவிடாதே, வாழ்வு பாழாகிவிடும் என எச்சரிக்கை செய்கிறது குறள்.

**பொருள் தேடும் வழி**

பெற்ற தாயின் வயிறு பசிக்கக் காண்பது பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடு பட்டேனும் அத்தாயின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டியது பிறந்த மகனின் கடமை. ஏனெனில், அது அவன் குடியிருந்த கோயில், என்றாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருளைத் தேடி வந்து தாயின் பசியைப் போக்க எண்ணுவது தவறு. எண்ணினால் அத்தகையவரைச் சான்றோர் பழித்து ஒதுக்கிவிடுவர் எனப் பிறந்த மகனின் வாழ்வுக்கும் வழி கூறுகிறது குறள்.

**வினைத்திட்டம்**

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டியது பொருளுதவி அல்ல, நண்பர்களின் துணை அல்ல, மனைவி மக்களின் ஒத்துழைப்பல்ல. அரசாங்கத்தின் ஆதரவு அல்ல, வேறு எதுவுமே அல்ல. அவனுக்கு வேண்டியது மன உறுதி ஒன்றே. இதை 'வினைத்திட்பம்' என்பது 'மனத்திட்பம்' என்ற குறள் காட்டுகிறது.

**மேன்மையடைய வழி**

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்பது அரைக் குறள். இதற்கு மூன்று பொருள்கள் உள்ளன. ஆடை, அணி, பொன், மணி, பட்டம், பதவி முதலியவற்றால் எவரும் மேன்மையடைய முடியாது ஒழுக்கம் ஒன்றினாலேயே அதை அடைய முடியும் என்பது ஒன்று. ஒழுக்கத்தினாலேயே உயர்ந்துவிட்ட ஒருவன் பின் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்ய நேர்தாலும் உலகம் அதை நம்பாது. அப்போதும் அவன் மேன்மையையே அடைவான் என்பது மற்றொன்று. ஒழுக்கத்தினால் உயர்ந்த ஒருவர் பின் வறுமையால் தாழ்ந்து போனாலும் கண்டோர் அவரை 'நன்றாக வாழ்ந்தவர்' என்றே உயர்வாகக் கூறி மகிழ்வர் என்பது மூன்று.

'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்பது மறு பாதிக் குறள். இதற்கும் மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று, ஒழுக்கம் தவறியவன் எல்லோராலும் பழிக்கப்படுவான் என்பது. மற்றொன்று, ஒழுக்கம் தவறியவன் பின்பு திருந்தி நல்ல காரியங்களைச் செய்தாலும் உலகம் நம்பாது. அவன் முன் செய்த பாவங்களைப் போக்கவே இவற்றைச் செய்கிறான். எனக் கூறிப் பலரும் பழி தூற்றுவர் என்பது. இன்னொன்று, அவன் செய்யாத பிறர் செய்த தவறுக்கும் பழி ஏற்க நேரிட்டு விடும் என்பது. இந்த மூன்றாவது கருத்தை இக் குறளிலுள்ள 'எய்தாப் பழியையும் எய்துவர்' என்ற சொற்றொடர் நமக்கு விளக்குகிறது. எப்படி, குறள் காட்டும் வாழ்வு?

**செயல் திட்டம்**

நல்வாழ்வுக்கு வழி 'நற்செயல்களைச் செய்வது' என்பது திருக்குறளின் கருத்து. இதற்கு 120 குறள்களைப் பன்னிரெண்டு தலைப்புகளின்கீழ் கூறுகிறார் வள்ளுவர். அவை ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கமுடைமை என அடிப்படை மூன்று, அடுத்து இடமறிந்து செய்தல், காலமறிந்து செய்தல், வலியறிந்து செய்தல் என அரைப் பகுதியில் மூன்று தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என முக்காற் பகுதியில் மூன்று வினைசெயல் வகை, வினைத்திட்பம், வினைத் தூய்மை என இறுதியில் மூன்று ஆகப் பன்னிரண்டு. இவை அனைத்தும் நல்லவற்றைச்

செய்து நல்வாழ்வு வாழக் காட்டும் வழிகள்.

**மேலல்லார் மேலல்லர்**

ஒருவன் மேலேயிருக்கிறான் நாம் பார்க்கிறோம். மற்றொருவன் கீழேயிருக்கிறான் நாம் பார்க்கிறோம். குறள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. மறுக்கிறது. உள்ளபடியே மேலேயும் கீழேயும் பார்க்கின்ற நாம் இதை எப்படி நம்புவது? நம்பாத நம்மையும் நம்ப வைக்கிறது குறள். ஒரு தராசை எடுத்து, இடது தட்டில் ஒரு படிக்கல்லைப் போட்டுத் தராசைத் தூக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். ஒரு தட்டு தாழ்ந்தும் ஒரு தட்டு உயர்ந்தும் காணப்படுகிறது. வள்ளுவர் நம்மை நோக்கிக் கேட்கிறார். ஏன் இந்தத் தட்டு உயரத்தில் இருக்கிறது? அதில் ஒன்றுமே இல்லை அதனால் உயரத்தில் இருக்கிறது. இன்னொரு தட்டில் சரக்கிருக்கிறது. அதனால் தாழ்ந்து இருக்கிறது. இப்போது குறள் கேட்கிறது. நம்மை, 'உயரத்தில் இருப்பதெல்லாம் உயர்ந்ததா?' என்று. இக்கருத்தை "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்" என்ற குறள் விளக்குகிறது.

**குன்றின் அனையாரும் குன்றுவர்**

திருக்குறளில் ஒருசொற் குறள்கள் எனப் பல உள. அவற்றில் ஒன்று இது. இக் குறளில் நான்கு குன்றுகளைக் காணலாம். முதல் குன்று மலை. இரண்டாவது குன்று குறுகுதல். மூன்றாவது குன்று இழிசெயல். நான்காவது குன்று குண்டுமணி. குறள் இதுதான். "குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ குன்றி அனைய செயின் மலைபோன்று உயர்ந்திருக்கும் மக்களும்கூடப் பழிக்கத் தகுந்த இழிசெயல்களை குண்டுமணி அளவு செய்தாலும் கூடக் குறுகிக் குன்றிப்போய்விடுவர் என்பது இதன் பொருள். நல்வாழ்வு வாழ விரும்புகிறவர்களுக்கு இக் குறள் காட்டும் எச்சரிக்கை மிகப் பெரியதாகும்.

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர்**

நற்செயல்களைச் செய்து நல்வாழ்வு வாழ முன்வருபவருக்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். அதற்குச் சில இடையூறுகளும் வரும். சிலர் தூற்றுவர். சிலர் துன்புறுத்துவர். இவற்றைக் கண்டு கலங்கிவிடக் கூடாது. காட்டில் வாழும் யானையானது தன் உடல் முழுவதும் வேடர்களின் அம்புகளால் தாக்கப் பெற்றுக் குருதி ஒழுகிக் கொண்டிருந்தபோதும் அஞ்சி நடுங்காமல், பீடு நடை நடந்து தன் பெருமையை நிலை நிறுத்தும். அதைப் போலவே 'மன உரம் படைத்த மக்களும் துன்பம் வந்த காலத்துச் சோர்வு அடையமாட்டார்கள்' என்ற கருத்தை, 'புதையம்பிற் பட்டுப் பாடூன்றும் களிறு' எனக் காட்டானையைக் காட்டி நம்மை நிமிர்ந்து வாழச் செய்கிறது இக்குறள்

**மனிதனா தெய்வமா?**

வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவனே மனிதன் எனவும். அவன் மனிதனாயினும் மற்றவர்களால் தெய்வமாகக் கருதப் படுவான் எனவும், அவன் இம் மண்ணுலகில் வாழந்தாலும் அது விண்ணுலகாகக் கருதப்படும் எனவும் ஒரு குறள் கூறுகிறது அது:

"வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது.

**—ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு (1981) மலரிலிருந்து**



## தேமதுரத் தமிழோசை!

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா.

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்
வகை
செய்தல் வேண்டும்.

**-மகாகவி பாரதியார்.**



# வழிகாட்டும் வள்ளுவன்


–டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

பேராசிரியர் மற்றும் தலைவர்

தமிழ் மொழித்துறை

சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.


**மே**லை நாட்டு அறிஞர் ரஸ்கின் என்பவர் எழுதப்படுகின்ற நூல்களை இரண்டு வகையாகப் பகுப்பார். ஒன்று பொழுதுபோக்காக ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு என்று மட்டும் அமையும் நூல்கள். பிறிதொன்று எக்காலத்திற்கும் இயைந்த பயன் படக்கூடிய நூல்கள் இத்தகைய நூல்களை முறையே அவர் Book for all times என்று குறிப்பிட்டார். எந்த மொழியில் எழுந்த நூல்களையும் நாம் இவ்வாறு பகுக்கலாம். வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளுகின்ற பொழுது ரயிலடியில் சில நூல்களை வாங்கி விரைவாகப் படிப்போர், படித்துமுடித்தபிறகு கவனிப்பாரற்றுப் போட்டுவிடுவர். ஆனால் சில நூல்கள் நாள்தோறும் நம்மை வழிநடத்திச் செல்கின்ற நூல்களாக நம் வாழ்க்கை வழிகாட்டி நூல்களாக அமையக் காணலாம்.

பல மொழிகளைக் கற்றுணர்ந்தவர் மகாகவி பாரதியார் ஆவர். அவர்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும்காணோம்

என்றார். இதேபோன்றே,

யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை, உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை

என்றும் கூறினார். மேலும் அவர்,

சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன்றின்மை எனும் பொருளதனை
கம்பக் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழ்ச்
சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று
உறுதிகொண் டிருந்தேன்.

என்றும் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம். இதனாலேயே 'செந்தமிழ்நாடு' என்று தலைப்பமைந்த பாடலில்,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே-தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று முத்தாய்ப்பு வைத்தாற்போல் திருவள்ளுவர்தம் சிறப்பினைச் செப்பமுறைப் புகன்றார்.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி

என்ற பழமொழியும் திருக்குறளின் பெருமையினைப் பேசும்.

"அவர் தொடாத துறை ஒன்றுமில்லை தொட்ட துறைகளை அழகுபடுத்தாமல் விட்டதில்லை" என்று மேனாட்டறிஞர் கோல்டு சுமித் பேரறிஞர் டாக்டர் ஜான்சனைப் பாராட்டியுள்ளமை போன்றே,

எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்று சங்ககாலப் புலவரொருவர் பாராட்டியுள்ளமையினைத் தெளிந்து தேறலாம்.

திருவள்ளுவர் அறத்தின்வழி நன்று பொருளீட்டி இன்பம் துய்ப்பதனை வலியுறுத்துபவராவர். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு 'அறம்' என்றே ஒரு பெயருண்டு என்பர் அறிஞர். எனவே அறநூல் தந்த ஆசிரியராம் திருவள்ளுவர் முப்பாலில் முதலாவதாக வைக்கும் கருத்து 'கடவுள் வாழ்த்து' என்பதாகும். முதற்குறள்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்பதாகும். காமத்துப்பாலின் இறுதி

அதிகாரமாம் 'ஊடலுவகை' என்பதன் இறுதிக்குறள்.

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்

என்பதாகும். அகரத்தில் தொடங்கி, னகர ஒற்றின் முடியும் திருக்குறள், அகரத்தில் தொடங்கி னகர வொற்றில் முடியும் தமிழின் அரிச்சுவடியை நினைவூட்டுகின்றது.

இறைவனை வணங்குதல் வேண்டும் என்று தம் திருக்குறளைத் தொடங்கும் திருவள்ளுவர், வான்சிறப்பு, நீத்தார் பெருமை கூறி, அறன் வலியுறுத்தக் காணலாம். பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங் கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகியதே அறமாகும் என்பதனை,

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

—அறன் வலியுறுத்தல்; 35

என்றும், அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதவை என்பதனை,

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

—அறன்வலியுறுத்தல்; 40

என்றும், குறிப்பிட்டுள்ளதிலிருந்து திருவள்ளுவர் பெருமான் அறத்தைச் சிறக்க வலியுறுத்தியுள்ள செம்மையினைக் காணலாம்.

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப் பட்டது இல்வாழ்க்கையே ஆகும் அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும் என்பதனை,

அறனெனப் பட்டதெ இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

—இல்வாழ்க்கை 49

என்று, குறிப்பிட்டுள்ளதிலிருந்து 'இல் வாழ்க்கை என்பதற்குத் திருவள்ளுவர் தரும் இன்றியமையாமை தெற்றெனப் புலனா கின்றது. வாழ்க்கைத் துணைநலம், மக்கட் பேறு, அன்புடைமை, விருந்தோம்பல் முதலியன திருவள்ளுவர் அடுத்துப் புகலும் வாழ்க்கை நிலைகளாகும்.

கற்புநெறியில் தன்னையும் காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் என்றும், பெறத் தகுந்த பேறுகளில், அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர, மற்ற பேறுகள் அவ்வளவு மதிப்புடையன அல்ல என்றும், அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பு, அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும் என்றும், தன்னை நோக்கவரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை, துன்பத்தால் வருந்திக்கெட்டுப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

—வாழ்க்கைத் துணைநலம்: 56

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

—மக்கட்பேறு: 61

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

—அன்புடைமை: 80

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

—விருந்தோம்பல்: 83

ஆகிய குறள்கள் திருவள்ளுவர் தெளிவுறுத்தும் வாழ்க்கையைச் செப்புவனவாகும்.

இனி, வளமான வாழ்க்கைக்கு வள்ளுவர் காட்டும் வழிமுறைகளைக் காண்போம். எல்லார்க்கும் இனியனவே கூறும் பண்பு வாழ்க்கையின் வெற்றிக்கு உறுதுணை சேர்க்கும் என்பது திருவள்ளுவர் துணிபு. வணக்கம் உடையவனாய், இன்சொல் வழங்குபவனாய், ஒருவன் இருத்தலே அவனுக்கு அணிகலனாக அமையும். மற்ற பிற அணிகள் அவ்வாறு அமைதல் இல்லை என்பதனை,

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

—இனியவை கூறல்: 95

என்றும், எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிடப்பிழைக்க வழி உண்டு, ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை என்பதனை,

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு

—செய்ந்நன்றி அறிதல்: 119

என்றும், தீமை பயக்காமல் நன்மையே தருவ தானாலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும் என்பதனை,

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

—நடுவுநிலைமை: 113

என்றும், காக்கவேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்கவேண்டும். காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர் என்பதனை,

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

—அடக்கமுடைமை: 127

என்றும் வருவன தெய்வப் புலவர் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள வழிகாட்டும் வரன்முறைகளாகும்.

ஒருவன் ஒழுக்கமுடையவனாய் இருத்தல், பிறன்மனைவியை விரும்பாதிருத்தல், பொறைமையுடையவனாய் இருத்தல், பொறாமையுடையவனாய் இல்லாதிருத்தல், பிறர் பொருளைவிரும்பாதிருத்தல் பயனற்றசொற்களைச் சொல்லாமலிருத்தல் ஆகியன வளமான நலமான வாழ்க்கைக்கு வழிகாட்டும் வள்ளுவரின் சிறந்த கருத்துக்களாகும்.

ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையை வழங்குவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்பட வேண்டும் என்பதனை,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

—ஒழுக்கமுடைமை: 131

என்றும், கடல்சூழ்ந்த உலகத்தில் நன்மைக்கு உரியவர் யார் என்றால், பிறனுக்கு உரிமையானவளின் தோளைப் பொருந்தாதவரே அவர் என்பதனை,

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார்

—பிறனில் விழையாமை: 149

என்றும், தகுதி அல்லாதவைகளைத் தனக்குப் பிறர் செய்தபோதிலும், அதனால் அவர்க்கு வரும் துன்பத்திற்காக நொந்து, அறம் அல்லாதவைகளைச் செய்யாதிருத்தல் நல்லது என்பதை,

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

—பொறையுடைமை: 151

என்றும், ஒருவன் தன்நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு போற்றவேண்டும் என்பதனை,

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு

—அழுக்காறாமை: 161

என்றும், அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர் நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறம் அல்லாதவற்றைச் செய்யார் என்பதை,

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

—வெஃகாமை: 171

என்றும், அயலாருடைய குற்றத்தைக் காண்பதுபோல் தம் குற்றத்தையும் காண வல்லவரானால், நிலைபெற்ற உயிர்வாழ்க்கைத் துன்பம் உண்டோ என்பதை,

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

—புறங்கூறாமை: 190

என்றும், சொற்களிற் பயனுடைய சொற்களை மட்டும் சொல்லவேண்டும் பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவே கூடாது என்பதை,

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

—பயனிலா சொல்லாமை: 200

என்றும் குறிப்பிடும் மணிமொழிகள் நினைக்கத்தக்கனவாகும்.

ஒருவன் தீயசெயல்களைச் செய்வானேயானால் அச்செயல்கள் பிறர்க்குத் தீமையே பயக்கும் அத்தீய செயல்கள் தீயைவிடக் கொடியனவாகக் கருதி அஞ்சப்படும் என்றும், பிறருக்கு உதவிசெய்து வாழும் ஒப்புரவைப் போல நல்லனவாகிய வேறு அறப்பகுதிகளைத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது என்றும், வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே கொடை ஈகை எனப்படுவது மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக்கொடுக்கும் தன்மையுடையது என்றும், உயர்ந்த புகழன்றி இவ்வுலகத்தில் ஒப்பற்ற பொருளாக அழியாமல் நிலைநிற்கவல்லது வேறொன்று

இல்லை என்றும், பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறு போல, உயிர்களிடத்தில் அருள் இல்லாத வர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம் என்றும், ஒருயிரையும் கொல்லாமல், புலால் உண்ணாமல் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்றும், துறந்தவர்களுக்கு உணவு முதலியவை கொடுத்து உதவவேண்டும் என விரும்பி மற்றவர்கள் இல்லறத்தினர் தவம் செய்தவை மறந்தார்களோ என்றும், கிடைத்ததைப் பகுத்துக்கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலால் தொகுத்த அறங்கள் எல்லா வற்றிலும் தலையான அறமாகும் என்றும் குறிப்பிடும் கருத்துக்களை உள்ளடக்கிய குறள் மணிமொழிகள் வழிகாட்டும் வள்ளுவரின் சீரிய சிந்தனையில் விளைவாகப் பெற்றவை யன்றோ!

திருவள்ளுவர் காட்டும் பொருளதிகாரம் நாட்டு வாழ்க்கையில் பல்வேறு நிலைகளைப் படம்பிடித்துக்காட்டும் போக்கில் அமைந் திருக்கக் காணலாம்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

—இறைமாட்சி: 385

என்னும் குறள், பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருள் களைச் சேர்த்தலும், அப் பொருள்களைக் காத்தலும், அவ்வாறு காத்த பொருள்களை வகுத்துச் செலவு செய்தலும் அரசனுடைய தொழில்கள் என்று கூறி நிற்கிறது. இறை மாட்சியினை அடுத்துக் கல்வியின் சிறப் பினை வள்ளுவர் பெருமான் வகையுற எடுத்துமொழிகின்றார்.

திருவள்ளுவர் ஆண்கள் மட்டுமே கற்று அமையவேண்டும் என்று குறிப்பிடாமல், ஆண் பெண் அனைவரும் கற்றுத்தேற வேண்டும் என்ற கருத்தில், கற்றவர் க்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும் ஊராகும் ஆகையால், ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்? என்ற கருத்தில்,

யாதானும் நாடாமால் ஊராமால்என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு

—கல்வி: 397

என்று குறிப்பிட்டுள்ளது. இம்மண்ணிற் பிறந்த அனைவரும் கல்வி கற்றுத் தேர்ச்சி பெறல் இன்றியமையாதது என்று திரு வள்ளுவர் கருதியதைப் புலப்படுத்தும்.

கல்லாமை நீக்கி, கேள்விச் செல்வம் பெற்று, அறிவுடைமையுடன் ஆன்ற செயல்கள் செய்யவேண்டும் என்பது வள்ளுவரின் நோக்கங்களாகும். குற்றங் கடிந்து, பெரியாரைத் துணைக்கொண்டு, சிற்றினம் சேராமல், தெரிந்து செயல் வகையுடன் மாற்றான் வலியறிந்து, தனக் காகும் காலம் அறிந்து இடன் அறிந்து, தெரிந்து தெளிந்து, விளையாடி, சுற்றும் தழுவி வாழவேண்டும் என்பதும் வள்ளுவர் உணர்த்தும் வாழ்க்கை நெறிகளாகும். ஊக்கமிகுதியோடு, சோம்பலின்றி, ஆள் வினை மேற்கொண்டு, துன்பம் வந்தபொழுது சோர்ந்துவிடாமல், இன்பம் வருங்காலை இறுமாந்துவிடாமல், சொல்வன்மையுடன் வினைத்தூய்மையுடனும், வினைத்திட்பத் துடனும், வினைசெயல் வினையினில் ஈடுபடவேண்டும் என்பதையும் வள்ளுவர் வலியுறுத்துகின்றார். குறிப்பறிந்து, அவை யறிந்து அவை அஞ்சாமல் பெரியாரைப் பிழைத்தலால் வரும் கேட்டினையும், பெண் வழிச் சேறலால் வரும் புகழின்மையினையும், வரைவின் மகளிர் தோள் தோய்தலால் வரும் பிழையினையும், கள்ளுண்டு களித்தலில் புன்மையினையும், சூதின் இழிதகைமை யினையும், அடுத்துத் திட்ப நுட்பஞ் செறியக் குறிப்பட்டுள்ளார்.

வாழ்க்கைக்கு வழிகாட்டலில் திரு வள்ளுவர் குறிப்பிடும் 'மருந்து' அதிகாரம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிப் பிறகு தக்க அளவு உண்டால், உடம் பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை என்பதனை,

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது
அற்றது போற்றி உணின்

—மருந்து: 942

என்ற குறள்கள் வரிகள் வழிக்குறிப்பிட் டிருப்பதும் நடைமுறை வாழ்க்கையின் மேம் பாட்டிற்கு உதவுவன அன்றோ!

"திருக்குறள், ஒவ்வொருவருக் கும் ஒவ்வொரு விதமாகக் கூறும் அற நூல்களைப் போல் அமை யாமல், எவர்க்கும் ஒரு படித்தாய் அவ்வறங்களைத் திண்ணிதின் விளக்க வல்லது. ஆதலின் தமிழ் மக்கள் இந் நூலைப் பலவகை யிலும் போற்றக் கடவர்".

—அறிஞர் கா. நமச்சிவாய முதலியார்

# உலகின் முதல் சமூகவியல் அறிஞர் தொல்காப்பியர்

–டாக்டர் சி.இ. மறைமலை

**சமூகவியல் பொருள் விளக்கம்**

மனிதன் கூடி வாழும் வாழ்வு முறையே சமூகம். அல்லது சமு தாயம் அல்லது குமுகாயம் என்று அழைக்கப்படும் கூட்ட மைப்பை உருவாக்குகிறது உணவு, பொருள்நுகர்வு, வாழ்க்கை வசதிகள், பாதுகாப்பு ஆகிய தேவைகளுக்காக மனிதர்கள் ஒருவரையொருவர் சார்ந்தே வாழ்ந்து வருகின்றனர். இத் தகைய சார்புநிலையே சமு தாயத்தை உருவாக்குகின்றது. அங்ஙனம் உருவாகிய சமூகக் குழுக்கள் நிலைபெற்றுத் திகழ் வதற்குக் குடும்பம், அரசு, சமயம் முதலிய சமூக நிறுவனங்கள் வலுவான அடித்தளமாக விளங் குகின்றன.

சமூகவியல் என்பது மனிதர் களிடையேயான பலவேறு உறவு முறைகளை ஆய்கிறது. சமூக ஒழுங்கு முறைகளையும் ஒழுங் கற்ற நிலையினையும் விளக்க முனைகின்றது. மானிட உறவுகள் குறித்து ஆயும் சமூக அறிவிய லாகத் திகழும் சமூகவியல் ஏனைய சமூக அறிவியல் துறைகள் ஆகிய பொருளா தாரம், அரசியல், வரலாறு, நிலவியல், உளவியல், மானிட வியல் ஆகியவற்றையும் பயன் படுத்திக் கொள்கிறது. தனி மனிதனும் சமுதாய ஊடாட்டமும் சமூக நிறுவனங்கள். சமுதாயம் மாறிவரும் நிலை ஆகியவற்றைச் சமூகவியல் விளக்குகிறது.

இன்றைய சமூகவியலின் முன் னோடிகளாகக் கருதப்பெறுவர் மூவர் ஆவர். அவர்கள் ஆகஸ்டு கோம்தே *(1798-1857)*, ஹெர் பர்ட்டு ஸ்பென்சர் *(1820-1903)*, காரல் மார்க்சு *(1818-1883)* என்னும் மூன்று புகழ்பெற்ற சிந்தனை யாளர்கள் ஆவர்.

ஆகஸ்டு கோம்தே முதல் சமூக வியலாளர் அல்லது முன் னோடிச் சமூகவியலாளர் என்று போற்றப்படுகிறார். பருப்பொரு ளாகத் திகழும் அண்டப் பெருவெளி குறிப்பிட்ட சில பருப்பொருள் விதிகளால் பௌதிகவிதிகளால் இயக்கப் பட்டு வருவதைப் போலவே சமுதாய அமைப்பும் குறிப்பிட்ட சில சமூக விதிகளால் இயக் கப்பட்டு வருகின்றது என அவர் கருதினார். எடுத்துக்காட்டாகக் கூறவேண்டுமென்றால், எல்லாச் சமூக அமைப்புகளும் ஒரே தன்மையான வளர்ச்சிக் கட்டங் களைத் தாண்டி வந்தே வளர்ச்சி பெறுகின்றன என்பதே அவரது கருத்தாகும். தொடக்கக் காலச் சமூகவியலாளர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு இத்தகைய சமூகப் படிநிலை வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கும் கோட்பாடுகளை கண்டறிய முனைந்தனர்.

ஹெர்பர்ட்டு ஸ்பென்ஸர் “சமூகவியல் கோட்பாடுகள்” என்னும் மூன்று தொகுதிகளாய் அமைந்த தமது நூலை *1807*-ஆம் ஆண்டு வெளியிட்டார். தமது நூலில் அவர் சமூகவியலை ஓர் அறிவியலாகக் குறிப்பிட்டார். குடும்பம், அரசியல், சமயம், சமூகக் கட்டுப்பாடு, தொழில் அல்லது வேலை ஆகியவை குறித்த ஆய்வியலாகச் சமூக வியலை அடையாளம் காட்டி னார்.

சமூகவியலின் மிகப் பெரும் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த கார்ல் மார்க்சு தமது புரட்சிகரமான கருத்துக்களால் உலகையே உலுக்கினார். பிர டெரிக் எங்கல்சு *(1820-1895)* என்னும் தமது தோழருடன் இணைந்து மார்க்சு பரப்பிய கருத்துக்கள் இன்றைய அர சியலை மாற்றி அமைப்பதற்கும் பெருந்துணை பயந்தன.

இம்மூவர்க்கும் பின்னதாக எமிலி துர்க்கெய்ம் *(1858-1917)* மேக்சு வேபர் *(1864-1920)* ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஒரே காலகட்டத்தைச் சார்ந்தவர்களாயினும் இவ்விருவரும் ஒருவரது நூலை மற்றவர் படிக்காமலேயே தமது கருத்துக்களைத் தன்னிச்சையாக வழங்கினர்.

தற்கொலை, சமயம், கல்வி, ஆகியவை குறித்த ஒப்பீட்டுப் பணிகளால் துர்க்கெய்ம் புகழ் பெற்றார். சமயம், பொருளியல், வாழ்வின் பல்வேறு கூறுகள் செல்வம், தொழிற்பாகுபாடு, அரசியல் அமைப்பு முறையையும் அதிகாரப் பேறும் வகுப்பு, சாதி, நகரம், இசை ஆகியன குறித்து விரிவாக எழுதினார் வேபர்.

இத்தகைய முன்னோடி முயற்சிகளின் விளைவாக முகிழ்த்த சமூகவியல் மனித இனத்தின் சிந்தனை வளர்ச்சியாலும் தொடர்ந்த ஆய்வினாலும் மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது. பல்வகை ஆய்வுகளின் விளைவாக அறிவின் சமூகவியல், சமயத்தின் சமூகவியல், தொழிலியற் சமூகவியல் எனத் தோன்றிய பல நுணுக்கம் வாய்ந்த பிரிவுகள் இன்றைய சமூகவியலைச் செழிமைப் படுத்துவனவாகும். இவற்றுள் நமக்குப் பெரிதும் தொடர்புடையது இலக்கியத்தில் சமூகவியல் அல்லது இலக்கியச் சமூகவியல் ஆகும்.

**இலக்கியச் சமூகவியல்**

சமூகவியல் அணுகுமுறை செல்வாக்கும் பெறுவதற்கு முன்னர் இலக்கியத் திறனாய்வாளர் இலக்கியத்தைத் தன்னிறைவு பெற்ற ஒன்றாகவே எண்ணி வந்தனர்.

இலக்கியப் படைப்புகளை அவற்றின் கட்டமைப்பு கற்பனை, உவமை, உருவகம், ஒலிநயம், பண்பமைவு அவற்றின் கருப்பொருளில் பொதிந்துள்ள எழுச்சி முதலியவற்றைக் கொண்டே மதிப்பிட வேண்டும் என மரபுவழித் திறனாய்வினர் கருதிவந்தனர். நூலின் மூலத்தினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அதனுள் பொதிந்திருக்கும் இலக்கிய அணிநலன்களை எடுத்து விளக்குதலே திறனாய்வு எனக் கருதுவோர். நூலுக்குப் புறத்தே அமைந்த சமுதாயச் சூழல், அரசியல் போராட்டங்கள் போன்ற பிறவற்றை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களை மதிப்பீடு செய்வதனால் இன்னும் புதிய விளக்கங்களைப் பெறலாம் என்னும் கருத்தினை ஏற்க மறுப்பர்.

**பொம்மலாட்டத்திற்கு ஒரு தஞ்சை!**

**தமிழ்நாட்டில் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அரிய கலையாகிய பொம்மலாட்டக் கலை, தஞ்சை மாவட்டத்தில்தான் இருக்கிறது. 1970-ஆம் ஆண்டில் லக்னோவில் நடைபெற்ற அகில இந்தியப் பொம்மலாட்டப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கணநாதர் பொம்மை நாடகச் சபை, மாயூரத்தைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.**

நூலுக்குப் புறத்தே அதன் தொடர்பாக அமைந்துள்ள செய்திகளைக் கொண்டு ஆய்வு நிகழ்த்தும் அணுகுமுறைகளில் சமூகவியல் அணுகுமுறையும் ஒன்று. சமூகவியல் அணுகுமுறையினால் இலக்கியத்தைப் பற்றி புதிய விளக்கத்தைப் பெறலாம் என்பது மட்டுமன்று. இத்தகைய அணுகுமுறையின் துணையில்லாமல் எந்த இலக்கியத்தையும் முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாது என்பதே இற்றை அறிஞர் தம் முடிவாகும். இத்தகைய அணுகுமுறை இலக்கியச் சமூகவியல் என அழைக்கப் பெறுகிறது.

மெய்ப்பொருளியல், வரலாறு, அரசியல் ஆகிய துறைகளில் புலமை பெற்றவராய் திகழ்ந்த தெயின் என்பவரே இலக்கியச் சமூகவியலின் தந்தை எனப் போற்றப்படுகிறார். சமூகவியலின் முன்னோடியாக முன்னர் குறிக்கப்பெற்ற ஆகஸ்டு கோம்தே என்னும் அறிஞரின் வழி நின்றே தெயின் சமூக அறிவியல் அடிப்படையிலான இலக்கிய ஆய்வுக் கலைக் கண்ணோட்டத்தை உருவாக்கினார். தமது ஆங்கில இலக்கிய வரலாற்று நூலின் முன்னுரையில் "இலக்கியப் படைப்பு ஒரு தனி மனிதனது கற்பனையினால் மட்டும் விளைவதன்று. சமகாலப் பழக்க வழக்கங்களின் கல்வெட்டாக வழங்குவது இலக்கியம் ஆகும்" என்று தெயின் குறிப்பிடுகிறார்.

சமுதாயம், நிகழ்காலம், சூழ்நிலை என்னும் இம்மூன்றும் எல்லா வகையான இயக்கங்களுக்கும் அடிப்படைக் காரணங்களாக விளங்குகிறது என்பதே தெயின் கோட்பாடாகும். இம்மூன்றும் சேர்ந்து உருவாக்குவதே மனக் கட்டமைப்பு எனவும் இக்கட்டமைப்பே புதிய எண்ணங்களில் தோற்றுவாயாக விளங்குகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். இந்த எண்ணங்கள் அவை தோன்றிய நூற்றாண்டைச் சார்ந்தவையாக விளங்கி, புகழ்மிக்க கலையிலும், இலக்கியத்திலும், இடம்பெறுகின்றன என்று தெயின் ஆய்ந்தறிந்தார். இலக்கியச் சமூகவியலில் தெயினின் கோட்பாடே முதன்மை வாய்ந்த முழுமையான கோட்பாடாகும்.

அவரது ஆய்வின் அடிப்படை அலகுகளாக விளங்கியவை சமுதாயம், காலச்சூழல், வாழ்வியல் சூழல் என்பதனை மனத்திற்கொண்டு தொல்

காப்பியத்தைக் கற்க வியலுவோர் தொல்காப்பியாரின் சமூகவியல் அணுகுமுறையை எளிதில் புரிந்துகொள்ள இயலும்.

### தொல்காப்பியரின் அணுகுமுறை

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், ஆகிய இரு அதிகாரங்களிலும் தமிழ்மொழியை ஆய்ந்து இலக்கணம் கூறிய தொல்காப்பியர் பொருளதிகாரம் என்னும் அதிகாரத்தின் மூலம் தமிழ் வாழ்வைப் புலப்படுத்தும் இலக்கியத்தையும் தமிழர் வாழ்வியலையும் ஆய்ந்து இலக்கணம் வகுத்துள்ளார். தொல்காப்பியப் பேரறிஞர் டாக்டர் சி. இலக்குவனார் தமது ஆங்கில ஆய்வு நூலில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை "இலக்கிய அறிவியல்" என்று குறிப்பிடுகிறார். தமிழ் நாட்டின் நிலப்பரப்பு, தமிழ் நாட்டின் மக்கள், சமூகம், சமயம், அரசியல் ஆகியவை பற்றிய செய்திகளைத் தொகுத்தளிக்கும் சமூகவியற் கலைக்களஞ்சியமாகத் தொல்காப்பியம் விளங்குவதனைத் தமது ஆய்வு நூலில் பல சான்றுகளின் மூலம் விளக்குகிறார் இலக்குனார். குடும்பம், திருமணம், மக்கட் பேறு, கல்வி, பொழுதுபோக்குகள், சடங்குகள், கணவன்ன அல்லது மனைவியை இழந்தோர் சமூகத்தில்பெறும் நிலை, பல்வேறு வகுப்புகள் சமூகத்தில்பெறும் நிலை, மாதம், ஆண்டு என்னும் காலப் பகுப்புகள், முகத்தலளவை, நிறுத்தலளவை முறைகள், நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள், சமயம் மற்றும் மெய்யுணர்வாளர்கள், அரசியல், படை, படைக்கருவிகள், போர்ப் பாசறைகள், போர்முறைகள் ஆகியவை தொடர்பான சமூகவியற் செய்திகளைத் தொல்காப்பியம் புலப்படுத்தும் நெறியைத் தமது ஆய்வில் விரிவாக விளக்கியுள்ளார் இலக்குவனார். அவற்றை மீண்டும் இங்குத் தொகுத்தளித்தல் இக்கட்டுரையின் நோக்கமன்று. ஆனால், தொல்காப்பியத்தைச் சமூகவியல் நோக்கில் ஆய்ந்த முதல் ஆய்வு இலக்குவனாரின் ஆங்கில ஆய்வு என்பதனைச் சுட்டாமல் சென்றால் இக்கட்டுரை முழுமை பெறாது. தொல்காப்பியத்தின் வழிநின்று அறியக்கிடக்கும் தமிழர் சமுதாயம் மிகவும் உயர்ந்த நாகரிகச் சிறப்புடைய சமுதாயம் என்பதனை மேற்குறிப்பிட்ட செய்திகளைத் தக்க அகச்சான்றுகளுடனும் வரலாற்றறிஞர்தம் புறச்சான்றுகளுடனும் விளக்கிக் கூறும் தமது நோக்கத்தைத் திறம்பட நிறைவேற்றியுள்ளார் இலக்குவனார்.

> **மொத்தத்தில் பாதி!**
>
> **தெய்வ மணம் பரப்பும் திருக்கோயில்கள் தஞ்சை மாவட்டத்தில் ஏராளம்! ஏராளம்! சின்னஞ்சிறிய ஊர்களிலும், விண்ணைமுட்டும் கோபுரங்களுடன் கூடிய கோயில்கள் இருக்கின்றன. அக்கோயில்கள் பாடல் பெற்றவையாகவும், கலையழகு மிக்கவையாகவும் உள்ளன. தமிழ்நாட்டில் இருக்கும் கோயில்களில் பாதி தஞ்சை மாவட்டத்தில் உள்ளன.**

இக்கட்டுரையின் நோக்கம், ஒரு பானைக்கு ஒரு சோற்றுப் பதமாக, இவற்றைச் சமூகவியல் நெறிநின்று, தொல்காப்பியரின் சீரிய சமூகவியல் அணுகுமுறையை விளக்குதலேயாகும்.

### தொல்காப்பியர் கண்ட இலக்கியச் சமூகவியல்

இலக்கியச் சமூகவியலின் தந்தை என்று போற்றப்படும் தெயின் தமது இலக்கிய ஆய்வின் அடிப்படை அலகுகளாக, சமுதாயம், வாழ்வியற்சூழல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இவற்றுள் காலச்சூழல் என்பது தொல்காப்பியம் காட்டும் முதற்பொருளிலும், சமுதாயம், வாழ்வியற்சூழல் ஆகியவை கருப்பொருளிலும் அடங்கும். அதன்பின் தொல்காப்பியர் வகுத்துள்ள உரிப் பொருளுக்கு இணையான வகைப்பாட்டைத் தெயினின் விளக்கத்தில் காண இயலாது.

மேலும், தொல்காப்பியர் தமது கருப்பொருள் பற்றிய விளக்கத்தை முடிந்த முடிவாகக் கூறிவிடாமல் மேலும் பல செய்திகள் தொடரக் கூடிய தலைமையதாகக் கூறுகிறார்.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"
(தொல் பொருள் - 964)

என்னும் இந்நூற்பா முன்னோர் வழிபட்டதாக அதே வேளையில் "அவ்வகை பிறவும்" என்னும் தொடரால் பிந்தைய வளர்ச்சிக்கும் வழிவகுப்பதாக அமைந்துள்ளது. இப்பகுப்பை மேலும் வகைப்படுத்தினால் ஏனைய அறிவுரைகளின் வளர்ச்சியையும் காணலாம்.

தெய்வம் - மெய்ப்பொருண்மையியல் (தத்துவம்)

உணா, செய்தி- (தொழில்) பொருளாதாரம்

மா, மரம், புள் - உயிரியல்.
பறை, யாழின் பகுதி இசையியல்.

இங்ஙனம் பல்வேறு அறிதுறைகள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே வளர்ச்சி பெற்றிருந்தமையால்தான் கருப்பொருள் பற்றிய இந் நூற்பாவைத் தொல்காப்பியர் வகுத்தளிக்க முடிந்தது.

## இற்றைச் சமூகவியலும் தொல்காப்பியமும்

இற்றைச் சமூகவியலாளர் வழங்கியுள்ள பல்வேறு சமூக வியல் விளக்கங்களையும் வரையறைகளையும் அடிப்படை யாகக் கொண்டு தொல்காப் பியத்தைக் காணும்பொழுது தொல்காப்பியரின் நுண்மாண் நுழைபுலம் தெள்ளிதிற் புல னாகும். எடுத்துக்காட்டாகச் சில வற்றைக் காண்போம்.

### 1. பண்பாடு

பண்பாடு என்பது ஒரு சமூகக் குழுவிற்குள் தலைமுறை தலை முறையாகப் பின்பற்றப்பட்டு வரும் எண்ணங்கள், விழு மியங்கள், நம்பிக்கைகள், அறிவு ஆகியவற்றின் தொகுமொத்த அமைப்பைக் குறிப்பதாகும். தொல்காப்பியப் பொருள திகாரம் முழுமையும் பழந்தமிழர் பண்பாட்டை விளக்கும் கருத்துக் கருவூலமாக விளங்குகிறது என் றும் சில சான்றுகள் இங்குக் குறிப்பட்டுள்ளன.

"பெருமையும் உரனும் ஆடூமேன
தொல் - பொருள் - 1044

என ஆடவர் இயல்பையும்,

"அச்சமும் நாணும் மடனும்
முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய
என்ப"
தொல் - பொருள் - 1045

எனப் பெண்டிர் இயல்பு பற்றியும் வழிவழிப் போற்றப் பட்டுவந்த சமூக எதிர்பார்ப் புகள் கூறப்படுகின்றன. மேலும் 'இங்ஙனம் செய்தல் தகாது' என வழிவழியாகப் பேணிக்காக்க வேண்டிய விலக்குகளைக் குறித் தும் தொல்காப்பியர் கூறியுள் ளார்.

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு
இல்லை'
தொல் - பொருள் - 980

"எத்திணை மருங்கினும் மகடூஉ
மடல்மேல்
பொற்புடை நெறிமை
இன்மையான"
தொல் - பொருள் - 981

என்பன அவற்றுள் சிலவாகும். சமுதாய அமைப்பைக் கட்டிக் காக்க இத்தகைய விலக்குகள் காலந்தோறும் தேவைப்படு கின்றன.

"உயிரினும் சிறந்தன்று நாணே
நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்
சிறந்தன்று"
தொல் - பொருள் - 1059

என வழிவழியாகப் போற்றப் பட்டு வந்த விழுமியங்களையும் தொல்காப்பியர் எடுத்துரைத் தலைக் காணலாம். மேலும் விரிச்சி கேட்டல் (நூற்பா.1004), வேலன் வெறியாட்டு (நூற்பா.1006) என்னும் வழிவழி நம்பிக்கை களும் சுட்டப்பட்டுள்ளன. பேய் (நூ.1025) முதலான வழிவழி அச்சமும் மறைவின்றிக் கூறப் பட்டுள்ளது.

### 2. பிறழ்ச்சியும் கட்டுப்பாடும்

பிறழ்ச்சி என்பது ஒரு மனிதன் தான்சார்ந்துள்ள சமூகக் குழு வின் அல்லது சமுதாயத்தின் ஒழுக்க நியதிகளை மீறும் நடத்தை முறையாகும். இப் பிறழ்ச்சி நடத்தைப் பிறழ்ச்சி, பழக்கப் பிறழ்ச்சி, உளவியல் பிறழ்ச்சி, பண்பாட்டுப் பிறழ்ச்சி எனப்பல வகைப்படும்.

இப்பிறழ்ச்சிகளைக் கண்டறிந்து இவற்றைக் களையும் நோக்குடன் அறநெறியாளர் அறிவுரை கூறிச் சமுதாயத்தைக் காப்பாற்ற முனைகின்றனர்.

பரத்தைமை ஒழுக்கம் நடத் தைப் பிறழ்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும். "அடங்கா ஒழுக் கம்", "கொடுமை ஒழுக்கம்" என்று இப்பிறழ்ச்சியைக் கடிந் துரைக்கும் தொல்காப்பியர் இங்ஙனம் பிறழ்ந்து செல்லும் தலைவனைத் திருத்துவதற்குத் தலைவிக்கும் தோழிக்கும் முழு மையான உரிமையை வழங் குகிறார். பெண்டிர் கடற்பயணம் செல்லுதலும் மடலேறுதலும் பண்பாட்டுப் பிறழ்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இத் தகைய பிறழ்ச்சிகளையும் சுட்டிக் காட்டத் தவறாத தொல் காப்பியர் பண்பாட்டுப் பிறழ்ச்சி களைத் தவிர்க்கும் வகையில் சடங்குகள் நிறுவப் பெற்றதனை.

"பொய்யும் வழுவும் தோன்றிய
பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"
தொல் - பொருள் - 1091

என்னும் நூற்பாவின்மூலம் விளக்குகிறார்.

மெய்ப்பாட்டியலில் காமக் குறிப்பு ஆகாதன எனத் தொல் காப்பியர் விலக்கும்,

"நிம்பிரி, கொடுமை,
வியப்பொடு, புறமொழி,
வன்சொல், பொச்சாப்பு,
மடிமையொடு, குடிமை,
இன்புறல், ஏழைமை, மறப்போடு,
ஒப்புமை"
(நூற்பா. 1220)

ஆகியவை உளவியற் பிறழ்ச் சிகள் எனக் குறிப்பிடத்தக்கன.

**கம்பன் பிறந்ததும் தஞ்சை மாவட்டமே!**

**"கம்பன் வீட்டுக் கட்டுத் தறி யும் கவிபாடும்" என்ற பழ மொழி, கம்பனின் புலமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. அத்தகைய புலமைமிக்க கம்பர் பிறந்தது தஞ்சை மாவட்டமே! தஞ்சை மாவட்டத்தில் உள்ள தேரழுந்தூரில் கம்பர் பிறந் தார். அவ்வூரில் உள்ள ஆமரு வியப்பன் கோயிலில் கம்பருக் குச் சிலையெடுக்கப்பட்டுள் ளது. அந்த ஊரில் கம்பர்மேடு என்ற பகுதி உள்ளது. அங்கே தான் கம்பர் குடியிருந்ததாகக் கருதப்படுகிறது.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு

தூய
சரிகை






ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

